1411

உ

பாண்டியராஜவம்ச சரித்திரம்.

பகுதி மூன்றில்
இஃது
(முதற்பகுதி)

REGISTRAR OF ...
22 MAR 1926

நூலாசிரியர்:
R. அரிகரமையர்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
தீர்த்தபதி ஹைஸ்கூல்,
அம்பாசமுத்திரம்.

1926.

V21
N28.1

உ

பாண்டியராஜ வம்ச - - சரித்திரம்.

(முதற்பகுதி)

முற்பட்ட பாண்டியர்

இஃது

அம்பாசமுத்திரம், தீர்த்தபதி ஹைஸ்கூல்,

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

மக-ா-ா-ஸ்ரீ

R. அரிகரமையரவர்களால்,

இயற்றப்பெற்று,

தென்காசித் தாலூகா, இலஞ்சி, மிட்டாதார்,

மக-ா-ா-ஸ்ரீ

டி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் குமாரர்,

மக-ா-ா-ஸ்ரீ

I. S. இராமசாமியா பிள்ளை

அவர்களின் பொருளுதவியால்

22 MAR 1926

அம்பாசமுத்திரம்

ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸில், பதிப்பிக்கப்பெற்றது.

1926.

Copy Right Registered]

[விலை அணா 10

ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.
147433

FOREWORD.

I have great pleasure in writing this foreword introducing Pandit Harihara Ayyar's book on the history of the Pandyas. This book may be regarded as an evidence of the growing interest of Indian scholars of the indigenous type in the study of the ancient history of Southern India. Mr. Harihara Ayyar is well known as an able and facile writer of very good Tamil prose; but it is not so well known how much he was closely associated with that brilliant epigraphist, the late Mr. Venkayya in most of his work in the Tinnevelly District. Pandit Harihara Ayyar is pre-eminently fitted by his intimate knowledge of the epigraphical and literary sources of Pandya History to write a book like this.

A careful study of the materials presented in this book shows that the Pandyas were an ancient people with a distinctive civilisation. Most of the Pandya Kings were patrons of learning and culture; and some were themselves poets and men of learning. They undertook various works of public utility. The many temples in the Pandya country with their extensive grants of land testify to the wealth of the Pandyas and the way in which they utilised their resources for the welfare of the country. Though they devoted a greater part of their time to wars and conquests, they do not appear to have neglected the material needs of the country.

The normal form of Government was Monarchy. The King surrounded by his ministers, diplomats, sena-

patis, spies etc. and had his council of ministers. Some of the South Indian inscriptions throw considerable light on the measures taken to asses and collect the revenue, the method of Expenditure, trade and commerce, and the organisation of the civil and military departments, and the details of Village-life and Village-government.

The Pandya Kings strike us as tolerant in matters of religion. We read of no great wars of religion. A remarkable feature of Pandya rule as shown in the pages of this book is the devotion of almost all its Kings to temple-building It is interesting to note that these temples are located on the base of a hill, the bank of a river, the bund of a tank or channel. or on highlands. It appears to have been the practice of these rulers to build temples and found settlements in commemoration of their victories or in memory of their name. In the case of temples built by tributary princes, they seem to have named them after their overlords. We can also find images in stones and in copper of some of the kings who built the temples and ceremonial respect is their right as of present-day trustees at festivals. In those times, temples and temple worship often served as a great incentive to literary and religious outbursts. Witness for instance the *Thevaram*, *Thiruvasakam* and other devotional hymns sung in praise and in the presence of the great deities in temples. The temples were not only a means of cultivating a spirit of devotion but in festival times they served as means of gathering all the villagers in the neighbourhood. Besides being centres of learning, they occasionally served as places of protection in times of trouble. It is difficult to exaggerate the part played

by these temples in developing and sustaining the corporate life in South India in ancient times. It is now a matter of common knowledge that the Pandya country was the land of the Tamil Sangam. One can easily call to mind some of the finest classical works ......*Ettuthogai, Pattipattu, Pathinenkizhkanaku, Chintamani. Silapadikaram, Manimegalai.* As has been mentioned already, some of the Pandya kings were themselves no mean poets. Some recent examples are:– ATHIVIRARAMA PANDYA and VARATHUNGA RAMA PANDYA. The history of the Pandya is replete with instances of state patronage of poets and learned men. One can call to mind the patronage of Mangudi Marudana author of MADURAIKANCHI at the hands of Neduncheliyan; Tirugnanasambandar was treated with great respect by Koon Pandyan; Maduraikavi was the councillor of the Pandyan king Neduncheliyan Parantaka; Vira Pandyan of Tinnevelly patronised the poet Kasikaliyar.

Though Tamil language and literature had attained a high level of excellence during the time of the Pandyas, very few among the people seem to have been literate. This is borne out by certain inscriptions. It is interesting to observe that the people of the Tamil land seem to have used as writing material palm leaves, stones aud copper plates. The Tamil alphabet of old was quite different from later Tamil writing, vattelethu being in vogue for a long time. We find verse rather than prose in some of the inscriptions of the period. Coined money seems to have been rare in those times. This is probably the reason why the kings gave besides gifts of cultivable land, large amounts of coin ('PORKASU'). It is interesting

to read the long list of royal dues under the Pandyas. Men of different occupations seem to have settled in each village. Some kind of professional tax seems to have prevailed We may note, for instance, tax levied from weavers, shepherds and horse-dealers. 'Kadami' 'Pattam' are the terms frequently used. There was the land-tax but little is known of the exact proportion of the land-tax. There are instances of remissions of land-tax in times of scarcity, failure of crops etc.,

These general observations will suffice to show some of the extremely interesting phases of the history of the Pandyas revealed in this work. The author has endeavoured successfully to present in good tamil prose a continuous and very readable narrative of the political and social history of the Pandya kingdom The materials available for the study of the Pandya history have been used by him with considerable caution and judgment. The later history of the Pandyas...... a subject which has not yet been adequately explored is dealt with by the author in greater detail than by any other writer in the field. And the narrative here gains much in force and clarity as the author draws upon a close personal knowledge of the monumental evidence still surviving from the period. All told, this history of the Pandyas is an able production worthy of Pandit Harihara Ayyar's love of our language and country and I have no hesitation in commending the book for use in our schools and colleges.

CHIDAMBARAM, }
17—2—26. }

K. A. Nilakantam,

பாண்டியராஜவம்ச சரித்திரம்.

முதற்பகுதி

முற்பட்ட பாண்டியரின்

அட்டவணை.

பக்கம்.

1. பாண்டியராஜ வம்சோத்பத்தி 1
2. பாண்டியன் வடிம்பலம்பநின்றவன் 3
3. பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி 4
4. பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி 5
5. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் 5
6. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் 7
7. பாண்டியன் கீரன் சாத்தன் 7
8. பாண்டியன் அறிவுடை நம்பி 7
9. பாண்டியன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதி 9
10. பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் 10
11. பாண்டியன் இளஞ்செழியன் 13
12. பாண்டியாதிராஜபரமேஸ்வர பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 14
13. களப்ரர் 19
14. பாண்டியாதி ராஜ கடுங்கோன் 19
15. அதிராஜவர்மன் அவனி சூடாமணி 21
16. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 22
17. பூதப்பாண்டியன் 30
18. அரிகேசரி மாறவர்மன் அல்லது கூன்பாண்டியன் 32
19. பாண்டியன் கோச்சடையன் இரணதீரன் 41
20. அரிகேசரி பராங்குச மாறவர்மன் அல்லது 1-வது இராஜசிம்மன் 44
21. பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன் 48
22. பாண்டியன் 2-வது இராஜசிம்மன் 54
23. பாண்டியன் வரகுண மஹாராஜா 57
24. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லப ஏகவீர பரசக்ர கோலாஹலன் 67
25. பாண்டியன் வரகுண வர்மன் 73
26. பாண்டியன் பராந்தக வீரநாராயண சடையன் 77
27. பாண்டியன் 3-வது இராஜசிம்மன் 79
28. சடையன பராந்தக பாணடியன் 86

உ

பொருளுதவி செய்தோர்.

இந்நூல் நாடெல்லாம் நலமபெறவுலவுறும் வண்ணம் அச்சு வாகனத்தில் ஆரோகணிக்கும்பொருட்டுப் பொருளுதவி செய்த தனவான், தென்காசித் தாலூகா திருக்குற்றால க்ஷேத்திரத்துக்கு வடபாலுள்ள, "இலஞ்சி" என்னும் கிராமத்தில் உயர் தருவாழ்க்கை பெறுகின்றவரான மக-ா-ா-ஸ்ரீ ஐ. எஸ். இராமசாமியா பிள்ளை அவர்களே.

இக்கொடையாளர், மேற்படி ஊர்க்கு வடபாலுள்ள நதியில் (குன்றக்குடிக்குச் செல்லும் மார்க்கத்தில்) கற்பணியிற்சிறந்த ஓர் பாலமும், ஆங்கோர் அணைக்கட்டும், ஸ்ரீ விநாயக மூர்த்தி திருக்கோயிலும், தண்ணீர்ப்பந்தல் மண்டபமும், இன்னும சில சாஸ்வதமான தர்மங்களும் செம்மையுறப் புரிந்து சிறப்புற்றோங்கி விளங்கிக்கொண்டிருக்கும் ஓர் சைவ வேளாளர் குடும்பத்திலுதித்தவரான மக-ா-ா-ஸ்ரீ மிட்டாதார். டி. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் மூன்றாவது புத்திரராவர்.

முன்னோர் ஒழுக்கின் முளையென வளர்ந்த இப்பெருந்தகை யாரும், மேற்படி இலஞ்சி நகரின் கீழ்பாலுள்ள சித்திராநதியின் மேல்கரையில் ஓர் படித்துறையும், அரசும், குறடும், அதற்குமேல் ஒரு தந்திமுகக் கடவுளையும் பிரதிஷ்டித்திருக்கின்றனர். மேற்படி ஊர்க்கு நடுவிலுள்ள, குலசேகரன் என்னும் அதிவீரராமபாண்டியனால் தன்பெயர் விளங்க முன் கட்டப்பட்ட ஸ்ரீ குலசேகரமுடையார் கோயிலை 1088-1089-ம் ஆண்டுகளில் ஜீர்ணோத்தாரணஞ் செய்திருக்கின்றனர். இலஞ்சிக் குமாரர் கோவில் திருமூலத்தானத்துச் சிலா விக்கிரக மூர்த்தியைத் தமது குடும்பத்தாருடன் கலந்து பெருக்கிய செல்வத்தால் அழகுறப் பணிவித்தளித்திருக்கின்றனர். அன்றியும், அவ்விலஞ்சியில் கீழ்தரக்கலாசாலை (மிடில் ஸ்கூல்) ஒன்று தமது பெயரால் நீடூழி நிலவ உறுதிபெறப் பணிசெய்து கொடுத்திருக்கின்றனர். இவையொப்ப இக்காலத்தும் என்னாலெழுதப்பட்டிருக்கின்ற இப் பாண்டியராஜவம்ச சரித்திரத்தையும் அச்சிடுவதற்கு வேண்டும் திரவியங்களை கைம்மாறு கருதாது தந்துதவி. இம்மை மறுமைக்குரிய பயன்களெல்லாவற்றையும் இனிதினெய்துவாராயினர்.

இத்தகைய வண்மையாளரின் சிறப்பும், செல்வமும், வண்மையும், தரும சிந்தனையும், வாழ்க்கையும், மரபும், ஆயுளும் மேன்மேலும் தழைத்தோங்கும்வண்ணம் எல்லாம்வல்ல கடவுளை எப்பொழுதும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்றனம். இங்ஙனம்.

நூலாசிரியர்.

REGISTRAR
OFFICE
22 MAR 1926
MADRAS



இலஞ்சி,

J. S. இராமசாமியாபிள்ளை அவர்கள்.

A. P. A.

முகவுரை.

வெகு புராதனகால முதற்கொண்டே நீர்நிலவளங்களாலும் கல்வி செல்வங்களாலும் பிறவற்றாலும் வட நாடோடொப்பச் சிறப்புற்றோங்கி வந்திருக்கின்ற நாடுகள் தென்பாலதாகிய சேர சோழ பாண்டியநாடுகளேயாம். இத் தமிழ்நாடுகளைப் பண்டைக்காலமுதல் பரிபாலித்துவந்திருக்கின்ற அரசகுலத்தவர் சேர சோழ பாண்டியரே. அவருள் "இங்கு எடுத்துக்கொண்ட பாண்டிய மன்னரது குலத்தொன்மை வேதகாலத்திற்கு இப்பாலும் புராணகாலத்திற்கு அப்பாலும் ஆகலாம்" எனச் சில அறிவாளிகள் துணிந்திருக்கின்றனர். அக்காலத்தையே தலைக்கொண்ட இப்பாண்டிய ராஜவம்சம், இற்றைக்குச் சற்றேறக்குறைய நூற்றெண்பது வருஷங்களுக்கு முன்வரை தலைமுறை தலைமுறையாகத் தழைத்து நீண்டு வந்திருக்கின்றது.

இவ்வாறு வந்த பாண்டிய இராஜகுலாதிபர்கள், பல்லாயிரவராதல்வேண்டும். இவருள் பழைய புராணப்பாண்டியர்கள் பலராவர். இவருக்கிப்பாலுள்ள சில பாண்டிய மன்னர்களை பழமையும் புதுமையுமான நூல்களிலும் சிலாசாஸனங்களிலும் செப்பேடுகளிலும் தென்படாநிற்கின்றனர். இங்ஙனம் தென்படுவாரிற் பலர் சரித்திரங்களையும் என் கைக்குக் கிடைத்த நூல்கள், சாஸனங்கள், சில ஆராய்ச்சி வல்லுநர் வெளியிட்டிருக்கின்ற வியாசமுதலான குறிப்புகள் ஆகிய

இவைகளையே ஆதாரமாகக்கொண்டு மாணவரும் பிறரும் ஊக்கத்தோடு படிப்பதற்கேற்றவாறு சிற்சில இடங்களிற் சரித்திரங்களின் தொடர்ச்சி பொருந்தச் சாஸனக் கருத்துகள் மாறுபடாதபடி உசிதம்போற் சேர்ப்பன சேர்த்து எனது சிற்றறிவுக்கெட்டியவரை ஒருவாறு தொகுத்தெழுதலாயினன்.

வேண்டுமளவு சாஸனங்கள் கிடைக்கப் பெறுமையால் பெருவழுதி, கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி, குறுவழுதி, பாண்டியன்பன்னுடுதந்தான், முடத்திருமாறன், இன்னோரன்ன பாண்டியர் சரித்திரங்களை எழுதாது விட்டனன்.

இந்நூலிற் குற்றங்கள் பல காணக்கூடும். அவைகளை அகற்றி ஆவனசெய்து கைக்கொண்டு அபிமானிப்பது அறிவாளிகளின் கடமையேயாம்.

குறிப்பு.

இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் பாண்டியரை மூன்று பிரிவினராகப் பிரித்துளேன். அவராவர்: முற்பட்டபாண்டியர், இடைப்பட்ட பாண்டியர், பிற்பட்ட பாண்டியர். பூர்வகாலமுதல் கி. பி. 953 வரையுள்ள பாண்டியரை முற்பட்ட பாண்டியரென்றும், அப்பால் கி. பி. 1345 வரையுள்ள பாண்டியரை இடைப்பட்ட பாண்டியரெனவும், பிறகு கி. பி. 1750 வரையுள்ள பாண்டியரைப் பிற்பட்ட பாண்டியரெனவும் அறிந்துகொள்க.

முதற் பகுதி.

பாண்டியராஜ வம்சோத்பத்தி.

ஆதிகாலத்தில் உலகத்திலுள்ளார் தமது உயிரையும் உடைமையையும் காக்கத் தமக்குள் ஓர் பலிஷ்டனைத் தலைவனாகத் தாங்களாகவே யேற்படுத்தி அவனுக்கு ஒரு சிறிது வரிகளையும் நல்கிக்கொண்டு வந்திருக்கவேண்டும். அப்படி யேற்பட்ட தலைவனே அரசனெனமதிக்கப்பெற்றுப் பரம்பரையாக ராஜ்யபரிபாலனஞ்செய்து வந்திருக்கவேண்டும். இப்படி வந்திருக்கும் அரச பரம்பரை பலவற்றுள்ளும் இப் பாண்டிய ராஜபரம்பரையும் ஒன்றாகும்.

இப் பாண்டிமன் குலத்தின் ஆதியைக் கண்டுபிடித்தல் அநாதியான இவ்வுலகத்தின் ஆதியைக் கண்டுபிடித்தலை ஒப்பதன்றி வேறில்லை. இது வாசாமகோசரமே, என்றாலும் இக் குலோத்பத்தியை இதிஹாஸ புராணாதிகளிற்சில, சந்திரனையே ஆதிபுருஷனாகக்கொண்டு பரம்பரைகளை வகுக்கின்றன. வேறு சில, துஷ்யந்தன் தம்பியாகிய திஷ்யந்தன் பௌத்திரனே ஆதி பாண்டியனென்று கூறுகின்றன. சில, பாண்டுவின் வம்சம் என்கின்றன. ஆராய்ச்சிவல்லுநர் சிலர், நாகர், பழயர்

இவர்களின் முதல்வனே ஆதிபாண்டியனெனவும், மற்றும் பலவாறாகவும், ஒருவாறு துணிந்தும் துணியாமலுமாய் வரைந்திருக்கின்றனர். இத்துணிவுகளில் கடைசியாயுள்ள துணிவையே என் மனமும் துணியா நிற்கின்றது. பழயர் என்னும் இப்பெயர் "பழமை" என்னும் பண்படியால் ஆனது; பழமை என்பதின் பொருள் 'பண்டு' என்பது. இப் 'பண்டு' என்னும் சொல்லடியாய்ப் பிறந்த பெயராவது பண்டையர் என்பது. இதுவே பாண்டியர் என ஆயிற்று என்று கொள்வதே தகுதியெனத் தோன்றுகின்றது.

இப் பழயர் என்னும் வகுப்பாளர் ஆதிகாலத்தில் வசித்து வந்த இடமாவது, பண்டைக்காலத்திற் கடலாற் கொள்ளப்பட்டதும், முதல் இரண்டு சங்கம் இருந்ததுமாகிய மதுரையும் கபாடபுரமுமாகும். ஆங்குள்ள அக் குலத்தவரே தம்மைப் பாதுகாக்கும்பொருட்டுத் தமக்குள் ஒருவனை அரசனாக்க, அவனே ஆதி பாண்டியராஜவம்ச முதல்வனாயிருக்க வேண்டுமென்று சொல்லலாம். அரசனாகிய அப்பாண்டியனே குடிகளாற் கொடுக்கப்பட்டுவந்த வரிகளாலும், ஜெனக்கட்டாலும மேன்மையுற்று, பல்வகைச்செல்வமும் பல்கப்பெற்றவனாய் வாழ்ந்திருக்கவேண்டும். பிறகு அவனது சந்ததிகளே முறைப்படி கிரீடாதிபதிகளாய் பாண்டிய ராஜ்யபரிபாலனம் செய்து வந்திருக்கவேண்டும். இப்படி வந்த சந்ததியாரே தமிழ்ச்சங்கங்களை ஸ்தாபித்து ஆதரித்திருக்கின்றனர். இப் பாண்டியர்களால் ஆளப்பட்டுவந்த நாடு 49 என்பர்.

முதலிரண்டு சங்கங்களை ஸ்தாபித்த பாண்டியர்களையும் அங்கிருந்த புலவர்களையும், பிற விஷயங்களையும், இறையனார்

அகப்பொருளுரையிற் கண்டுகொள்க. அத் தமிழ் நாட்டைக் கடல்கொள்ளவே வடக்குநோக்கிப்போந்த ஓர் பாண்டியன் கன்னித்துறைக்கு வடபாலுள்ள சேர சோழர்கட்குட்பட்டிருந்த முத்தூர் குண்டூர்க்கூற்றங்களோடு ஹிமசேதுபரியந்தமுள்ள பல நாடுகளையும் கைக்கொண்டு நீர்நிலவளங்களிற் சிறந்த வைகைநதி தீரத்தில் ஓர் விஸ்தாரமான பட்டணத்தை நிர்மித்து அதற்குப் பழம்பதியின் பெயராகிய 'மதுரை' என்ற பெயரையே கொடுத்து, தலைநகராகக்கொண்டு, கடைச்சங்கத்தையும் அங்கு ஸ்தாபித்தான். இச்சங்கத்தைப் பரிபாலித்து வந்த பாண்டியர்கள் 49 பேராவர். இவர்களிற் கடைசியாவான் உக்கிரப்பெருவழுதி யென்பவன். இவனுடையசந்ததியாவார் பலரும் இவ்வடமதுரையையும் பிற இடங்களையும் ராஜதானியாகக்கொண்டு பல நாடுகளையும் பரிபாலித்து வந்திருக்கின்றனர்.

முற்பட்ட பாண்டியர்.

1-வது

பாண்டியன் வடிம்பலம்பநின்றவன்.

இவன், பாண்டிய ராஜவம்சத்துக்கோர் சிகரம் போன்றவன். ஞானமுங்கல்வியும் செல்வமும் நிறைந்தவன். பெருங்கொடையாளியுமாவன். கடலாற்கொள்ளப்பட்ட பழந்தமிழ் நாட்டில் வடவெல்லையில் "பஃறுளி" என்னும் ஆற்றை ஒழுங்குபடுத்தியவன். ஒரு காலத்தில் கடல் கொந்தளித்துப் பொங்கி மலைபோலுந் திரைகளை வீசிவர, அதற்குச் சிறிதும் அஞ்சாது அவ்வலைகள் தனது பாதத்திற் படிந்து

கழுவிச்செல்லுமாறு இவனின்றமையால் இவனை ஆன்றோர் "முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றவன்" என்றும், "நெடியோன்" எனவும் கூறலாயினர். தெண்ணீர்க்கடல் தெய்வத்துக்குத் திருவிழா எடுத்தபெரியோனுமிவனே யாவன். (புறம்)

2-வது

பாண்டியன் வெள்ளிஅம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி.

இவன், பராக்ரமத்தில் ஆண்சிங்கத்தை ஒத்தவன். பகையரசராகிய பாம்புக்கூட்டங்களை இடியேறுபோல் இளமைப்பருவத்திலேயே அடர்த்தவன். மதுரையையே தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்தியிருக்கின்றான்.

சோளன்குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனோடு நேசங்கொண்டவன். இவ்விருவேந்தருங் கூடியிருந்தபொழுது, காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் இவர்களை நோக்கி "நீங்களிருவரும் நட்புடையராயிருத்தலைப்போல் நலம் வேறில்லை என்றும், இந்நிலையில் நீங்கள் பிரியாதிருப்பீராயின் உலகமுழுவதுமுமது கையகத்ததேயாகும் எனவும், உம்மைப்பிரிக்கச் சூழ்ச்சிசெய்யும் விரோதிகளுடைய மொழிக்கு நீவிர் செவிகொடாதிருத்தல் வேண்டும்" என்றும் பிறவுங்கூறி இவர்களை வாழ்த்தியிருக்கின்றனர். (புறம்)

3-வது

பாண்டியன்கூடகாரத்துத்துஞ்சியமாறன்வழுதி.

இவன்; உலகமுடிவாகுங்காலத்தில் வெளிப்படு நீரையும் நெருப்பையுங் காற்றையும் போன்று பிறரால் தடுக்கமுடியாத கோபத்தைப் போரின்கட் காட்டுபவன். ஒருகாலத்தில் இவன், "தமிழ்நாடு, மூவேந்தருக்கும் உரியது என்பதை நீக்கித்தனக்கே உரியது"எனச்சொல்லும்படிசெய்யப் போருக் கெழுந்தவுடன், சிலஅரசர் இவனைச் சரணடைந்து திறை யளந்து உயிர்பிழைத்தனர் எதிர்த்த வேந்தரோ ஒருபக லளவிற் பொருது இயமனுலகத்தெய்தினர்". என இவனை ஐயூர் முடவனார் என்னும் புலவர் பாடியிருக்கின்றனர்.

மேலுமிவன் வடநாட்டு வேந்தரையும் வென்றதாக, மருதனிளநாகனார் என்னும் புலவர் பாடியிருக்கின்றார். இப்பாடல்கள் புறநானூற்றிலுள.

4-வது

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சியநன்மாறன்.

இவ்வேந்தன், "பலமும் பெருக்கமுமான நால்வகைப் படைகளும் மிக்குள்ளவனாயிருக்கிறோம்" என்று செருக்குற் றிருத்தலை மதுரை மருதனிளநாகனார் என்னும் பெரும்புலவர் தெரிந்து, அவனை நல்வழிப்படுத்த அடுத்து, அவனை நோக்கி, "சிவபிரானது முக்கண்ணினும் முதன்மையான விழியாகிய நெற்றிக்கண்ணேபோல் தமிழ்நாட்டு மூவேந்தரினு முதன்மை பெற்ற நன்மாறனே! அரசர்க்கு மாட்சிமையைத் தருவது படைப்பெருக்கமன்று, அறநெறிதவறாது நடத்தலே. ஆத லால் நீ பக்ஷபாதமில்லாமலும் நீதிகோடாமலும் நற்குணத்தி னின்று மாறுபடாமலும், சூரியனை ஒத்த வீரமும், சந்திரனைப்

போன்ற தண்மையான மேன்மையும், மழையன்ன வண்மையும் உடையவனாய், இல்லாமை என்பது இவ்வுலகத்திலே இல்லையென்று சொல்லும்படி, நெடுங்காலம் வாழ்வாயாக." என அறிவுறுத்தி வாழ்த்தியிருக்கின்றார்.

மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார், காவிரிப்பூம் பட்டினத்துக்காரிக்கண்ணனார் என்னும் இப்புலவர் சிகாமணிகளும் இவனுடைய பராக்ரமத்தைப்பற்றிப் பலவாறுபுகழ்ந்து பாடியிருக்கின்றனர்.

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர், தனக்கு இவ்வேந்தன் பரிசு கொடாது காலதாமதஞ்செய்ய, அதனைப் பொறாத இவர் அவனைப்பார்த்துத் "தன்னாற் கொடுக்கமுடியாததைக் கொடுக்கமுடியுமென்றும், கொடுக்கக்கூடியதை இல்லையென்று மறுத்தலாகிய இவ்விரண்டுவிஷயமும், இரப்போரைத்தவிக்க விடுவதுமன்றி ஈவோர் புகழையு மதிப்பதாகும். நீ என்னிடத்திற்செய்த செய்கையும் அத்தன்மைத்தே" என இப்பாண்டியனை வெறுத்துரைத்து வெளிப்போந்தனர்.

"வடமவண்ணக்கன்பெரியசாத்தனார்" என்னும் வித்வானும் தனக்கு இப்பாண்டியன்செய்த கொடுமையை நினைந்து, இவனைப் பலபடப்புகழ்வதுபோலிகழ்ந்து பாடியிருக்கின்றனர். இந்நான்குபுலவர்களும் பாடியபாட்டுக்கள் புறநானூற்றிலிருக்கின்றன.

பொதுவாய் இப்பாண்டியன் சௌரியவான் என்பதற்கையமில்லை. படைப்பெருக்கமுமிக்குள்ளவனே. "தமிழையும் தமிழ் வித்துவான்களையும் இவன் ஆதரித்துள்ளானோ?" என்பது சந்தேகந்தான், ஈகைக்குணமுமிவனிடத்திலெவ்வளவிலிருந்திருக்குமோ? மனுமுறை தவறாதவனென்று இவனைச் சொல்லலாமா?

5—வது

பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சியநன்மாறன்.

இவ்வரசன் ராஜலக்ஷணமெல்லாம் பொருந்திய வடிவழகன். விரோதிகளைக் கதிரவன்போற் காய்பவன். அன்பரைச் சந்திரனைப்போற் றண்ணளிபுரிந்து ஆதரிப்பவன். சித்திரமாடமென்னுமிடத்திற் காலஞ்சென்றவன். மதுரைக் கூலவாணிகன்சாத்தனார் இவனைப்பாடினர். (புறநானூறு)

6-வது

பாண்டியன் கீரன்சாத்தன்.

இப் பாண்டியனின் பராக்ரமம் மெச்சத்தக்கதே. தம்மிருப்பிடத்திலிருந்து வீரவாதுகள் பேசிக்கொண்டிருக்கும் பகை அரசரைப் போரின்கண்ணெதிர்த்தமராடி, அவர் அஞ்சி முதுகுகாட்டியோடும்பொழுது, தான் அவர்க்கு முன்னோடிச் சென்று அபயம் நல்கி உயிரளிப்பான். தன்னைக்காண வருபவர் எவராயிருந்தாலும், அவர் பசியில்லாதவராயிருந்தாலும் அவர்களை உண்டேதீரவேண்டுமென உபசரிப்பான். இவனுடைய ஆசாரவாசல் யானைக்கூட்டத்தாலும் குதிரைப்பந்திகளாலும் நிரம்பப்பெற்றிருக்கும். இவன் கற்றவரிடத்தில் மிகுதியுமன்புடையவன். இவனைப் பாடியவர் ஆமூர்மூலங்கிழார். (புறநானூறு)

7-வது.

பாண்டியன் அறிவுடைநம்பி.

இப்பாண்டியன் வாழ்ந்த இடம் கால முதலாயின நன்கு விளங்கவில்லை. இவன் ஒருகாலத்தில், செல்வத்தைச்சேர்த்துச் சேமித்தல்வேண்டுமென்ற அவாவினல் தேட்டுக்குரிய

செந்நெறி யறியாது தன்கீழ்க்குடிகளை, இறக்குந்திறையிற் சிறிது கூட்டிக்கொடுக்குமாறுவர்புறுத்த, அது பொறுத குடிஜனங்கள் இதனைப் புலவர் பிசிராந்தையாருக் கறிவிக்க, அப்புலவர்பிரான் இவ்வறிவுடைநம்பியை அடுத்து, நீதிவேந்தர் திறைகொள்ளுமுறையை உதாரணமுகத்தால் விளக்கியிருக்கின்றனர். அப்பாடல் புறநானூற்றிலிருக்கின்றது. அதன் பொருளாவது :—

'செந்நெல்விளை அறுத்து அரிசியாக்கி அட்டுக்கவளங்க வளமாக வுட்கொள்ளின் ஒருமாவினளவிற் குறைந்தநிலத்தில் விளையும் தானியமும் பலநாளைக்குப் போதுமானதாகும். அம் மாவைப்போல் நூறு விளைநிலங்களிருந்தாலும், அதில் ஒரு யானைபுகுந்துண்ணுமாயின் அதன் வாயிற்புகும் நெல்லைப் பார்க்கிலும் அதன் கால்களால் துகைக்கப்படும் கதிர்கள் மிகவும் அதிகமாம். அதுபோல, அறிவுடை அரசன் திறைகொள்ளும் நெறியை அறிந்துகொள்வானாயின் அவன் நாடு நாளடைவிற் கோடிக்கணக்கான திரவியத்தை ஈட்டிக்கொடுத்துத் தானுந் தழைப்பதாகும். இவ்வாறின்றி அரசன் அறிவில்லாதவனாய் அடுத்திருப்பார் ஆசைப்பேச்சைக்கேட்டுக் குடிகளிடத்து அளவுகடந்த திறையைத்தண்ட விரும்புவானாயின், அந்த யானைபுகுந்த புலம்போல் அவன் நாடுங் கெடுவதாகும். தானுமுண்ணப் பெறானவன்.'

இவ்வாறு இப்புலவர் இதைப் போதித்திருக்கின்றார். இதனைக் கேட்ட இவ்வேந்தனும் நல்வழிப்பட்டிருக்கவேண்டும்.

மேலுமிப் பாண்டியன் தமிழை நன்கு கற்றுக் கவிசொல் லும் வல்லமையும் வாய்க்கப்பெற்று, மகப்பேற்றின் மேன்மை விளங்க ஓர் செய்யுள் வரைந்துள்ளான். அதன் பொருள் கீழுள்ளது :—

'அனுபவிக்கத்தகுந்த செல்வங்களெல்லாம் பெற்றிருந்தா லும், குறுகக்குறுக நடந்து சிறிய கையை நீட்டிக் கலத்திலிட் டிருக்கும் நெய்கலந்த சோற்றைத் தரையிலிட்டுக் கூட்டிப் பிசைந்து வாயாற்கவ்வியும் கையாலளைந்தும் உடம்பின்மேற் சிதறிக்கொண்டும் பார்ப்பவர் அறிவை இன்பத்தால் மயக்கு விக்கும் புதல்வரைப் பெறுதார்க்கு இவ்வுலகத்திற் பிறந்த பயனில்லை.' (இப்பாடலும் புறநானூற்றிலுள்ளது.)

8-வது

பாண்டியன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதி.

இவன் கடைச்சங்கக்காலத்திலிருந்த ஓர் பாண்டியன். சோழன் இராயசூயம்வேட்டபெருநற்கிள்ளி, சேரமான்மாவெண் கோ இவர்களுடன் நட்புற்றவன். இந்த மூவரசர்களும் சேர்ந்திருக்கும்பொழுது ஔவையார் இவரைக் கார்கபத்தி யாதி மூன்றக்கினிகளையும் ஒத்துளாரெனப் புகழ்ந்து பாடி யிருக்கின்றனர். இவன் காலத்திற் குறள் நூல் அரங்கேற்றப் பட்டதென்பர். அந்நூலின் பெருமையை 'நான்மறையின் மெய்ப்பொருளை', என்ற பாட்டைப்பாடி இவன் விளக்கியி ருக்கிறுன். அதனல் இவன் தமிழின்மேற் பேரபிமானமும புலமையும் வாய்ந்தவனென் றறியப்படுகிறுன். அகநானூறு தொகுப்பித்தானும் இவனேயாவன்.

இவன் ஒருகாலத்தில் கானப்பேர் (காளையார்கோவில்) என்னுமிடத்தில் பல சிற்றரண்களாலும் அடர்ந்த காடுகளாலும் ஆழ்ந்த அகழியாலும் சூழப்பட்டு மிக்குயர்ந்திருந்த கோட்டையைவென்று கைக்கொண்டு அதற்குத் தலைவனாயிருந்த வேங்கைமார்பனையும் தோல்வியுறச் செய்திருக்கின்றனன். இவனைப்பாடிய புலவர் ஐயூர் மூலங்கிழாரும் முற்கூறிய ஒளவையாருமாவர்.

9-வது

பாண்டியன் ஆரியப்படைதந்தநெடுஞ்செழியன்.

இவன், பாண்டிராஜவம்சமென்னும் மாமலைமேல்வைத்த தீபம்போன்று பிரகாசிப்பவன். அறிவாண்மைகளிலுங் கல்வி கேள்விகளிலும் வீரதீரங்களிலும் ஒப்புயர்வில்லாதவன். மநுமுறை தவறாது அரசியற்றிவந்த ஓர் காவலன். பொருள் செறியச் செய்யுளியற்றும் அரிய பாவலன். இவன் தனது தலைநகராகிய மதுரையைத் திறந்துவைத்திருக்கும் இரத்தினாபரணப் பெட்டியைப்போற் பளபளப்ப நல்லவண்ணம் புதுக்கிப் பாதுகாத்துவந்தான்.

ஒருகாலத்திலிவன் வடபுலவேந்தரை வெல்லக்கருதி, பலமான பல படைகளுடன் வெளிப்பட்டு விந்தமலை கடந்து இமயவரைவரையிலுமுள்ள பலநாட்டு ஆரியஅரசரையும் இலகுவிற் பொருது திறைகொண்டு தனக்கு அடங்கிநடக்கும்படி செய்துகொண்டான். பிறகு அவன் யவனதேசமாகிய ஆப்கானிஸ்தானத்திலும் புகுந்து, அந்நாட்டரசருடன் போர் தொடங்கி, அரிதில் அவரையும் வென்றான். இப்போரில்

அந்த யவனவீரர்கள் காட்டிய பராக்கிரமச் செயல்களையும் அவரது அலைபாத நெஞ்சுறுதியையும் பயங்கரமான தோற்றத்தையுங்கண்டு வியந்து அவருள் அநேகரைத் தன் படைகளுடன் சேர்த்துக்கொண்டு தனது இராஜதானியாகிய மதுரையில் வந்துசேர்ந்தான். இப்படி இவன் ஆரியப்படைகளை வென்று தென்னாட்டுக் கழைத்துவந்ததால் இவனை "ஆரியப் படைதந்தநெடுஞ்செழியன்" என ஆன்றோர் அழைப்பாராயினர். இந்த யவனவீரரையே இவ்வேந்தன் கோட்டை வாயில்களிற் காத்திருக்குமாறு ஏற்பாடு செய்திருக்கிறான். இதனை

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க் கயிராது புக்கு" என

இளங்கோவடிகளு மினிதுவிளக்கா நின்றனர்.

மேலும், இப்பாண்டியன் "கல்விகற்பதினல் வரும் இன்பத்தைத் தன்னைப்போல் சகல பிரஜைகளும் இனிது அனுபவித்து ஆனந்திக்கவேண்டும்" எனக்கருதி, ஆசிரியர்பாற் கல்வி கற்குங் காலத்தில் மாணவர் கைக்கொள்ளவேண்டு மொழுக்கமும், கல்வியுடையாரடையும் பெருமையும், அஃதில்லாரடையுஞ் சிறுமையும் நன்கு விளங்க ஓர் பாடலைத் தானே இயற்றிப் பிரசித்தஞ் செய்திருக்கின்றான். அச்செய்யுள் புறநானூற்றிலிருக்கின்றது. அதன் பொருளாவது :

'ஓர் மாணவன் வித்தியாப்பியாசஞ் செய்துகொண்டு வருகையில் ஆசிரியருக்கு ஏதாவது ஓர் ஊறுபாடு நேரிடுமாயின், உடனே அவ் வித்தியார்த்தி அவ் வாசானை யடுத்து, அத்துன்பந்தீர உதவிபுரிதல்வேண்டும். அவருவக்குமாறு மிகுதியும் பொருள்கொடுத்துதவல்வேண்டும். பணிவிடைகளும்

செய்தல்வேண்டும். சலிப்புற்று வெறுக்கலாகாது. இவ்வா றெல்லாமொழுகுவதே நல்மாணவர்க்கு அழகாவது. இப்படி யெல்லாம் நடக்கவேண்டுமென்பதற்குக்காரணம் யாதோ? என்றால், ஒரு தாயும் தானீன்ற பிள்ளைகளுக்குள்ளும் கல்வி கற்றவனிடத்திலேயே அபிமானமுள்ளவளாயிருக்கின்றாள். அல்லாமலும் பெரியோர், ஒரு குடும்பத்திற் பிறந்த பலருள் ளும், வயதில் மூத்தவனை வருக என்றுபசரியாமல், ஆண்டில் இளையனாயினும் கல்வியறிவு முதிர்ந்தவனையே எதிர்கொண் டழைத்து மரியாதை செய்கின்றனர். கற்றோன் நடந்து காட்டிய நெறியிலேயே காவலரும் நடப்பாராகின்றனர். கீழ்க் குலத்திற் பிறந்தானொருவன் கல்விகற்றிருப்பானாயின் அக் கல்வியை அவாவி மேற்குலத்திற்பிறந்தானும் அவனையேயடுத் து வழிபடாநிற்பன். ஆதலால் எல்லோரும் நலம்பெறக் கற் றலே வேண்டும்.

இவ்வேந்தன் இங்ஙனம் பிரஜைகளை அவசியங்கற்குமாறு தூண்டி உலகக்ஷேமத்திலேயே கருத்தைச்செலுத்தியிருக்கிறா ன். இவன் கற்றோரிடத்திலும் கவிவாணரிடத்திலும் பேரா ன்புடையவனாயிருந்திருக்கவேண்டுமென்று நானிங்குக் கூறு வது அநாவசியமே.

இவன் செங்கோல் செலுத்திவருங்காலத்தில் கொடுவினை யின் புணர்ப்பால் ஓர் சிலம்புகாரணமாக ஒரு பொற்கொல்லன் வஞ்சகமொழியை நெஞ்சார நம்பி நிரபராதியும் சிலப்பதிகார நூலின் கதாநாயகனுமான கோவலனைக் கொலைசெய்விப்ப, அதுதெரிந்து மனம்பொறாத அக்கோவலன்மனைவியும் பத்தி னிக்கடவுளுமான கண்ணகிஎன்பாள் துக்கமும்சினமும் மட்டி ன்றிப்பொங்க இச்செழியன்முன்தோன்றி, தன்னிடத்திருந்த

மற்றொரு சிலம்பால் "தன்கணவன், கள்வனில்லை" என்பதை மெய்ப்பித்துத் தீக்கடவுளையேவி அம் மதுரையம்பதியை யெரிக்கச்செய்தனள். நீதிதவறியதை அறிந்த நெடுஞ்செழிய னும், "இழிந்த பொற்கொல்லன் வார்த்தையைக்கேட்டு இக் கொடும்பழிக்காளானேனே? யானோஅரசன்? கள்வன்யானே? மன்பதை காக்கும் தென்புலம் காவல் என் முதற்பிழைத்தது. கெடுக என் ஆயுள்," என்று உரைத்து அலறி மயங்கி அரிய ணையிலிருந்து கீழேவிழுந்து இறந்தான். அவன் மனைவி யாகிய கோப்பெருந்தேவியும் அவனைப்பின்பற்றினள். இக் கதையின் விரிவைச் சிலப்பதிகாரத்தால் உணர்க.

இவ்வாறு நீதியின்பொருட்டு அருமையான ஆவியைப் போக்கி இந் நிலஉலகத்தில் புகழ்உடம்பால் நீடூழி நிலைத்து நிற்பவன், இந் நெடுஞ்செழியனையன்றி வேறுமுளரேயோ? இவன்காலத்துவேந்தர் சோழன்பெருநற்கிள்ளி இலங்கைக் கயபாகுமுதலான வேந்தர்களே.

10-வது.

பாண்டியன் இளஞ்செழியன்.

இவன், பாண்டிநாட்டுக் கடற்கரைஇராஜதானியாகிய கொற்கையம்பதியில், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நெரு ங்கிய பாந்தவியமுள்ளவனாய் அவனுக்குட்பட்டிருந்த ஓர் சிற்றரசன். பேரரசனாகிய நெடுஞ்செழியன் நீதியின் பொரு ட்டு ஆவிநீங்கினதையும், கண்ணகியின் கற்பால் மதுரைமாநகர் எரியின்வாய்ப்பட்டுவிட்டதையும், நாடுமுழுவதும் பஞ்சமும்

நோயும் விஞ்சிக்கிடத்தலையும் கேள்விப்பட்ட இவ்விளஞ்செழியன், கொற்கையினின்றும் போந்து, மதுரையையே தலைநகராகக்கொண்டு அணிமுடி சூடி அரியணையேறலாயினன். அப்பால் இவன், பத்தினிக்கடவுளைப் பல களவேள்விகளாலும் திருவிழாக்களாலும் மகிழ்விக்க அவளருளாற் பஞ்சமும் நோயும் நீங்கி நாடு செழிப்புற்றது பிறகு இவன் சந்ததிகளே அரசியற்றிவரலாயினர் என்பர்.

11-வது.

பாண்டியாதிராஜபரமேசுவர
பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி.

இவன் அநேக யாகசாலைகளை நிர்மாணஞ்செய்ததாலும், அரசர்கூட்டங்களென்னும் சிறுமலைகட்கெல்லாம் மேருசிகரம் போல் அத்தியுன்னத நிலைமையில் வீற்றிருந்ததாலும் பல்யாகசாலைமுதுகுடுமி எனக்காரணப் பெயர்கள் சேர்த்து அழைக்கப்பட்டனன். ஓர் கவி, இவனுடைய புகழ் "இமயமலையின் வடபாகமுதல் கன்னியாகுமரிவரையிலும், மற்றுமுள்ள தீபாந்தரங்களிலும் வியாபித்தது என்றதோடு அமையாமல் வானுலகத்திலும் பாதாளத்திலும் பரவிற்று" எனக்கூறியிருக்கின்றனர். இவர், வானுலகத்திலும் இவன் புகழ் பரவினதாகச்சொன்னது, இப் பாண்டியன் அநேகயாகங்களைச் செய்து, அவிர்ப்பாகங்களைத் தேவர்களுக்கு அளித்திருப்பதனால் அதனைப்புசித்து நன்றிமறவாத அக்கடவுளர்கள், இவனைப்பற்றி அடிக்கடி புகழ்ந்திருக்கலாம் என்று கருதியேபோலும்.

மேலும் இவ்வேந்தன் திருக்களவேள்வியோடு பேரரசர்கள் அவசியம் செய்யத்தகுவனவான இராஜசூயம்முதலிய யாகங்களையும் செய்தவனாகத்தெரிகின்றனன், அம்மகங்களைப்புரியும் புரவலன், 'உலகம் பொதுநீங்க ஒருகோலோச்சுபவனாகவேயிருக்கவேண்டும்' என்பது நூல்களின் துணிபல்லவா? ஆகவே இவன் அரசாட்சி பெரும்பான்மையான பூபாகத்தைக்கொண்டிருந்ததாகவே கருதவேண்டியிருக்கின்றது.

இவனுடைய நீதி வியக்கத்தக்கதேயாம். ஒருபாற்கோடாத சீர்தூக்கும் தராசேபோற் பொதுமைவாய்ந்திருந்தது, இவன் மநுநூன் முறைதவறாது அரசியற்றி வந்திருக்கின்றனன், மகாவீரன். தன் எண்ணத்துக்கு மாறுபட்ட ஒழுக்கத்தையுடைய விரோதிகளை இவன் அடக்க நினைப்பானாயின் திடீரென்று தனது படைக்கடல்களுடன் விரைந்து அவரைச்சூழ்ந்து அதஞ்செய்வதில்லை. பல அறிவாளிகளை அப்பகைவேந்தரிடம் அனுப்பி அவர்க்குப் பற்பல புத்திமதி புகட்டச்செய்வான். அதற்கு அவர் நல்வழிப்பட்டிலரேல் நால்வகைச்சேனைகளும் சூழ்ந்துவரச்சென்று அப்பகைவர்பதியை முற்றுகைசெய்வான். பிறகும் அவர் சரணம்புகாது சண்டைசெய்தலையே கருதுவாராயின், "இனி ஆரம்பிக்கப்போகும் போரில் நிரபராதிகளும் அநியாயமாய் அழியக்கூடுமே" என்னுங்கருணையால் உள்ளம்இளகி அவர்களை அப்பாற்படுத்தும் பொருட்டுப் பலகொடிச்சீலைகளில், "கோக்களும், கோப்பிராமணர்களும், பெண்டிர்களும், பிணியாளரும், பிண்டோதகக்கிரியைகளை நடத்தற்குரிய பிள்ளைகளைப் பெறாதவர்களும், இன்னோரன்ன பலரும், தங்கள் தங்களுக்கு அரணாம் இடங்களில் இப்பொழுதேவிரைந்து, புகுந்துய்வாராக. இதோயாம்

அம்புராசிகளை அணியணியாக வர்ஷிக்கப் போகின்றனம்" என்னும் வாசகங்களை தர்மசாத்திரங்களிற் கூறிய மேற்கோள்களுடன் தனது ஆற்றலையும் விளங்க வரைந்து, அவைகளை நெடுங்கழிகளிற் கோத்து, மத்தகஜங்களின்மேல் எடுத்துப் பிடிக்கச்செய்து அக்களிற்றினங்களைப் பகைவர் கடிநகருள் பலரும்காண நடப்பிக்கும்படி செய்வான்.

இப்படிச் செய்ததின்பிறகே இப் பல்யாகசாலையான், போர்தொடங்குவது வழக்கம். இவன் வில்லிடமிருந்து வெளிப்படும் சரமாரிகள் கையிற் படைதொடார்மேலும், பதுங்குவார்மேலும், முதுகுகாட்டி ஓடுவார்மேலும், பாதத்தில்விழுந்துபணிவார்மேலும்படுவன அல்ல. முனைமுகத்தில் முன்வைத்த காலை இவன் பின்வாங்குவதுமில்லை. இவ்வண்ணம் நடக்கும் போரில் பகையரசன் தன்னைவணங்கிச் சமாதானத்துக்கு வருவானேல், அப்பொழுதே, அச்சமரத்தை நிறுத்தி அவ் வெதிரியை அபயம் நல்கி ஆதரிப்பான். இப்படியில்லாமல் மறைந்துறைந்து வம்புபுரிவானேல் அவன் வெளிப்படும்வரையும் அவனது நாட்டினுள்ள விளைநிலங்களிற் பட்டமணிந்த யானைக்கூட்டங்களைச்செலுத்தி, செந்நெற்றலைகசங்கி உட்புகுதச் சேறுதுழம்புபடி செய்துவிடுவான். பிறகு அந்தக் கரிக்குலங்களை அங்குள்ள தடாகங்களிற் புகச்செய்து அவைகளைச் சகதிகுழம்பித்ததும்பும்படிசெய்வான். கோட்டைகளை இருந்தஇடந்தெரியாதபடி இடித்துத்தகர்த்துத்தனது அழகிய தேர்தடையின்றிச்செல்லுநெறியாக்குவான். அப்பட்டணத்து இராஜவீதியைமிகவுமஇழிந்த மிருகமானவெள்ளியவாயையுடைய கழுதைகளையேரிற்பூட்டி நல்லவண்ணம் உழும்படி செய்வான். இக்காலங்களில் எதிர்த்தாரையெல்லாம் இயம

னுக்கு விருந்தாக்குவான். இன்னணம்பொருது வாகைபுனைந்த வுடன் அவ்விடத்திற் செய்யக்கூடிய களவேள்வியைக் கறு மெனச்செய்துமுடிப்பான். இப்படி இவன்செய்த அமர்களுக் கும் யாகங்களுக்கும் அளவில்லையென்பர்.

பிறகு அவன் அங்ககாங்களைக் கொள்ளைகொள்ளாமல் அங்குள்ள பகையரசன்மாளிகையிலும், அவனுக்குச்சம்பந்தப் பட்ட பிறவிடங்களிலுமுள்ள பொற்கலங்களையும், காசுகளை யும், தூசுகளையும், ஏவலராற் கொணர்தரச்செய்து, தனது புகழைப் பாடிக்கொண்டிருக்கும் பாணர்களுக்கும், விறலி களுக்கும், புலவர்களுக்கும், மற்றும் இவர்போல்வார்க்கும் வாரியளிப்பான். விளைபுலன்களையும் நல்குவான். இவன் இவ்வண்ணம் வரையாது வள்ளன்மைகாட்டி வந்தமையால் தீண்டக்கூடாதபாணரும் பேரவாவினல் இவனுக்குத் தங்க த்தால்இயற்றப்பெற்ற தாமரைப்பூவை நல்லவண்ணம் அலங் கரிப்பாராயினர் போற்றத்தகும் புலவரும் இவனுடைய பட் டத்துயானையையும், தேரையும் உலாப்போதற்கு ஏற்றவாறு அணிமைசெய்வாராயினர்.

அக்காலத்திலிருந்த அருள்படைத்த பெரியோர் இவனு டைய வீரம், தீரம், கல்வி, கேள்வி, நீதி, பொறை, அடக்கம், கொடை, நுண்ணறிவு, தண்ணளிமுதலிய குணங்களைநோக்கி, "நினதுகவிகை திரிநேத்திரதாரியான சிவபெருமானது திருக் கோயிலை வலம் வருமிடத்தன்றி மற்றைய இடங்களில் தாழா திருக்கக்கடவது. உன்னுடைய கரங்கள் நீடூழிவாழ்க என ஆசிகொடுக்கும் அந்தணர்முன் அன்றி வேறு வணங்காதிருக் கக்கடவது, நின்மார்பில் புலராதிருக்கும் பூமாலைகள் நீ பகை

வருடைய நாட்டைத் தீயிட்டெரிக்கும்போது உண்டாகும் பலவித மணத்துடன்கூடிய புகையினுல் வாடுவதன்றி வேறு விதங்களால் வாடாதிருக்கக்கடவது. உன்னுடைய கோபம் உனது மனைவியரின் ஒளிவீசுகின்ற முகத்தின்முன்னரன்றி வேறுவிதத்திற் றணியாதிருக்கக்கடவது" என்றுவாழ்த்தியிருக்கின்றனர்.

இம்முதுகுடுமி உத்தமகுலத்து க்ஷத்திரியனுதலால், தான் கொண்ட வெற்றிகளையேனும், செய்த தானசம்மானங்களையேனும் மறந்தாயினும் வெளியிடுவதில்லை. இவன் குலத்தில் முன்னிருந்த வேந்தர்களும், பின்வந்த அரசர்களும் இராஜசூயம் முதலிய யாகங்களைச் செய்திருக்கிறதாகவும் தெரிகின்றனர்.

இப்பாண்டியன் மகாசிவபக்தன். இவன்காலத்தில் இயல், இசைத்தமிழ்கள் மேலான நிலைமையிலிருந்தனவாகத் தெரிகின்றன. நீதிபரிபாலனத்தின்பொருட்டு இவன் கைக்கொண்ட நூல்கள் மனுவும், குறளுமே. இவன்காலத்து ஆயுதங்கள், வில், வாள், வேல் முதலியன. நாணயம் காசு முதலியன. வர்ணாச்சிரமங்கள் நிலைகுலையாமலிருந்தனவென்றாலும், சில வேளைகளில் இவன் அவைகளின் மாறுபாடுகளைக்கவனித்ததாகவும் தெரியவில்லை. இவனுடைய ஒழுக்கமெல்லாம் பூர்வ புராண பாண்டியரின் ஒழுக்கங்களையே ஒத்திருக்கின்றன. மேலும் இவன் ஞான நூல்களை நல்லாசிரியர்முகமாக ஆராய்ந்து அனுபவமுற்றிருந்தவனுகவும்தெரிகின்றான். இவன் காலம் கி. பி. ஆறுவது நூற்றுண்டின் நடுவாயிருக்கலாம் என்பர்.

இவனைப்பாடிய புலவர் காரிக்கிழார், நெட்டிமையார் நெடும்பல்லியத்தனர். வேள்விக்குடி சாஸனம் இவ்வேந்தனையே முதல்வனுகக்கொண்டு பரம்பரையை வகுக்கின்றது.

12-வது.

களப்ரர்.

பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதிக்குப் பிறகு சில காலமிருந்த பாண்டியர்களைப்பற்றித் தெரியவில்லை. அக்காலங்களில் கருநாடக நாட்டவரான களப்ரர் என்னும் அரசகுலத்தவர், தமது ஆளுகையைத்தமிழ்நாடுகளில் ஸ்திரப்படுத்தி வெகு கம்பீரமாயாண்டு வந்ததாகத் தெரிகின்றனர். "ஆனால் இவர் அரசாட்சி ஜனங்களால் வெறுக்கப்பட்டிருந்தது" என்பதற்கையமில்லை. இவர் சமணமதத்தினராகத் தெரிகின்றனர்.

"களப்ரன்", என்பது ஓர் அரசன்பெயரென்றும் அவன் சிலகாலமட்டும், தமிழ்நாடுகளைக் கைக்கொண்டு கொடுங்கோல் புரிந்துவந்தனன் எனவும் சிலர் கூறுநிற்கின்றனர்.

13-வது

பாண்டியாதிராஜகடுங்கோன்.

களப்ரர் கையிலகப்பட்டிருந்த தமிழ்நாடுகள் கடுவன் கையிலகப்பட்ட கட்டி மலர்மாலையைப்போல் பலவிதத்திலும் நையப்பெற்றுப்பொலிவிழந்திருந்தன. பஞ்சமும், பிணியும்; உள்நாட்டுக்கலகங்களும் உண்டாயிருக்கவேண்டுமென வூகிக்கப்படுகின்றது. களப்ரருக்குக் கலியர் என்று ஓர் பெயரிருத்தலும் இதனை வற்புறுத்தும். இன்னணம் தமிழ்நாடு துக்காந்தகாரத்தில் அமிழ்ந்துபோனதாகவே, சிலகாலம் அது தனது மேன்மையையெல்லாமிழந்திருந்தது.

இப்படியிருக்கையில் களப்ரர்களால் முன் முறியடிக்கப் பட்டு, போனவிடந்தெரியாது மறைந்துபோன பாண்டிய வம்சத்தானொருவன், தெக்ஷிணதேசமுழுவதும், உத்தரத்திற் பலபாகங்களும் களப்ரர் குலத்தாருக்குட்பட்டிருந்தமையால் இந்நாடுகளிற் புகுந்துறையமுடியாமல் கப்பலேறிக் கிழக்கு திக்கிலுள்ள ஏதோ சிம்மளமோ யாதோ ஒரு தீவில் வசித்திருந்து, அங்குள்ள அரசனிடத்தில் தன்னை இன்னானெனத் தெரிவித்துத் தோழமைகொண்டு அவனளித்த பெரும்படைகளுடன் கடல்கடந்து தமிழ்நாட்டிற்புகுந்து பெரும்போரியற்றி அக்கலியரை நலியச்செய்திருக்கவேண்டும். இவ்விஷயத்தை வேள்விக்குடி சாசனம், "இவன் பாண்டியாதிராஜன் என்ற பெயருடன் கொந்தளிக்கும் சமுத்திரத்திலிருந்து உதயமாகிவரும் சூரியனைப்போல் தோன்றினான்" என்று கூறியிருக்கிறது.

களப்ரர் என்னும் காரிருட்கூட்டத்தைக் கடுங்கோனென்னும் கதிரவன், ககனவாறுபடர ஓட்டியபின் மானம்போர்த்த சேனைகள் சூழப்பல நாடுநகரங்களிலுஞ்சென்று பேரரசரோடு சிற்றரசர்களையும்வென்று அவர்க்குரியனஎல்லாங்கைக்கொண்டிருக்கிறான். மற்றுந் தனக்கடங்காதிருந்த பலவேந்தர்களுடைய பட்டணங்களையுமிடித்தழித்திருக்கின்றான். இவ்வாறு இவன் தனக்கெதிராவாரொருவருமில்லையென்று கண்டதின் பிறகே போர்செய்தலின் நீங்கி மீண்டும் கனகசிங்காசனத்தில் வீற்றிருந்து விந்தியமலைமுதல் கன்னியாகுமரிவரையுள்ள நாடுகளெல்லாம் பொதுநீங்கத் தானொருவனே ஆட்சிசெய்து வந்திருக்கின்றான்.

இவனைப்பற்றிய பாடல் ஒன்றாவது காணக்கிடைக்கவில்லை. அதனால் இவன், "அழியத்தக்குந்த செம்பொன்மாலையேயன்றி அழியாத செந்தமிழ் மாலிகையை அணிந்துகொள்ளுமோர் பாக்கியத்தைப் பெற்றிருக்கவில்லை" என்பது உறுதியேயாகின்றது. கவிமாலிகையையணியாதார் கழிபுகழ்கள் எவ்வாறு கமழ்வது. இவன் தமிழை அநாதரவுசெய்தவனென்றே கருதப்படுகிறான். இவன் காலம் கி. பி. 560முதல் 590வரை இருக்கலாமென்பர்,

---

14-வது

அதிராஜவர்மன் அவனிசூடாமணி.

இவன் களப்ரர்குலத்தைக் கால்சாயவென்ற, பாண்டியாதிராஜ கடுங்கோனின் புதல்வன். தந்தையாற்கொடுக்கப்பட்ட பூபாகத்தையெல்லாம் யாதொரு சச்சரவும் நேராதபடி முப்பது வருஷமட்டும் ஆண்டவனாகத்தெரிகின்றான். பிற்காலத்தில் பஞ்சம் ஏற்பட்டதாய்த்தெரிவதால் இவன்காலத்தில் உலகம்சுபிக்ஷமாகவே இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அக்காலத்தரசர்களில் இவனே மேம்பட்டவனாய் விளங்கினன் என்பதை அவனிசூடாமணி என்ற பெயரே நன்கு விளக்காநிற்கும். இவனைப்பற்றி வேறொன்றுந்தெரியவில்லை. இவன் காலம் 590முதல் 620வரை என்பர்.

15-வது.

பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்.

இவன், அவனிசூடாமணி பாண்டியனின் புதல்வன். தகப்பனுக்குப் பிறகு அரசுரிமையைக் கைக்கொண்டவன். பண்டைக்காலத்தில் தென்கடல் தெய்வத்திற்குச் சிறப்புறத் திருவிழா நடத்திவந்தவனும் பஃறுளியாற்றை வெட்டுவித்த வனும், ஞானநூல்களை ஆராய்ந்து நலம்பெற்றவனும் நீடிசை வளர்த்த நெடியோனுமாகிய வடிம்பலம்பநின்ற பாண்டியனு டைய பரம்பரையிலுதித்த ஒப்புயர்வற்ற ஓர் வீரன். இவன் தன் தகப்பன் காலஞ்சென்றதும், வயதுபதினாறுக்குமுன்னரே முடியணிந்து தனது மூதாதையர்போற் செங்கோல்செலுத் திவரலாயினன். கொங்கு, தொண்டை, சோளமுதலிய நாடு களுடன் சேரநாட்டிலும் இவனதாளுகை வியாபித்திருந்தது. இப்படியிருக்கையில், யானையின் கண்போன்ற பார்வையுடை யவனும் ஐங்குறுநூறுஎன்னும் நூலைத் தொகுப்பித்தவனும் கொல்லிமலைக்கிறைவனும் மேலைக்கடற்கரையிலுள்ள தொண்டி என்னும் பட்டினத்தை இடமாகக்கொண்டவனும், சேரர் குலாதிபதியுமான "கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை" என்பவனும் அக்காலத்திலிருந்த சோழ மன்னவனும் ஒன்றுகூடி, இளையனாகிய இந்நெடுஞ்செழியனுக் குச் சென்னிவணங்கித் திறையளத்தல் ஓர் பெரிய அவமான மாயிருக்கிறதென்றும், இதுநீங்க இப்பருவத்திலேயே அவனைப் போரில்வென்று சுவாதந்தரியம் பெற்றேதீரவேண்டுமெனவும் தீர்மானித்துக்கொண்டனர்.

சில பகலில் அவ்விரு வேந்தரும் தமது நாற்படைகளையும் நாற்கடல்களைபோல் பெருக்கிக்கொண்டதோடமையாது, திதியன், எழினி, எருமையூரன், இளங்கோவேண்மான், பொருநன் என்னும் சிற்றரசர்களையும் சேனையுடன் வரவழைத்துக் கொண்டனர். தலையாலங்காடு என்ற தலத்தையே போர் புரிதற்குரிய இடமாகக் கணித்துச்சென்று ஆங்குள்ள காடு நாடுகளிலெல்லாம் கடல்கள்வந்து பரவினபோல் சேனைகளின் பெருக்கு விரிந்திருக்கச் சங்கத்துவானங்கள்செய்துகொண்டிருந்தனர். இஃதறிந்த குடிஜனங்கள் உடல்நடுங்க ஓடிச் சென்று நெடுஞ்செழியனை வணங்கி நாக்குளற உள்ளதை உரைப்பாராயினர். "வேந்தர் வேந்தே! தலையாலங்கானத்தில் கடல் கரையுடைத்துவந்து பெருகினதுபோல் பகைவரின் படைகள்வந்துபரவி அமராட ஆயத்தமாயிருக்கின்றன. சேர, சோள வேந்தரோடு பல சிற்றரசர்களும் ஆங்குச் சிங்கநாதஞ் செய்துகொண்டிருக்கின்றனர். 'இனி நடக்க விருக்கும் சண்டை எவ்வாறாகுமோ' என, எங்கள் நெஞ்சம் அஞ்சுகின்றது" எனலும், செழியன் அவர்களை அங்கையமர்த்தி, "எனது அன்பார்ந்த பிரஜைகளே! சில சொல்லுவேன் கேட்பீராக: எனது ஆளுகைக்குட்பட்டிருக்கும் நாடுகளின் பெருக்கத்தைக்கண்டு பொறாமையால் மனம் புழுங்கிய சில புல்லிய அரசர்கள் என்னை வயதிற் சிறியவனென்றும், அதனால் போர்ப்பழக்கம் முதலிய நிரம்பப் பெறாதவனாயிருப்பானெனவும், பெரிய யானைக்கூட்டங்களையும், குதிரைப்பந்திகளையும், பயிற்சியடைந்த காலாட்படைப் பெருக்கத்தையும் உடையோமெனவும் எண்ணித் தருக்குற்று வாயில்வந்தபடியெல்லாம் வீரவாதுகள் பேசி என்னுடன் அமர்புரிய அடுத்திருக்கின்றனர். அந்தோ

பாவம்! அவர்கள் என்னசெய்வார்கள்! முடிவுகாலம்சமீபித்து விட்டால் அதனைத் தடுக்க யாராலாவது. எனது சதுரங்க பலத்தைக்கண்டும் காணுதவர்போல் இவர் இங்ஙனம் வந்திருக் கின்றனர். இவைகளெல்லாம் அசூயை என்னும் பெரும் பேய் ஆட்டிவைக்கும் ஆட்டமேயன்றி வேறில்லை என்னை இவர் சிறியனென்று நினைத்தனர். என்ன சொல்ல! உருவத் தாற் சிறியதைச் சிறியதென்றும், அஃதாற் பெரியதைப் பெரியதெனவும் துணிபவர் மூடரேயன்றி வேறில்லை வீட்டு விளக்கு மிகச்சிறிதே. வைக்கோற் குவியலோ மிகப்பெரிதே. இவ்விரண்டையும் பொருத்துவிட்டால் தெரியும் அச்சிறிய தின் பெருமை. ஓ! ஜனங்களே! பருவத்திற் சிறியன் என்ற அம்மன்னவர் கூட்டங்களைச் சில பொழுதிற் சிதற அடித்து அவர் முழக்கிக்கொண்டிருக்கும் முரச வாத்தியத்துடன் அவர்களைப்பிடித்துச் சிறைசெய்யேனுயின் நீங்கள் யாவரும் என்னைக் காக்க வல்லமையற்ற கடையனுகிய கொடுங்கோலரச னெனப் பழித்துத் தூற்றக்கடவீர். தலைமைவாய்ந்த தமிழ் வித்துவான்களும் என்னைப்பற்றிப் பாடாதொழியக்கடவர். என்னைச் சார்ந்தாரும் துன்பமிகக்கடவர். இல்லையென்றிரப் போர்க்கு இல்லையென்றுசொல்லும் வறுமையை யானுமடை யக்கடவன். இவ்வளவே. ஒன்றுக்கும் நீங்கள் அஞ்சல் வேண்டா. செல்லுங்கள்" என, அவர்களும் அப்பாற்பட்ட னர்.

அப்பால் நெடுஞ்செழியன் தனது பெரும்படைப்பெரு க்கத்துடன் அந்தத் தலையாலங்கானத்தை அடுத்துப் போர் தொடங்கினன். பகைவராகிய எழுவேந்தரும் தமது முழு வன்மையையும் முனைமுகத்திற் காட்டலாயினர். அப்பெருஞ்

சமரம் பலநாள் நிகழ்ந்தது. செழியன் விடுத்த கணைகளாலும், காலாட்படைகளாலும், பற்றூர்படைகளிற் பலர் மாய்ந்தனர். சிலர் வந்தவழிநோக்கிப் படர்ந்தனர். இவ்வாறாகவே சேரனும் சோழனும் மெய்சோர மதிமயங்கி நின்றனர். இப்படி நிற்பாரைச் சில வீரர் பிணித்துப் பாண்டியன்முன் கொணர, அவன் அவரைச் சிறைக்கோட்டத்தடைக்கும்படி ஆக்கினையிட்டான். தோற்றுநின்ற குறும்பரில் திதியன் செழியனை வணங்கித் துதிகூறிப் பிழைத்தான். எழினி வழுதியைத் தொழுது வந்தவழி பார்த்தெழுந்தான். எருமையூரன் எருமைக்கடாவூர்தியின் ஊர்போய்ச்சேர்ந்தான். இளங்கோவேண்மான் மருங்கோர்மலையில் மறைந்தான். பொருநனும் புறங்காட்டிப் பொட்டெனப்போனான்.

இவ்வாறு ‡ கன்னிப்போரில் விஜயம்பெற்ற செழியன், அக்காலத்திலேயே வீரராவார்க்குச் செய்யத்தகும் § களவேள்வியை முறைப்படி செய்யலானான். தோற்றொழிந்த வேந்தரின் முரசங்களே பானைகளாகவும், வீரர்களின் முடித்தலைகளே அடுப்பாகவும், ஓடுகின்ற குருதிப்புனலே உலைநீராகவுங் கொண்டு அங்குச் சிதறிக்கிடக்கும தசை, மூளை முதலாயின பெய்து, வீரவளையணிந்த தோளாகிய துடுப்புக்களால் துழாவிய உணவினால் திருக்களவேள்வியைச் செய்துமுடித்தான். அதுகண்டு களித்த * விந்தைமகள் விரைந்துவந்து அச்செழியனது கொழுவிய புயங்களிற் கொலுவீற்றிருப்பதானாள்.

பிறகு பாண்டியன் அவ்வூரை அனற் கிரையாக்கி அங்குள்ள அரண்களையுமிடித்து வெளியாக்கினான். இதுகால

---

‡ கன்னிப்போர்: முதன்முதற்செய்யுஞ் சண்டை.

§ களவேள்வி: வெற்றிபெற்ற அரசன் இரணக்களத்திற்செய்யும் யாகம். * விந்தைமகள்: வீரலக்ஷ்மி.

முதலிவனை உலகத்தவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனக் கூறலாயினர்.

தலையாலங்கானத்திருந்து படைகளுடன் வெற்றிமுரசு சுற்றுமுழங்க வெளிபட்ட நெடுஞ்செழியன், கடற்கரையில் உள்ள வளமிகுந்த மிழலைக்கூற்றமென்னும் பட்டினத்தை முற்றுகைசெய்து, அதற்குத் தலைவனும், பிரஜைகளுடைய செல்வங்களைப் பாதுகாவாத தன்மையையுடையவனுமான பெரிய வேளாகிய எவ்வியை அவ்விடத்தினின்றும் அகல ஓட்டி அவ்வூரைத்தன்னடிப்படுத்தினன், பழைய வேளிரது பதியாகிய முத்தூர்க்கூற்றத்தையும் கைக்கொண்டனன். அப்பாலுமவன் சிறப்புமிகுந்த செந்நெல்விளைநிலங்களாற் சூழப் பெற்று அந்நெல்லின் பெயரையே தனக்குரிய பெயராகக் கொண்ட சாலியூரையும் தன் ஆளுகைக்குட்படுத்தினன். அடர்ந்தமலைப் பக்கங்களையெல்லாம் பெருவழிகாண வெட்டிப் பிளந்து அங்குள்ள குறிஞ்சி நிலமன்னரையெல்லாம் அப்பாற் படுத்தித் தானே தலைமைஎய்தினன். குட்டநாட்டை ஆண்டு கொண்டிருந்த பல சிற்றரசர்களையும் தனக்குட்பட்டிருக்கு மாறு அடக்கினன். இவ்வாறே சிலகாலத்துள் இவன்வடக்கே இமயம், தெற்கே குமரி, மேற்கும், கிழக்கும், கடல்கள் ஆகிய இவ்வெல்லைக்குட்பட்ட நாடுகளையெல்லாம் பொதுநீக்கிக் கொள்வானாயினன். இவ்வண்ணம் செழியன் திக்குகள் அனைத்தையும்வென்று ஜெயபேரிகை முழங்கத் தேசங்களிலுள்ள சிற்றரசரெல்லாம் குற்றேவல்செய்யத் தனது பழம்பதியாகிய மதுரையம்பதியில் வந்துசேர்ந்தனன்.

இப்படி இவன்வருவதற்குச் சிலதினங்களின்முன் சிறையிலடைக்கப்பட்டிருந்த சேரன், கோப்பத்தில் விழுந்த

கொம்பன்யானை தனது வலிய கூர்ங்கோட்டினால் கரைகளைக் குத்திச்சரித்து வெளிப்பட்டு காட்டைநோக்கி விரைந்துசெல்வதுபோல் யாதோ ஒருதந்திரத்தால் காவற்கூடத்தினின்றும் புறம்போந்து இரவே தொண்டியைநோக்கி ஓடிவிட்டனன். இஃதறிந்த செழியன், நாலிழந்த மங்கையைப்போல் இரவில் ஒளித்தோடின அச் சோரனை மீண்டும் வலியடக்கிக்கொணர நினைத்திலன். அங்ஙனம் செய்தல் தனதாற்றலுக்கு இழுக்கென நினைத்தான்போலும். என்றாலும், பாண்டியன் அத்தொண்டி வேந்தனை வருடவாரி தனக்குக் கப்பஞ்செலுத்திவருமாறு கட்டளையிட அவனும் அவ்வாறே செய்திருக்கவேண்டுமெனத் துணியப்படுகிறது.

பிறகவன் தனது இராஜதானியான மதுரை மிகப்பழுமை வாய்ந்திருத்தலைக்கண்டு, அதனைப்புதுப்பிக்கத் துணிந்து வடதேசங்களினின்றும் பல சிற்பிகளைத்தருவித்து, அந்தணர் அரசர்வீதிமுதல் சண்டாளர் பயிலும் மறுகுவரை நல்லவண்ணந் திருத்திப் புதுக்கி ஒழுங்குபெறச் சமைக்கச் செய்தான். சிவாலயமுதற் பல தேவாலயங்களையும் ஊரின் நடுநாயகமணிபோல் விளங்க நிர்மித்தான். ஜைனர் ஆலயங்களையும், பௌத்தக்கோயில்களையும் அமைத்து ஆதரித்தான். அப்பட்டணத்தில் பல வீதிகளிலுமுள்ள மாளிகைகளெல்லாம் வெண்சுதை தீற்றப்பெற்று வெள்ளிமலைபோல் விளங்கின. அன்னசாலை, அறச்சாலை, யாகசாலை, கல்விச்சாலை, தொழிற்சாலை, அவைக்களம், ஆடரங்கு முதலியன பணிவித்தனன். அரண்மனைகளும் ஆத்தான மண்டபங்களும் அணிபெற அமைத்

தொண்டி:— மேலைக்கடல் கரையிலுள்ள ஓர் துறைமுகம். கீழ்க்கடற்கரையிலும் ஓர் தொண்டியிருக்கிறது.

தான். அவைகளைத் தோரணங்களாலும், சித்திரங்களாலும் அலங்கரித்தான். அரண்களையும், அகழிகளையும் மேல் கீழ் இடங்களின் இறுதிகாணுமாறு நிறுவினன். பலவளங்களாலும் மதுரையைச் சிறப்புச்செய்தான். பல பாஷைமாக்களும் இங்கு வந்து வதியுமாறு பல சௌகரியங்களையும் செய்தான். தன் நினைப்பின்படியெல்லாம் செய்துமுடித்துப் பூலோக தேவேந்திரன்போல் சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு செங்கோல்செலுத்திவரலானான்.

ஒருகாலத்தில் இச்செழியன் தனது மூதாதையர் தலைநகராகக்கொண்டிருந்த கீழக்கடற்கரைக் கணித்தான கோற்கையென்னும் பட்டினத்திற்குச் சென்றான். ஆங்குள்ள குடிஜனங்கள் அவனை எதிர்கொண்டழைத்து உபசரித்தனர். பிறகு அவன் கடற்கரையிற்சென்று உலாவிக்கொண்டிருக்கையில் அங்கு அகாதமான இரத்நாகரத்தில் மூழ்கிச் சங்குகளையும் முத்துக்களையும் வாரிக்கொணர்ந்து கரையிற் குவித்துக்கொண்டிருக்கும் பரதரின் கருமலைபோன்ற தோற்றத்தையும், புஜபலபராக்கிரமத்தையும் கண்ணுற்று அக்கூட்டத்தாரிற் பலரையும் தனக்குரிய படைவீரராகச் சேர்த்துக்கொண்டான். சிலநாள் அங்குத்தங்கிவிட்டு மதுரையில்மீண்டு சுகமாய்க் காலங்கழித்துவரலானான்.

இந் நெடுஞ்செழியன், புராதன பாண்டியமன்னவரின் குலத்தவனேயாவன். இவனுடைய வல்லமையும், கல்வியும், ஒழுக்கமும் வியக்கத்தக்கனவேயாம். தேவருலகம் கிடைப்பதாயிருந்தாலும் பொய் ஒன்றுசொல்ல ஒருப்படான். இரணகளத்தில் எதிர்ப்பவர் இமயவரேயாயினும் எள்ளளவு

மஞ்சாது பொருது வெற்றிமாலை சூடினலன்றி வெளிப்படாதவன். வன்மையாற் கவர்ந்த செல்வங்களையும், அணிகளையும், திறையெனவரும் திரவியங்களையும், நாட்டின் நலத்திற்கும் பாணர், புலவர் முதலானவர்களுக்கும், மற்றுமுள்ள அறச்சாலைகளுக்கும் பகுந்தளித்துவிட்டு மீதமுள்ள சிறிது பாகத்தையே அவன் உபயோகப்படுத்திக்கொள்வான். நீதிபுரிவதில் தராசையொத்தவன். முறையுற முத்தமிழையும் ஆராய்ந்த நற்கவிப்புலவனுமாவான். சிவபெருமானையே வழிபடுகடவுளாகக்கொண்டவனென்று ஊகிக்கப்படுகிறான். மற்றையச்சமயங்களையும் இவன் புறக்கணிப்பதில்லை. இவன்காலத்தில் முத்தமிழும் அதி உன்னத நிலைமையிலிருந்ததாகத் தெரிகிறது. பத்துப்பாட்டிலுள்ள மதுரைக்காஞ்சி, என்னும் பிரபந்தத்திற்கு இவனே நாயகனுவான். மதுரைக்காஞ்சிபாடின பெரும் புலவரான மாங்குடிமருதனர் தனக்கு உபதேசித்தபடி தனது முதியோனாகிய பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப் போல் பல யாகங்களை அந்தணர் அடுத்திருந்து நடப்பிப்ப ஆக்கி அமலமுற்றனன். முதுமை எய்தலும் செய்யவேண்டும் கருமங்களையெல்லாஞ் செய்துமுடித்துத் தக்க ஞானசிரியரையடைந்து, ஞானநூல் ஆராய்ந்து, பரிபக்குவமுடையனாய் இராஜருஷியாகித் தாமரை இலையிற்பட்ட தண்ணீர்த்துளியைபோல் உலகத்தோடு ஒட்டியுமொட்டாமலுமாய் நெடுங்காலம் வாழ்ந்து தனது வாழ்க்கையைப் பூரணஞ்செய்துகொண்டனன்.

இவனைப்பாடியபுலவர்கள் குடபுலவியனர், கல்லாடனர், மாங்குடிக்கிழார், இடைக்குன்றூர்கிழார், நக்கீரர் இவன்காலத்துவேறு புலவர், கபிலரும் பரணரும் என்பர்.

16-வது.

பூதப்பாண்டியன்.

இவன் திருவனந்தபுரத்தைச்சார்ந்த தாலூகாக்களிலொன்ருனபூதப்பாண்டியென்னும்ஊரையே தலைநகராகக்கொண்டு செங்கோல்செலுத்தி வந்திருக்கின்ருன். இவ்வூர் இடையரு தொழுகும் ஓர் காட்டாற்ருலும், சோலைகளாலும், விளைநிலங்களாலும் செழிப்புற்றிருக்கின்றது. பழயகோட்டையும், அரண்மனையும், இருந்த தடங்களும் இருந்தன என்பர். இந்நகரில் கோயில்கொண்டெழுந்தருளிவிளங்கும் கடவுளின் பெயர் பூதநாதரென்பது. இக்கடவுளின் பெயரே இவனுக்கு இவன் பெற்ருேரிட்டிருக்கவேண்டும்.

இவன் ஒருகாலத்தில் ஒல்லையென்னுமிடத்திலிருந்த அரசனேடு பொருதுவென்று அவ்வூரைத் தன்னடிப்படுத்திக்கொண்ட காரணத்தால் இவனை ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனென ஆன்ருேர் அழைக்கலாயினர். இவன் மகாவீரன். வஞ்சினங்கூறியே மாற்ருரோடெதிர்த்து வெற்றிமாலை சூடுபவன்; கசடறக்கற்றவன்; கவிசொல்லும் வன்மையும் வாய்ந்தவன்; இவன் பாடிய பாடல்கள் அகநானூற்றினும் புறநானூற்றினுமிருக்கின்றன. இவனுடன் உளம்கலப்ப நட்புற்றவர் மையலென்னும் ஊருக்குத் தலைவனுன மாவண், எயில் என்னுமிடத்திலிருந்த ஆந்தை, அந்துவன்சாத்தான், ஆதனழுஞ்சி, இயக்கன் முதலாயினோர்.

முன் தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனேடுபோர்புரிந்து தோறறேழிந்த சேர சோளருள்ளிட்ட அரசரெழுவரிலொருவனும், பொதிகைமலைச்சார்

பிணையிடமாகக்கொண்டு வாழ்ந்தவனுமானசுதிதியனென்னும் சிற்றரசனை இப்பாண்டியன் வென்றிருக்கின்றான். ஆதலினவன் அந்நெடுஞ்செழியன் காலத்திற்குச் சிறிது பிற்பட்டவனுகவோ அல்லது சமகாலத்தவனுகவோ இருக்கவேண்டுமென்று நினைக்கப்படுகின்றான்.

இப்பாண்டியனுக்குப் பூர்வபுண்ணிய விசேஷத்தால் ஓர் மனைவி வாய்க்கப்பெற்றாள். அவள்பெயர் கோப்பெரும்பெண்டு என்பது. இவள் கற்பினும், கல்வியினும், கவினினும் ஒப்புயர்வற்ற உத்தம பத்தினி. காதலனைக் கணப்பொழுதும்விட்டுப் பிரியாது அடுத்திருந்து வேண்டும் பணிவிடைகளைப்புரிதலே தனக்குரிய விரதமாகக்கொண்டொழுகிவந்தவளென்றே சொல்லலாம். கர்மவசத்தால் பூதப்பாண்டியன் காலம் செல்லவே, இப்பத்தினி அக்காதலனைப்பிரிந்த வேதனைக்கு ஆற்றுதவளாய்க்கனலிற்பாயச் செல்லுகையில் ஆங்கிருந்த பெரியோர் பலரும் அவளை, அவ்வாறு செய்தல் தகாதெனக்கேட்டுக்கொள்ள, அதற்கு அவள் அவர்களைநோக்கிச் சிறிது சினங்கொண்டு மற்றையப்பெண்களைப்போல் நானும் கணவனையிழந்து கைம்மைவிரதங்காத்துக்கணமுமுயிர் தரித்திருக்கமாட்டேன். அன்பனுடன் மாய்தலையே அவாவினேனென்னும் பொருள்படுவதான “பல்சான்றீரே” என்ற பாடலைப் பாடிவிட்டுத் தாமரைத் தடாகத்திற்பாய்வதுபோல் தீயிற் பாய்ந்தனள். இவளைப்பாடியவர் மதுரைப் பேராலவாயனர்.

இப் பூதப்பாண்டிக்கு வடபால் சிறிது தூரத்தில் அழகபாண்டியபுரம் என்றோர் சிற்றூரிருக்கின்றது. இவ்வூரும் இப் பாண்டியன் வம்சத்தாலேயே ஏற்பட்டிருக்கவேண்டும்.

17-வது

அரிகேசரி மாறவர்மன் அல்லது

கூன்பாண்டியன்.

இப்பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் குமாரன். நெடுமாறன் எனப்படுவானும், அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராய் விளங்காநிற்கும் நின்றசீர்நெடுமாறநாயனர் எனப்படுவானும் இவனேயாவன். நெடுஞ்செழியனுக்கு வெகுகாலம் சந்ததியில்லாமலிருந்தமையால் அவன் நோன்பிருந்து கடவுள் கிருபையால் இச்சிறுவனைப் பெற்ருன். இவன் சிறுபருவத்திலேயே பல இடங்களிலும் சென்று போர்செய்ததாய்த் தெரிகின்றமையால், இவன் பிதாவாகிய செழியன் இவனை இளம்பிராயத்திலேயேவிட்டுப்பிரிந்திருக்கவேண்டுமென நினைக்க இடமாயிற்று. "பல இராஜ்யங்களடங்கிய பெரிய பூபாகத்துக்குத் தலைமைவாய்ந்திருப்பவன் பாண்டியராஜவம்சத்திலுதித்த ஓர் சிறுவனே" எனக்கேள்விப்பட்டவுடன்,பண்டுசெழியனது சேவடிவணங்கித்திறையளந்துவந்த தேசத்துமன்னர் பலரும் தாந்தாமே தங்கள் இராச்சியத்திற்குத் தலைவரெனத்தருக்குற்றுச் சிங்காதனமேறலாயினர். இவர் இங்ஙனமானதே நெடுமாறன் பலவிடங்களிலுஞ்சென்று கடும்போர் புரிதற்குக் காரணமாயிற்று.

காளைப்பருவம் கழிவதற்குமுன்னரே நெடுமாறன் தனது தந்தையால் ஆளப்பட்டுவந்த நாடுகளோடு பிறநாடுகளையுந் தன்னடிப்படுத்தக்கருதிச் சேனைகளைப்பெருக்கிக் கொண்டான்.

போர்முகத்தில் எதிரிகளைக்கொலை புரியவும், சிறைப்படுத்தவும் வல்லவரான குலைச்சிறை என்னும் பெயருடையவல்லாரொருவரைத் தனது அந்தரங்கமான மந்திரத்தலைவராகவும், தந்திரித்தலைவராகவும் இருக்கும்படி கேட்டுக்கொண்டான். பகைவர் வந்து தாக்காதபடி தலைநகராகிய மதுரையைச்சூழ மூன்று கோட்டைகள் கட்டினான். பலவிதமான காவற்படைகளையு மேற்படுத்தினான். நல்ல வேளை நோக்கிப் போர்க்கோலங்கொண்டு தேரேறிப்படைகள்புடைநெருங்க வடதிசையைநோக்கிப் புறப்பட்டான். செல்லுகையில் சோழ மன்னவனுக்குரிய காவிரிப்பூம்பட்டினத்தை முற்றுகையிட்டான். அதுகண்டு அந்நகர்வேந்தனும் சேனையுடன் வெளிப்பட்டுச் சண்டைதொடங்கினான். இருபடைகளும் கைகலந்தன. முடிவில் சோழன் படைகளெல்லாம் நாசமுற்றன. உறவே சோழனுஞ் சோர்வுற்று அம்மதிக்குலக் காதலனின் கர சர வேகத்தைக் கண்டு பெரிதும் நடுநடுங்கிச் சிறிதுநேரம் பிரமித்துநின்றுவிட்டுப் பிறகு அவனைநோக்கி "பாண்டியராஜ குலாதிபனே! உன்னுடைய வல்லமையை நான் மிகவும் மெச்சினேன். விற்போரில் எத்துணையோ மன்னவரைப் பின்காண ஓட்டிய என்னைச் சில பொழுதில் வெங்காணும்படி செய்துவிட்டனை. இனி இந்த உலகமுனக்கேஉரியதாவதன்றிவேறில்லை. மேலும்உன்னுடைய இளமையும், அழகும், அறிவும், தோற்றமும் என்னை இளக்கி உனக்கு அடிமையாகுமாறு செய்துவிட்டன. ஆதலால் நான் உன்னிடத்தில் விசேடமான சமாசாரமொன்றைச் சொல்ல நினைக்கின்றேன். அவ்விஷயம் உனக்கும் எனக்கும் இம்மையோடு மறுமைக்குரிய நன்மைகளையெல்லாம் இலகுவில அளிப்பதாகும்; இதற்கு ஐயமேயில்லை; கேட்பாயையா," எனவும்,

அடுத்திருந்த அதிமேதாவியான குலேச்சிறையார் அதனை உரைக்க என்ன, சோழன், "எனக்கோர் கன்னிகை இருக்கி ருள்; அவள் அழகினும், அறிவினும், ஒழுக்கத்திலும், மற்று முள்ள நற்குணங்களிலும் திருமகளை ஒத்தவள். இப்படிப் பட்டவளை உமது மன்மகனுக்கே தாரைவார்க்க நினைக்கின் றேன், பெறச்செய்வீராக" என்ருன். என்று இவன் சொல்லி வாய்மூடுமுன் நன்னிமித்தங்கள் பல அக்குலேச்சிறை யார்க்குத் தென்பட்டன. அதனலவர் மதிக்குலக்காதலனை அடுத்து, "அரசே! இப்பொன்னிவேந்தன் புகன்றபடி அவன் கன்னிகையை மணந்துகொண்டால் அவ்வுத்தமியின் சேர்க் கையால் இரண்டிடத்துக்கும் வேண்டும் நன்மைகளெல்லா வற்றையும் தாங்களடையவே செய்வீர்கள். இதற்கைய மின்று. எனக்கு இங்குத் தென்பட்ட சுபசகுனங்களா லேயே நான் இவ்வாறு கூறுகின்றேன். மேலும் தாங்கள் முதற்கண் பொன்னி நாடனுடன் தொடங்கிய கன்னிப்போ ரில் ஓர் அழகிய கன்னிகை உமக்கு கிடைக்கின்ருள். இவ ளைச் சாதாரணமானவோர் பெண்ணென்று கருதற்க. பாற் கடல் திருமாலுக்கோர் பாவையையளித்ததுபோல், இப் போர்க்களமும் உமக்கோர் பொன்னனையாளைப் பொருந்த அளிக்கின்றதென்றே நினைக்கின்றேன். அன்றியும், வலிய வந்த சீதேவியை வேண்டாமென்று தள்ளுதலும் தகாத காரி யமாகும்" எனலும், பாண்டியன் மணமுடிப்ப மனமிசைந் தான்.

உடனே அவ்விடத்தில் வெற்றி முரசோடு மணமுரசும் முழங்கலாயின. சோழன் பாண்டியனையும், குலேச்சிறையா ரையும், மற்றுமுள்ள பிரதானிகளையும் அழைத்துச்சென்று

நகர்வலம் கொண்டு அரண்மனையிற் புகுந்து உபசரித்துத் தனது அருமைக்காதலியை அலங்கரித்துக்கொணரச் செய்து பாண்டியனை நோக்கி, "இவள்பெயர் மாதேவி என்பது. இவளைக் கைக்கொண்டருள்க" என்றுரைத்து அவன் கையில் தாரை வார்த்தான். அடுத்திருந்த குலச்சிறையார் "இப்பெண்மணி பாண்டிய குலத்தரசனின் பத்தினியாகிவிட்டபடியால், இன்று முதல் இவள் பெயர் 'பாண்டிமாதேவி' என வழங்கக்கடவது" என்றார். எனவே அங்கிருந்த பெரியோர் யாவரும் ஆசிர்வதித்தனர். மங்கையர்க்கரசியென்னும் பெயரும் இவளுக்குண்டு. அப்பால் அரிகேசரி தனதுமனைவியை மாமன் வீட்டிலேயே இருக்கும்படி செய்துவிட்டு மற்றுமுள்ள இடங்களையும் வெற்றிகொள்வான் புறப்பட்டான்.

பூவலமாக முதற்கண் கடற்கரைப்பட்டினமாகிய * விழிஞம் என்னும் பட்டினத்தைபடுத்தான். அடுக்கவே அதற்குரிய காவலனான வானவன் (சேரன்) சேனைகளோடு முற்பட்டுப் போர் புரிந்தான். அரிகேசரியும் தீராச் சினங்கொண்டு சிலநேரம் அவனுடன் பொருது அந்த வானவனை வானவர் எதிர்கொண்டழைக்கும்படி செய்துவிட்டான். அப்பால் அடுத்துள்ள பூலந்தைச்சேரனையும் காலன் வசமாக்கினான். இப்படியே நதிசங்கமத்திலும், கடற்கரைகளிலும், உள்நாடுகளிலுமுள்ள தெற்குச்சேவூர், நறையாறு, கடையல், செந்நிலம்முதலான இடங்களிலிருந்த சேரநாட்டுக் குறும்பர்களையெல்லாம் போரிலடர்த்து அவர்க்குரியவைகளைக் கவர்ந்துகொண்டு ஜெயபேரிகை முழங்க மீனக்கொடியை ஆங்காங்கு

* விழிஞம்: திருவனந்தபுரத்துக்கு 7 மயிலுக்கு தெற்கேயுள்ளது.

வானளாவ நிலைநாட்டினான். பிறகுமவன் தென்பாழி, வேண் மாத்தூர், களத்தூர், வல்லம், வஞ்சி வேந்தனுக்குரிய கோட்டாறு நாட்டாறு, சங்கமங்கை, சேவை, முசிறி, குளந்தை, இருஞ்சிறை இவைகளிற் போருக்கெழுந்த புரவலர்களையும், புறங்கண்டு அவர்களுடைமையெல்லாம் தனதாக்கிக்கொண்டனன். அப்பால் நெல்வேலி, (திருநெல்வேலி)யை ஆண்டு கொண்டிருந்த வில்வேலி என்பானைச் சேனையுடன் பிறப்பட்டொழியவென்று அப்பதிக்கும் தானே ஓர் பதியானான். இந்த வில்வேலி என்பவனைச் சிலர் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள வில்வலம் (வில்லிவலம்) என்னும் ஊருக்குத் தலைவனான ஓர் பல்லவன என்பர். வேறு சிலர் இவனை ஓர் சேரனென்பர். இவன் சாமான்யப்பட்டவனில்லை. ஒரு காலத்தில் சோளனையும் மாளப்பொருதவன்.

அப்பால் இந்த அரிகேசரி மாறவர்மன் வடநாடுகளிலும் பிரவேசித்துப் பல வேந்தர்களையும் வென்று திறையளக்குமாறு ஆக்கினையிட்டான். இமயமலையையடுத்து அதன் உன்னதமான சிகரத்தில் தனது கொடியாகிய மீனத்தை வரைவித்துத் தெக்கணம் நோக்கித் திரும்பினான். வரும் வழியெல்லாம் மன்னவர் பலரும எதிர்கொண்டழைத்துபசரிப்பப் பன்னாட் பிரயாணஞ்செய்து சோழநாடடைந்து மனைவியாகிய பாண்டிமாதேவியையும் உடன்கொண்டு பழம்பதியான மதுரையில் வந்துசேர்ந்து நிறைகோலன்ன நீதி தவறாது அரசியற்றிவரலானான்.

சில காலஞ்செல்லக் காலகதியால் இப் பாண்டியனுக்கு நோயொன்று கண்டது. அந்நோயாவது குறுக்கு வளைந்து

போதலாகிய கூனலென்பதே. இவன் நெட்டையான சரீரத்தையுடைய நெடுமாறனாதலால் இவனுக்கு இந்த வியாதி வருதல் சகஜமே. சிலகாலத்துள் இக்கூனல் நோய் இவனை வில்லைப்போல்வளைத்துக்கூன்பாண்டியனென்று கூறும்படிசெய்துவிட்டது. தனது அழகையும், ஆற்றலையும் அடியோடொழித்துப்போட்ட அந்த அநியாயக் கூனல் நோயைப் போக்க அந்தப் பாண்டியன் உண்ணாத மருந்துமில்லை. செய்யாத பரிகாரங்களுமில்லை. என்னசெய்வான் பாண்டியன்! நாளுக்குநாள் உள்ளமுமுடலுஞ் சோர நைந்துகொண்டிருந்தான்.

இவனிப்படியிருக்கையில் காஞ்சி, யானைமலை முதலான இடங்களிலிருந்து வந்த சில சமண முனிவர்கள் அக்கூன் பாண்டியனையடுத்து, "நாங்கள் சொன்னபடி கேட்டு நடந்தால் இக்கூனைச் சில பொழுதிற்போக்கிவிடுவோம்" என்று உறுதிகூற அரசனும் அதற்கிசைந்தான். உடனே சமணர் அவனைத் தம் மதத்திற் சாரச்சொல்ல, அவனும், மனைவியும், மந்திரியும் எவ்வளவோ தடுத்துச் சொல்லியுங் கேளாமல், அப் புறச்சமயத்திற் புகுந்தனுட்டிக்கலாயினன். ஆகவே சிவபிரானதி திருக்கோயில்களெல்லாம் அடைபடலாயின. பறிதலையும், பாயுடையும், மாசுடம்பும், மயிற்றோகையுமுடைய அமணர்கூட்டமே அப்பட்டணத்திலுள்ளும் புறம்புமிகுவதாயின. அரசன் அமணனாகவே குடிகளிற் சிலரும் அம்மதத்திற் சேரலாயினர். "மன்னனெப்படி மன்னுயிரப்படியல்லவா"? காட்டுத்தீபோன்ற அச்சமணமதம் கன்னிநாடு முழுவதிலும் பரவிவிடும் போலிருந்தது. இதுகண்டு பொறாத அமைச்சரும், மங்கையற் கரசியாரும், மற்றுமுள்ள அறிவாளிகளும் ஆற்றொணாத்துன்பத்தழுந்திச் செய்வதொன்

றுந்தோன்றுதவராய்த் திகைத்துக் கொண்டிருக்கையில், "சீகாழி" என்னுந்தலத்தில் தேவாம்சமாயவதரித்தருளிய ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி என்பவர் சகல சித்திகளும் கைவந்தவ ராய்ச் சிவஸ்தலங்கள்தோறுஞ் சென்று திருப்பதிகங்கள் பாடி, பலமத வாதிகளையும் வாயடக்கிச் சைவஸ்தாபனஞ் செய்துவருகின்றனர்" என்ற விஷயத்தைக் கேள்விப்பட்டு அவரை ஆளவிட்டழைக்க அவரும் அதிசீக்கிரத்தில் மது ரைக்கெழுந்தருளினர். அமைச்சர் அந்தச் சம்பந்தரை எதிர் கொண்டழைத்துப்போய் ஒரு மடாலயத்திருக்கச் செய்து வேண்டுவன உதவினர். ஒருநாளிரவு அரசன்மனைவியாரும், அமைச்சரும் சம்பந்தரிருக்குமிடத்திற்சென்று வணங்கி, சம ணரால் வந்த கேடுகளையெல்லாமெடுத்துரைத்து, "அவர்களை அதிசீக்கிரமழித்தருளி பண்டுபோல் பூதிச்செல்வம் இப் பாண்டி நாடெல்லாம் பளபளக்கும்படி செய்வதோடு நராதி பனையும்நல்வழிப்படுத்தவேண்டு"மெனப்பிரார்த்திக்க அவரும் அவ்வாறேசெய்வோமென உறுதிகூறி அவரையனுப்பினர். நடுராத்திரியானதும் அச்சமணர் சம்பந்தரிருக்கும் மடத் தின் கூறையில் எரியிட அது படர்ந்தது. அதுகண்ட காழி யர்பிரான் அம்மடத்தினின்றும் பரிவாரங்களுடன் வெளிப் பட்டு அவ்வக்கினியை அந்த அரசன் அங்கத்திற்புகுமாறு ஏவ பாண்டியனுக்குச் சுரங்கண்டது. காணவே அவன் தீயினால் வெந்தவன்போல் அலறிப்புலம்பிக் கிடைகொள்ளாதவனாய்த் தபிக்கலானான். அச்சுரத்தைப்போக்க அமணர் தம்மாலான வரை பார்த்துமுடியவில்லை. பிறகு சம்பந்தரழைக்கப்பட் டார். அவர் அக்கணமே அவ்வரசனை வாட்டிக்கொண்டி ருந்த விஷசுரத்தோடு கூனையும் ஒருசேர நிவர்த்திசெய்து

"நின்றசீர் நெடுமாறன்" என உலகெலாம் புகழும்படிசெய்து விட்டார். பிறகவர் சமணரை வாதில் வென்றழித்தார், சில காலத்தில் சீகாழிக்கு மீண்டார். இச்சரிதம் பெரியபுராணத்தை யாதாரமாய்க்கொண்டு வரையப்பட்டது.

இறையனர் அகப்பொருளிலக்கணத்துக்கு உரைகண்டருளி அதற்கு வேண்டும் உதாரணங்களுக்கு இந்த அரிகேசரி மாறவர்மன் கோவையையே எடுத்துக்காட்டிய, மதுரைக் கடைச்சங்கத்துக் கணக்காயனர் மகனர் நக்கீரனராலும், மதுரைமருதனிள நாகனராலும், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனராலும், ஆவூர்மூலங்கிழார், வடமவண்ணக்கன் பெரிய சாத்தனராலும்; (புறநானூற்றில்) பாடப்பட்ட இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய பாண்டியன் நன்மாறனென்பானும்; இந்நெடுமாறனும் ஒருவனயிருக்கலாமென சிலர் கூறுகிற்கின்றனர். ஆனல் மேற்கூறிய புலவர்கள் பாடியபாடல்களில் இந்த அரிகேசரி நெடுமாறன் வீரச்செயல்களேனும், சரித்திரக் குறிப்புக்களேனும் ஒருசிறிதுங் காணபதற்கில்லை. அப்பாடல்களெல்லாம் பொதுப்படையான வாழ்த்துக்களாகவே இருக்கின்றன. அவைகளும் இவனுக்குரியன ஆயின் இந்நெடுமாறன் சீர்த்தி இன்னும் நெடியதேயாகும்.

இந்த அரிகேசரி மாறவர்மன், இந்திரன் மூத்து மாலையாலலங்கரித்த மார்பையுடைய உக்கிரகுமார பாண்டியனின் சரியான சந்ததியேயாவன். எல்லா நற்குணங்களும் பொருந்தியவன். மகா வீரன். தனது ஆளுகைக்குட்பட்ட நாற்றிசை

களிலும் மீனக்கொடியை நிலைநாட்டியவன். பைம்பொன் மாலையோடு கோவையென்னும் பசுந்தமிழ் மாலிகையுமணிந்து கொண்டவன். இரணிய கர்ப்பமும், துலாபாரமும் பலமுறையுஞ் செய்திருக்கின்றனன். இவன், பகைவரை அடக்கி ஆண்டதால் பராங்குசன் என்றும், விரோதிகளாகியகரிக்குலங்களைச் சிங்கம்போன்றழித்தவனாதலின் அரிகேசரி எனவும், சத்துருக்களை நாசஞ்செய்தவனாதலின் சத்துரு துரந்தரன் எனவும், வெற்றிப் பிரதாபங்களை முழக்கும் வரலாற்றையுடையவனாதலின் விஜய சரித்திரன் எனவும், ஆஜானுபாகுவாய் நெடுமையான சரீரமுடையவனாயிருத்தலின் நெடுமாறன் எனவும், அழகும், இனிய குணமுமுடையவனாதலின் உசிதன் எனவும், இவன் பிதாவாகிய நெடுஞ்செழியன் வெகுநாள் பிள்ளையில்லாமல் வரங்கிடந்து பெற்றெடுத்த பிள்ளையாதலின் வரோதயன் எனவும், விசாரிதன் எனவும், வானவன், சேரலன் எனவும், அரிகேசரி அசமசமன் எனவும், பெயர்கள் பல பூண்டிருக்கிறான். இவனைப்பற்றிக் கூறும் நூல்கள் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியன. தமிழையுந், தமிழ்ப் பாவலர்களையும், ஆதரித்த பாண்டியரில் இவனும் ஒருவன். பரிசுத்தமான சைவன். பூர்வ புண்ய விசேஷத்தால் நின்றசீர் நெடுமாற நாயனார் என்னும் திருநாமத்தோடும், குலச்சிறையாரோடும், மங்கையர்க்கரசியாரோடும் அறுபத்து மூன்று நாயன்மாருள் விளங்கும் பெரும்பதவி வாய்த்தவன்.

பிற்காலத்தில் ஓர் பாண்டியன் திருநெல்வேலி மேல ரத வீதிக்கு மேல் புறத்தில் ஓர் கோயில் நிர்மித்து அதில் நின்றசீர் நெடுமாற நாயனாரைப் பிரதிஷ்டித்து நித்திய நைமித்தியாதி பூசைகளுக்கு வேண்டும் ஏற்பாடுகளுஞ்செய்வித்திருப்ப

தாக மேற்படி நெல்லையப்பர் கோவிலிலுள்ள சிலாசாசனம் ஒன்று கூறுகின்றது. இவன் காலம் (கி. பி 650 முதல் 680) வரையாகலாமென்பர்.

18-வது

பாண்டியன் கோச்சடையன் இரணதீரன்.

இப்பாண்டியன் பெயர்ப்பொருளின்படி செய்கையில் லாதவனென்றே தெரிகின்றான். இவன் தனது தந்தை வென்றுகொண்டு கோலோச்சிவந்த நாடுகளையெல்லாம் ஒரு குடைநிழலிற் குளிரச்செய்து இனிது வாழ்ந்து வருகையில் தன்னுடைய முன்னோராற் கைப்பற்றப்படாது அலக்ஷியஞ் செய்து விடப்பட்ட ஆங்காங்கு ஒதுக்கிடங்களிலுள்ள சிற்சில இராஜ்யங்களையும் தன்னடிப்படுத்த வேண்டும் என்று ஆசைகொண்டு முதற்கண், சேரநாட்டுக் கடற்கரையோரத்திலுள்ள சிற்றரசர்களை வென்று வானவன் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டான். அவ்வாறே சோழநாட்டிலும் பலஇடங்களைத் தனக்குட்படுத்திச் சோழன் என்ற அபிதானத்தையுமணிந்தான். பிறகு கொங்குநாட்டிலும் திரண்ட சேனையுடன் சென்று வெற்றிக்கொடிநாட்டிக் கொங்கர்கோன் என்ற பெயரும் புனைந்து மீண்டனன். மற்றொரு காலத்தில் இவன் மருதூரிலும் செங்கோடு புதான்கோடு என்ற இடங்களிலும் எதிர்த்த அரசர்களின் வலிமையடங்கப் போர் செய்திருக்கிறான்.

மங்கலபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மகாராஷ்டிர ரென்று நினைக்கப்படும் மகாரதராகிய மேலைச் சாளுக்கி வேந் தருளொருவன், முன் கூன்பாண்டியனாற் போரில் அவமானப் படுத்தப்பட்டிருந்தனன்போலும், அவன், மரணத் தருவாயில் தன்மகனாகிய விநயாதித்தனையும், அவன்மகனாகிய விஜயாதித் தனையும் அருகிலழைத்து, "என்னைவென்று எளிமைப்படுத் திய அந்த நெடுமாறன் சந்ததியை நீவிர் போர்செய்து வென்று அவமானப்படுத்தல் வேண்டும். அப்படிநீர் செய்வதாய் உறுதி கூறுங்கள். இவ்வுறுதிமொழியைக் கேட்ட பின்னரே, எனது ஆத்துமா சாந்தியுறுவதாகும். இதுவே நீங்கள் எனக்குச்செய் யும் முதன்மையான பிதுர்க்கடமை," என்றவுடன், அப்பிள் ளையும் பேரனும் அவ்வாறே உறுதிமொழி கூறியிருத்தல் வேண்டுமென நினைக்கப்படுகிறது. தகப்பன் காலஞ்சென்றது முதல் விநயாதித்தன் போருக்கு வேண்டும் கருவிகளையெல் லாம் பெருக்க முறச்செய்துகொண்டு வந்தான். இதனைக்கேள் வியுற்ற இரணதீரன் அந்த விநயாதித்தனது நாட்டு எல்லை வரையுள்ள தனக்குட்பட்ட அரசர்களை எல்லாம் அவனுடன் போர் தொடங்குமாறு கண்டிப்பான லிகிதங்களையனுப்ப அவர்களும் ஒருவர்பின் ஒருவராய் அந்த விநயாதித்தனுடன் செருச்செய்யலாயினர். சில பொழுதில் இவர்கள் யாவரும் தோற்றோடிவிட்டனர். முடிவிற் பாண்டியன் இரணதீரனுந் தோல்வியுற்றான். இச்சமர் மங்கலபுரத்திலேயே நடந்ததாக நினைக்கப்படுகிறது. காலவேற்றுமையால் இரணதீரன், போரில் இளைத்தானாயினும் விநயாதித்தனுடைய படைகளிற் பெரும் பாகமும் பாழ்பட்டன. அதனால் அவனும் பலங்குறைந் தவனாகவே போய்விட்டான். இவர் இப்படியாகவே அங்கி

ருந்த சில முதியோரும், தராதிபருமொன்றுகூடி அவ்விரு வேந்தரையும் சமாதானப்படுத்தினர். அப்பால் பண்டுபோல் வரம்பு கடவாமல் அவரவர் இராஜயத்தை அவரவர் பரிபாலித்துவரலாயினர்.

இவன் உள்ளது கொண்டு திருப்திபடையாதவன். பேராசையாற் பெரிதும் பெருமைக்கு ஆபத்தை விளைவித்துக் கொண்டான். எப்பொழுதும் பகடை பன்னிரண்டு போடுமென நினைத்தான். இவன் காலத்தில் கல்வி, செல்வம், இராஜரீகம், வியாபாரம் முதலியவைகளின் நிலைமை இன்னபடி இருந்ததெனத் தெரிவதற்கேற்ற சாதனங்கள் கிடைக்கவில்லை.

கடைசிக் காலத்தில் இப்பாண்டியன் நோயால் இளைத்தான். அக்காலத்திலேற்பட்ட பஞ்சத்தால் இவனுடைய பொக்கிஷமெல்லாங் குறைபட்டன. படைப் பெருக்கமும் பெரிதுங்குன்றியிருந்தது. இவைகளையறிந்ததும்பகைவராகிய கொங்கு § கங்கவேந்தரும், பிறரும் எதிர்க்கவர இவனும் அவருடன் சண்டை தொடங்கினன். இப்படி நடந்து வரும் போர் நடுவில் இரணதீரன் வியாதியால் இறந்தான். அப்பால் அவன் மகன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் பட்டத்திற்கு வந்தான். இவன் காலம் (கி. பி. 680 முதல் 710) வரை என்பர்.

---

§ கங்கவேந்தர்:- மைசூரின் வடபாகத்திலிருந்த ஓர் இராஜ வம்சத்தவர்.

19-வது

அரிகேசரி பராங்குச மாறவர்மன்

(அல்லது)

1-வது இராஜ சிம்மன்.

இப்புரவலன் பாண்டியன் கோச்சடையன், இரணதீரனின் புதல்வன். இவன் தன் தகப்பனுக்குப் பின் சிங்காசனமேறினன். ஏறினதும் தக்கபடி சேனைகளையும், சேனைத் தலைவர்களையும், வேண்டும் போர்க் கருவிகளையும் நிரம்பப் பெருக்கிக்கொண்டு, தனது தந்தை தளர்ந்த காலத்திற் கைவிட நேர்ந்த நாடுகளோடு பிற நாடுகளையுங் கைவசப்படுத்தத் தீர்மானஞ்செய்துகொண்டான்.

முதன் முதல் தனது இராஜஸ்தானமான மதுரைக் கோட்டை பழமைப்பட்டுப் பலஹீனமாயிருத்தலைத் தெரிந்து அதனைப் பலமுறப் புதுக்கினன். பலிஷ்டர்களைத் தலைவராகக்கொண்ட ஓர் பெருஞ்சேனையை அந்த நகரத்தை இரவும் பகலுஞ்சூழ்ந்து காத்திருக்குமாறு ஏற்பாடு செய்தான்.

அப்பாலவன் சரியான காலத்திற் பல படைகளுடன் வெற்றிப்பறை முழங்க வெளிப்பட்டு, சேர சோழ வேந்தர்களை அச்சுறுத்தி அவர்களை அரசுரிமையினின்று நீக்குவித்துத் தக்க பிரதிநிதிகளை நியமித்தான். சேரனுக்குரிய திருவஞ்சிக்களத்திலும், சோழன் தலைநகராகிய உறையூரிலுமுள்ள வெகு புராதனமான கோட்டைகளையெல்லாம்

நல்லவண்ணம் பலமுறைப் புதுப்பித்தான். ஆங்கு பல்லாயிரக் கணக்கான படைகளை ஸ்திரமாயிருக்கும்படி செய்து பக்கத்திலுள்ள அரசர்களையெல்லாம் தலையெடுக்க வொட்டாதபடி செய்தான். பிறகு தனது தந்தை அந்தியகாலத்திற் போராடி முடிவு பெறாத போராட்டத்தையும், எல்லைகாணத் துணிந்து கொண்டவனாய் அலைகடலையொத்த படைகளுடன் கொங்கு, கங்க அரசர்களை எதிர்த்துப் பலநாட் பொருது அவர்களை அடக்கி அவர் தம் நாடுகளிலுள்ள நவநிதிகளையும் வாரிக் கொண்டான். அவ்வேந்தர்களையும் வெறுங் குறும்பராக்கினான். பிறகு காவிரியாற்றைக்கடந்து மழகங்க நாட்டை அலமரப்பொருது அதற்குரிய முடிமன்னனைத் தனக்கு அடிமையாகக்கொண்டு அவனிடத்துள்ள திரவியக் குவியல்களை வவ்விக்கொண்டான். அப்பால் அங்குள்ள திருப்பாண்டிக் கொடுமுடி யென்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய ஸ்ரீ பசுபதிக்கடவுளை வலம் வந்து வணங்கி, தான் பகைவர்பாலபகரித்துக்கொண்ட பொற்குவியல்களையும், இரத்தினவகைகளையுங் காணிக்கையாக நல்கி வழிபட்டு, உபாசனாமூர்த்தியாகக் கொண்டு சில நாள் அங்குத்தங்கியிருந்தான்.

துலாபாரமென்று சொல்லப்படுகிற தன் எடைக்குச் சரியான பொற்கட்டிகளை ஆபரணங்களாக்கி அச் சிவபிரானது திருமேனியைப் பொதிவித்தான். இரண்ய கர்ப்பமும், கோசகஸ்திர தானங்களும் செம்மையுறச்செய்தான்.

இப்பாண்டியனுடைய பிதாவின் முடிவு காலத்தில் தலைநிமிர்ந்து இவனுக்கு முக்கிய விரோதிகளாய் ஓயாது போர் புரிந்து வந்தவர்கள் பல்லவர்களே. இவர் பலரும் பலிஷ்டரு

பாவர். மகாவீரனுகிய பல்லவ மல்லனென்பவன் இவர்க்குத் தலைவன். இவன் காவிரி நதிக்குத் தென்பாலும் நெடுந்தூரம் வரை வந்து வியாபித்து ஆங்காங்கு ஆளுகையை ஸ்திரப்படுத்தினவனுக எண்ணப்படுகிறுன். இப்பல்லவர் தலைவனை, இப்பாண்டியன் குழும்பூர், சங்கமங்கை, நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, பூவலூர், திருமங்கை, கொடும்பாளூர், பெரியலூர் என்னுமிடங்களிற் பற்பல முறையும் சண்டை செய்து வெற்றி பெற்றிருக்கின்றுன், என்றுலும் பல்லவர், மீண்டும் மீண்டும் இவனுடன் சண்டை செய்து கொண்டே இருந்ததாகவுந் தெரிகின்றது. இப் பாண்டியனுக்கு இப்பல்லவர் பகை அடியற ஒழிந்துவிட்டதாக நினைப்பதற்கில்லை.

மேற்கூறிய பல்லவர் வசப்பட்டிருந்த ஊர்களிற் பல சேர, சோழ, பாண்டியிலுமுள. ஆதலின் பல்லவர் ஆட்சி முத்தமிழ் நாடுகளிலும் புகுந்து நிலவியதாக நினைக்க இடமாயிற்று. ஒருவாறு பகை தொலைத்து வடபாலுள்ள தொண்டை, கொங்கு முதல் முத்தமிழ் நாடுகளையும் தனக்குரிமையாக்கிக்கொண்ட பாண்டியன் இவ்வரிகேசரி மாறவர்மன், தனது தலைநகராகிய மதுரைமாநகரை நோக்கி வருகையில் இவனுடைய வல்லமை, கல்வி, செல்வம், இளமை ஆகிய இவைகளை நேரிற் கண்டுகளித்த மாளவதேசாதிபதி அருமையும், அழகும் வாய்ந்த தனது கன்னிகையை இவனுக்குத் தாரை வார்த்து நல்க, பாண்டியனும் அப்பெண்ணுடன் இனிது இல்லற வாழ்க்கையை நடத்திவந்தான். வருகையில் ஜாதிபன் என்னும் ஓர் பிள்ளை இத் தம்பதிகளுக்குப் பிறந்ததாகவும் தெரிகிறது. ஆனுல் இந்த, "மாளவ கன்னிகையைப் பாண்டியனது பட்டமகிஷி" என்று நினைப்பதற்கில்லை.

இப் பாண்டியன் மதுரையை நோக்கி ஜெய பேரிகை முழங்க அதி விசித்திரகரமான தேரின்மேல் வீற்றிருந்து வந்துகொண்டிருக்கையில் அக்கூடற்பதி முழுதும் வெகு குதூகலத்துடன் இவனை எதிர்கொள்ளும் காலத்தில் ஆங்கிருந்த சில பெரியோர், தேரின்மேல் வரும் பாண்டியன், தேவேந்திரன்போல் விளங்குவதைக் கண்டுகளித்தவராய் அவ்வேந்தனை நோக்கி ஆசீர்வதித்து, "வேந்தே! இன்று முதல் உனக்கு 'தேர்மாறன்' என்ற பெயரும், பல்லவசேனை என்னும் யானைக்கூட்டங்களின் தொல்லையைத்தொலைத்து ஜெயத்துடன் மீண்டதினால் இராஜ சிம்மன் என்ற அபிதானமும் வழங்கக் கடவன" என அரசனும் அவைகளை ஏற்றுக்கொண்டகங்களித்தனன். இவனையுமோர் இராஜ சிம்மன் என்பர்.

பிற்காலத்தில் இப்பாண்டியன் கங்கவேந்தருடன் சம்பந்தஞ் செய்துகொண்டதாகவும், தெரிகிறது. இச் சம்பந்தம் சரியான முறையிலேற்பட்டிருக்குமோ என்பது சந்தேகம் தான்.

இவன் சிவபக்தியிற் சிறந்தவன். சிவாலய கைங்கர்யங்கள் செய்தவன். முன்னோராசாரத்தைப் பின்பற்றி நடந்தவன். கர்ம சிரத்தையுள்ளவன். க்ஷத்திரியருக்குள்ள இலக்கணங்களெல்லாம் இவனிடத்தில் நிரம்பியிருந்தன, என்னலாம். எடுத்துக்கொண்ட காரியத்திற் கண்ணுங்கருத்துமாயிருப்பவன். எட்டி யோசித்தே ஒன்றைத் தொடங்குபவன். தொடங்கிய காரியத்திற்கு இடையூறுபலவரினும் பின்னடையாது விடாப்பிடியுடனதனைச் செய்துமுடிப்பவன். பிரஜை

களால் விரும்பப்பட்டவன். இவன் காலத்தில் நாடுகள் செழிப்புற்றிருந்தனவாகத் தெரிகின்றன. இவன் (கி. பி. 710 முதல் 740 வரை) ஆட்சி செய்திருக்கலாமென்பர்.

20-வது

பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன்

வேள்விக்குடிச் செப்பேட்டை வரைவித்தவன்.

இப்பாண்டியன் அரிகேசரி பராங்குச மாறவர்மனின் மகன். இவன் தனது தந்தைக்குப் பின் அரியணையேறி மூதாதையர்போல் செங்கோல் செலுத்திவந்தான். இரண்டு மூன்று வருடங்கள் செல்லத் தனது தந்தையொடு தீராப் பகைகொண்டு ஓபாது செருச்செய்து வந்த கொங்கு நாட்டு மன்னவரை வெல்லவேண்டுமெனக்கருதி பெரும்படையொன்றைத் திரட்டி, அதற்குத் தலைமை வகிக்கவும், போர் செய்யுமுறைகளைக் கற்பிக்கவுந் தகுதியான ஒருவரைப் பன்னாள் வரை நாடி அரிதிற் கண்டுகொண்டான். அவர்தான் யாரோவெனின், மதுரகவியாரென்பவரே. இவர் மகா பண்டிதர்; கலைகள் பல கைவந்தவர். பெயருக்கேற்றபடி பாசுரமியற்றும் பாவலர் சிரோமணி. அதியற்புதமான பிரசங்கி. இவரால் இயற்றப்பெற்ற "கண்ணிநுண்" என்னும் தொடக்கத்தையுடைய பதிகமொன்று நாலாயிரப் பிரபந்தத்துள், மாணிக்க மணிபோற் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இப்படிப்

பட்ட இவர், இப்பாண்டியனுக்குத் தந்திரத்தலைவராகவும், மந்திரத் தலைவராகவுமாயினர். இவர் இப்படி ஆனது இப்பாண்டியன் செய்த பூர்வபுண்ணிய விசேஷமேயாகும். இவர் இவ்வுத்தியோகங்களை ஏற்றுக்கொண்ட காலமுதல் இப்பாண்டியன் ஆட்சி இராமபிரான் ஆளுகையை ஒத்து விளங்கியது.

ஒருநாள் பராந்தக பாண்டியன் தனது முதன் மந்திரியாகிய மதுரகவியாரை யழைத்து, "எனது தந்தைக்குச் சாம்வரை தொந்தரவு கொடுத்தவராய கொங்கர் முதலான வேந்தர்களைக் கடிது சென்றடக்கவேண்டுதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டு" மெனக் கேட்டுக்கொள்ள, அவரும் அதற்கிசைந்து நன்கு பயில்வித்திருந்த படைகள் முன்னடப் பப்பாண்டியனுடன் வடபால் நோக்கிப் பிரயாணப்பட்டார். சேனைகள் காவிரியாற்றைப்படுக்கவே, கொங்கர் குலாதிபனாகிய தகடூர் அதிகமான், பாண்டியன் படையுடன் வருதலை ஒற்றராலறிந்து, தானுஞ் சேனைகளைச் சித்தஞ் செய்துகொண்டு, புகலியூர், ஆயிரவேலிமுதலான இடங்களிலிருந்து சண்டை செய்யத் தலைப்பட்டான். இவனுடன் பல்லவரும், கேரளரும், பிறஅரசருஞ்சேர்ந்துகொண்டனர். இச்சண்டை சிலவாரங்களாவது நடந்திருக்கவேண்டும். முடிவில் § காவந்த புரவாணராகிய மதுரகவியார், படை நடத்திய சதுரப்பாட்டினால் அப்பகைவேந்தர் யாவரும், துணைப்படையும், தோள் வலியுமிழந்தவராய் மறைந்தொழிந்தனர். பிறகு அந்த நாடுகளெல்லாம் பாண்டிய பூபதிக்குட்பட்டு விட்டன. தீராக் குலப்பகையைச் செருவில் வென்று வெற்றிமாலையைத் தனக்

§ காவந்த புரவாணர்:- திருக்கோளூர் வாசி.

களித்த அந்த மதுரகவியார்க்கு அப்பாண்டியன் அங்குக் கிடைத்த பொற்குவியல்களையெல்லாம் பரிசாக அளிக்க அவரும் அவைகளை ஏற்றுக் காஞ்சியையடுத்திருக்கிற பேரூரென்னுந் தலத்தில் விஷ்ணுவாலயங்கள் கட்டுவதற்கும், அவைகளில் நித்திய நைமித்தியாதி பூசைகள் நடந்து வருவதற்குமாக நல்கினர். இக்கோயில்களெல்லாம் இவ்வரசன் பெயராலேயே விளங்குகின்றனவாம்.

அப்பால் இப்பாண்டியன் ஆங்குள்ள சிவஸ்தலமாகிய பெண்ணாகடத்திலிருந்த (பல்லவர்) காடவர்களையும், சில குறுநாட்டரசர்களையும் மாளப் பொருது வாகைசூடினன். இஃதன்றி வின்னம், செழியக்குடி, வெள்ளூர் முதலிய இடங்களிலிருந்த குறும்பர்களையும், செருவிற் புறங்காட்டியோடியொளிக்கச் செய்திருக்கிறான். வேணாட்டு (திருவனந்தபுரம்) வேந்தர்களிற்சிலர் பொறாமைகொண்டு தனக்குஞ் சேனைகளுக்குஞ் சில இடையூறுகள் புரிய அதுகண்ட பாண்டியன் அவ்வரசர்களுக்குரிய "‡ விலினம்" என்ற துறைமுகத்தைப் பாழாக்கியதுமன்றிப் போரிலவரை முகம் திரும்பப் பொருது அவர்க்குள்ள களிற்றுக் கூட்டங்களையும், கனகக் குவைகளையுங் கைப்பற்றி விஜய லக்ஷ்மீ சமேதனாய் வெளிப்பட்டு மதுரையையடைந்தான். மற்றொரு காலத்தில் இவன் நாட்டுக் குறும்பு என்னும் பிரதேசத்தில் சில குறும்பர்களையும், ஆய்வேளையும் வென்றிருக்கின்றான். இந்த ஆய்வேளைக் கடையெழு வள்ளலிலொருவனாகிய ஆய் என்று சிலர் மயங்கிக் கூறுவர். இது பொருந்துவதின்று.

---

‡ விலினம்:- விழிஞ்சம்.

வள்ளலாகிய ஆய், பொதிகைமலைச் சார்பில் ஆய்குடி என்னும் ஊரில் வசித்தவன். இந்த ஆய், காவிரிக் கரையிலுள்ளவன். வள்ளற்பட்டமுமிவனுக்கில்லை. வள்ளல் ஆய் கொங்குநாட்டாரோடு போர் செய்து அவரை வென்றவன். மற்றையோன் கொங்கரோடு சேர்ந்து பாண்டியனை எதிர்த்துத் தோற்றவன். இவையன்றி உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைக்கிழார், குட்டுவன் கீரனார் என்னும் பெரும் புலவர்களால் ஆய்வள்ளல் புகழ்ந்து பாடப்பட்டிருக்கிறான். இப்பாண்டியனும் இவன் காலத்தவனேயாயின், இவ்வள்ளலைப் பாடிய புலவர், இவனை வென்றதாகக்கூறும் இப்பராந்தக பாண்டியனைப்பற்றியும் பாடாதொழியாரென்பது திண்ணமே. ஆகையால் நாட்டுக்குறும்பையடுத்த ஆய் வேளும் பொதிகையை அடுத்த ஆய்குடியில் வதிந்துவந்த ஆய் வேளும் வெவ்வேறுகாலத்து வெவ்வேறானவரென்றறிக.

தனது மூதாதையர் பகைவரோடு, தனது பகைவர்களையும் அதிமேதாவியான அமைச்சர் மதுரகவியாருதவியால் வென்று வெற்றிமாலை சூடிய பாண்டியன், கூடலம்பதியில் பீடுறவாழ்ந்துவருங் காலத்தில் மதுரகவியார் தீர்த்த யாத்திரை செய்துவரத் திருவுளங்கொண்டு தன்னுடைய ஸ்தானத்தில் தனது தம்பியை வைத்துப் பாண்டியனிடத்தில் விடைகொண்டு பிரயாணமானார். செல்லும் நெறியிலுள்ள பல தீர்த்தங்களிலும் நீராடி ஆலயங்களையும் சேவித்துப் பழனிப் பக்கத்திலுள்ள ஆனைமலைக்கண் வருகையில் அவ்விடங்களெல்லாம் மிகவும் பரிசுத்தத்தன்மை வாய்ந்திருத்தலைக்கண்டு, அங்கோர் ஆலயம் பணிவித்து நரசிங்கப் பெருமாளை எழுந்தருளிவிக்கக் கருதிப் பொருளுதவி செய்யுமாறு பாண்டியனிடத்தில் ஆள

[library stamp]

னுப்பிக் கேட்க அவனும் ஆயிரக்கணக்கான திரவியங்களை யனுப்பினன். அவைகளைப்பெற்ற அமைச்சர் அந்த ஆனை மலையிலுள்ள ஓர் பெரும்பாறையிற் குகைரூபமாய் அதிவிசித்திர வேலைப்பாடுகளமைய ஓர் கோயிலைக் கட்டலானார். முக்காற்பங்கு வேலை நடந்துவிட்டது. இப்படி யிருக்கையில் மதுரகவியார் தெற்கே தமது ஊராகிய காவந்தபுரத்து (திருக்கோளூர்)க்கு மேல்பாலுள்ள ஆழ்வார்திருநகரி என்னுமூரில் நம்மாழ்வாரென்னும் காரி மாறர் அவதரித்திருத்தலையும், அவர் அதி பாலியத்திலேயே கலைகடிந்த மகா ஞானியாய் விளங்குதலையுங் கேள்விப்பட்டு அவரைத் தெரிசிக்க நினைந்து தெக்கணம் நோக்கி விரைந்துவந்து ஆழ்வாரைத் தெரிசித்து ஞானோபதேசமும் பெற்றுக்கொண்டார். நாளுக்குநாள் அவ்வாழ்வாரின்மேல் அவர்க்குப் பக்தி அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. வரவே அவர், அச்சடகோபரை விட்டு அப்பாலிப்பாலகலாது அவரது கைங்கர்யமே தமக்குரிய மோக்ஷ சாதனமெனக் கொண்டொழுகாநின்றார். ஒரு பதிகமும் அவர்மீது இவர் பாடினார். சில்லாண்டுகள் செல்ல இவர் பரமபதமெய்தினர். இம்மதுரகவியாரே, மதுரகவி யாழ்வாரெனப்படுபவர்.

மதுரகவியாழ்வார் காலஞ்சென்றதின் பிறகு அவரிளைய சகோதரர் ஆனைமலைக்கோயில் வேலையைப் பூர்ணஞ்செய்வித்து நரசிங்கப் பெருமாளையும் பிரதிஷ்டை செய்தார். இவரால் அக்கோயிலில் முன் மண்டபமொன்று வெகு அழகாய் நிர்மாணஞ் செய்யப்பெற்றதாகத் தெரியவருகிறது. குரு பரம்பரை நூல்கள் இம்மதுரகவியாரின் சரித்திரத்தைப் புராண முறைப்படி கூறுகின்றன. இங்கு ஆராய்ச்சி முறையில் வரையப்பட்டது.

மந்திரியாகிய மதுர தரரின் பிரிவால் பாண்டியன் பராந்தகன் அடைந்த துக்கத்திற்கோரளவில்லை. அவன் அவர் தானத்திலிருந்து அமைச்சுரிமையைக் கையாண்டு கொண்டிருந்த அவ்வாழ்வாரது தம்பியை வெகு ஆதரவுடன் போற்றி வந்தான். பாண்டிய இராஜ்யம் வெகு செழுமையுற்றிருந்தது. பாண்டியன் ஆளுகையும் செம்மையுற்று விளங்கியது.

பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன், ஓர் சிறந்த வீரனோடு நிரம்பிய அதிர்ஷ்டசாலியுமாவான். ஆராய்ந்து அழைத்துக்கொண்ட அமைச்சனாலேயே இவன் குலப் பகையைத் தீர்த்துக்கொண்டவனாக நினைக்கப் படுகின்றான்.

இவன் சிவசமயத்தவனே. வைஷ்ணவத்திலும் பற்றுள்ளவனென்பதற்கையமில்லை. நாடு சேர்ப்பதிலும், புகழ்வளர்ப்பதிலும் கருத்துள்ளவனாயிருந்திருக்கிறான். இவனுக்குரிய பட்டப்பெயர்கள் பல தென்னன், வானவன், ஸ்ரீ வரன், ஸ்ரீ மனோகரன், சினச்சோழன், புனப்பூழியன், வீதகன்மஷன், விநய விச்சுருதன், விக்கிரமபாரகன், வீரபுரோகன், மருத்பலன், மான்யசாசனன், மநுபாமா, மார்த்திதவீரன், கிரிஸ்திரன், கீதிகின்னரன், கிருபாலயன், கிருதாபதானன், கலிப்பகை, கண்டகநிஷ்டூரன், கார்யதக்ஷிணன், கார்முகபார்த்தன், பராந்தகன், பண்டிதவத்ஸலன், பரிபூர்ணன், பாபபீரு, குணக்கிராகியன், கூடநிர்ணயன், நேரியர்கோன் முதலாயின. இவையனைத்தும் காரணப்பெயர்களே. இவை செப்பேட்டிற் கண்டவை. இவன்காலம் (கி. பி. 770) என்பர். வேள்விக்குடிச் செப்பேட்டை வரைவித்தவனும் இவனே.

இப்பாண்டியன வேலங்குடியென்ற ஊரை ஸ்ரீவரமங்கலம் (ஸ்ரீவரமங்கை) எனப் பெயர்வழங்கச்செய்து பிராமணர்

களுக்குத் தானஞ்செய்திருக்கிறன். இவ்வூர் நான்கூனேரி (அல்லது வானமாமலே) போலும்.

மந்திரியாகிய மதுரகவியாருக்கும் பல பெயர்களுள. அவை மூவேந்தமங்கலப் பேரரையன், மங்கலராஜன், மதுரதரன், மாறன் காரி முதலியன.

21-வது

பாணடியன் இராஜ சிம்மன் 2-வது.

இவன் பாண்டியன் நெடுஞ்செழியன் பராந்தகன் மகன். தகப்பனுக்குப் பிறகு முடி சூடினன். இம்மன்னனுக்குரிய பெயரை இடுகுறியாகக் கருதவேண்டுமே தவிரக்காரணமாகக் கொள்ள இடமில்லே. இவனை ஓரோவிடத்துச் செப்பேட்டிற் காண்பதன்றிச் செய்யுளிலேனும், சிலேயிலேனும் காண்பதருமையாயிருக்கிறது. அதனலிவன், சோம்பேறியாகவோ, நோய்கொண்டவனகவோ, காமுகனகவோ, குடித்துக் களித்துத் தன்னைமறந்து கிடக்கப்பட்டவனகவோ, இருக்கவேண்டுமென்று துணியவேண்டியவனகின்றன். இவன் பட்டத்துக்குவந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே தனது தந்தையாலளிக்கப்பட்டுவந்த பழமையான இராஜ்யங்கள் பலவற்றையுமிவன் இழந்திருக்கின்றன். இவ்விஷயத்தை இவன் மகனை வரகுண மகாராஜன் முடி சூடினதும் பல பாகங்களிலுஞ்சென்று அமராடியிருத்தலே நன்கு விளக்காநிற்கின்றது.

இங்ஙனம் இராஜசிம்மன் கையாலாகாதவனுய்ச் சோர்ந் திருத்தலைக் கண்ணுற்ற அந்நிய நாட்டரசர்கள், தாம் பரம்ப ரையாய்ப் பாண்டியன் நெடுஞ்செழியன் காலமுதல் ஜடாவர் மன் பராந்தகன் காலம்வரை அநேகவருடங்களாகப் பாண்டிய ராஜவம்சத்தவருடன் பலமுறை போர் புரிந்து தோற்றிருப் பதையும், கப்பஞ்செலுத்திக் காலந் தள்ளிவர நேர்ந்ததையும் எண்ணி யெண்ணிச் செய்வதொன்றுந் தோன்ருது வந்த சினத்தை மனத்துளடக்கிப் பெட்டிப்பாம்புபோல் ஒடுங்கிக் கிடந்த நிலைமையினின்றும் இக்காலத்திற் பையப்பைய ஆங் காங்குத் தலைநிமிர்ந்து தனித்தனியாகவும், சிலர் ஒன்றுகூடி யும் தங்கள் தங்களுக்குரிய பூபாகங்களுக்குத் தாங்களே தலைவரெனப் பறை சாற்றுவித்துச் சுயேச்சையாய் அரசாளத் தலைப்பட்டனர். தொண்டை, கொங்கு, மகாராட்டிரம், சோ ளம், கேரள முதலான நாடுகளெல்லாம் பற்பல சிறு பாகங்க ளாகப் பிரிக்கப்பட்டுப்போயின. ஜடாவர்மன் பராந்தகன் காலம்வரை ஓர் குடைக்கீழிருந்த பலநாடுகளும் இவன்காலத் திற் பற்பலர் அதிகாரத்திற்குட்பட்டுப் பெரிதும் பொலிவிழந் திருந்தன.

இக்காலத்தில் பாண்டியர்களால் பலகாலத்து மோதப் பட்டு ஒய்ந்துகிடந்த பல்லவநாட்டில் "பல்லவமல்லன்" என்ற போர்வீரன் தலையெடுத்தான். இவன் இராஜ வம்சத்தைச் சேர்ந்தவனில்லை என்ருலும் இயற்கையில் மகா வீரனுதலால் அங்குள்ள சில பல்லவ வீரர்களைப் படைத்துணையாகச்சேர்த் துக்கொண்டான். இப்படைகளுக்கு 'உதய சந்திரன்' என் பவனைத் தலைவனுக்கினுன். பிறகு, அந்த நாட்டிலுள்ள சிற்

 றரசர்களையெல்லாம் வென்முன். வென்றதும் அந்நாடு முழு வதற்குந் தானே ஒரு தலைவனுகிச் சிங்காதனமேறினன். இப் பல்லவமல்லனுடைய வீரப்பிரதாபம் பல நாட்டு மன்னர்களை யும் கதிகலங்கும்படி செய்துவிட்டது. குறுகிக்கிடந்த பல் லவநாட்டின் எல்லை, ஒன்றுக்கு மூன்ருகி விரிவுற்றது. இந் தப் பல்லவமல்லனுக்கு முக்கிய விரோதிகளாகிய "பாதாமி" என்ற இடத்திலிருந்த மேலச்சாளுக்கியர்களுக்கு மிக்காலத் தில் உள்நாட்டுக் கலகங்களால் வெளி நாட்டு நிலைமைகள் அறியமுடியாமற்போயின. மஹாராஷ்டிரர்களும், கங்கர்க ளும் தளர்ந்த நிலைமையினின்றுந் தளிர்த்து மேலோங்கித் திரா விட நாட்டையும் கைப்பற்றற்குரிய நெறிகளை ஆராய்வாரா யினர். சோழனும் பழைய பாண்டியர்களாற் பட்ட அடித் தழும்புகள் சிறிது மாறிவரத் தலையெடுத்து முடியணிந்து, அரியணை ஏறி அந்நாடு முழுவதும் ஒரு கோலினிற்கச் செய் ததுமன்றிப் பாண்டிய நாட்டையும் கொள்ளக் காலத்தை யெதிர் பார்த்திருப்பதானன்.

இவ்வாருக, பல்லவமல்லன் காஞ்சியிற் சென்றிருக்கும் பொழுது இறந்துபோனன். இறக்கவே மீண்டுஞ் சிற்றரசர் கள் அந்நாட்டிற்றலையெடுத்து ஒருவருக்கொருவர் ஓயாது சண்டை செய்யத் தலைப்பட்டனர். மற்றுமுள்ள சாளுக்கி யர், மஹாராஷ்டிரர், கங்கர், சோழர், சேரர்களும் கால நிலை விரோதமாயிருந்ததாலும், உள் நாட்டுப் போராட்டங்களினு லும், படையெடுத்து வெளிப்பட மார்க்கமில்லாதவராய்த் தங் கள் தங்களுக்குள்ள இராஜ்யங்களை மாத்திரம் காத்துக் கொள்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள். மேலும்

இவர்கள் ஒருவரை யொருவர் வெல்லக் கருதினவராகவும் இருந்தனரென்றும் தெரியவருகிறது. இதனாலேதான் இந்த இராஜசிம்மன் இத்தென்பாண்டி நாட்டிற்குமாத்திரமாவது அரசனாக இருந்தானென்று நினைக்க வேண்டியிருக்கிறது. சிங்கத்தின் வயிற்றில் நரி பிறந்ததுபோல் மகாபராக்கிரமசாலியான பராந்தக பாண்டியனுக்கு இந்த இராஜசிம்மன் பிறந்து செந்தமிழ் நாடுகளின் சிறப்புகள் பலவற்றையும் நாளுக்குநாள் தேயும்படி செய்து கொண்டிருந்தனனென்றாலும், முன்னோர்கள்செய்த பூஜாபலத்தினாலிவன் வரகுணன் என்றோர் ஒப்புயர்வற்ற பிள்ளையைப் பெற்றான். அப்புதல்வன் இளம்பருவத்தனாயிருக்கும்பொழுதே இவன்காலஞ்சென்றுவிட்டது, இவையன்றி வேறு விசேஷமொன்றும் இவனைப்பற்றித் தெரியவில்லை. இவன் காலம் (கி. பி. 770 முதல் 785) வரையாகலாம்.

22-வது

பாண்டியன் வரகுண மஹாராஜா.

இவ்வரசன், பாண்டியன் 2-வது இராஜசிம்மனின் குமாரன். இளம் பிராயத்திலேயே இவன் பட்டம் பெற்றிருக்கிறான். அம்பாசமுத்திரம், திருச்செந்தூர், திருசிராப்பள்ளி முதலான விடங்களிலுள்ள சிலாசாசனங்களைக் கொண்டு இவன் காலம் (கி. பி. 810 முதல் 835) வரையாகலாமெனத் துணியப்பட்டிருக்கின்றது. ஆகவே சோழன் விஜயாலயன்

காலமும் இதுவேயாகவேண்டும். தற்கால ஆராய்ச்சியில் சோழராஜவம்சத்துக்கு முதல்வனாகக் கருதப்படுபவன் இவ் விஜயாலயனேயன்றி வேறில்லை. இவனுக்கு முன்னிருந்த சோழவேந்தரது பேர்களுமூர்களும் ஐயமற விளங்கவில்லை. ஆதலால் இவர்களும், பல்லவர்களும் இந்த இரண்டாவது இராஜசிம்மனுக்கு முன்னிருந்த பாண்டியர்களாலடக்கப் பட்டுச் சிதறுண்டு சிற்றரசராகவோ, பெருங்குடித்தனக்கார ராகவோ ஆங்காங்கு வதிந்திருக்கவேண்டும். நெடுஞ்செழியன் காலஞ்செல்ல, இராஜசிம்மன் சிங்காதனமேறியவுடன் அவனு டைய பலஹீனத்தைத்தெரிந்து அற்றம் நோக்கி மேற்புகன்ற விஜயாலயனும், சில பல்லவர்களும் தலையெடுத்துப் படைகளைத் திரட்டிச் சோழநாடு, தொண்டைநாடு முதலான இடங்களிற் சிலபாகங்களைத் தமக்குரிமையாக்கிக்கொண்டு அரசு வீற் றிருப்பாராயினர்.

வரகுண மஹாராஜன் முடிபுனைந்து சிலகாலஞ்சென் றதும் தகப்பனிழந்த நாடுகளையெல்லாங் கைக்கொள்ளக் கருதிப் பல்லாயிரக்கணக்கான படைவீரர்களையும், யானை, குதிரை முதலானவைகளையும் சேர்த்துக்கொண்டு திக்குவிஜ யஞ் செய்வான்போல் பூவலமாக முதற்கண் கீழக்கடலை நோக் கிப் பிரயாணப்பட்டுத் திருச்செந்தூரை யடைந்தான். ஆங்கு அலைவாய்க்கரையிற் கோயில்கொண்டெழுந்தருளி விளங்கும் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளைப் பக்தியுடன் வணங்கித்துதித்து, அக்கலியுகவரதரையே தனது உபாசனாமூர்த்தியாகக் கொள் ளாநின்றனன். இவ்விஷயம் அக்கோயிலினுள்ள இவனைப் பற்றிய சிலாசாசனம்,"....................ஸ்ரீ வரகுணமாரா யர்க்கு..........னெதிர் பதின்மூன்று இவ்வாண்டு திருச்

செந்தூர் சுப்பிரமணியபடாரர் உபாஸ்தையார் திருமூலத் தானத்துப் படாரர்க்கு............"என்றிருத்தலைக்கொண்டு துணியப்படுகிறது.

இங்ஙனம் வரகுண மகாராஜன் செந்தில்மாநகரில் விஜயஞ்செய்திருத்தலைக் கேள்விப்பட்டதும் அடுத்துள்ள சிற்றரசர்களாகிய இருப்பைக்குடிக் கிழவன் சாத்தன் பெருமானும், அளர்று நாட்டுக்கோன் ஐயாயிரத்தானும், கப்பமாகக் கொணர்ந்துகொடுத்த நிறைகுறையாப் பழங்காசு (இது பொற்காசு) ஆயிரத்து நானூறையுங் கைக்கொண்டு, அவர்கள் சில வருஷங்களாகத் திறை செலுத்தாதிருந்த குற்றத்தை மன்னித்தும், எச்சரித்துமவர்களை அனுப்பினன்.

அப்பால் அக்காவலன் கப்பமாகவந்த பொற்காசு ஆயிரத்து நானூறையும், அந்த உபாசநாமூர்த்தியாகிய கந்தக்கடவுளின் நித்திய நைமித்தியாதி பூஜைகளுக்கே சமர்ப்பிக்கக் கருதி, இவ்வழிபாடு நீடூழி நடந்தேறிவர, செலவு விபரமெல்லாம் நன்குவிளங்கச் சிலாசாசனமொன்று வரைவித்திருக்கின்றான். அதன் கருத்தாவது, கப்பமாகவந்த காசுகளில் கொற்கையூரார் கையிற் காசு 96, பொன் 8-ம், அங்நாட்டு நல்லூரார் கையில் காசு 118, பொன்.........-ம், அங்நாட்டுச் சாலியமங்கலத்து ஊரார்கையில் காசு 24, பொன் 5¾-ம் வழுதி வளநாட்டுப் பிரமதேயம் வரகுணமங்கலத்துச் சபையார் கையில் காசு 110-ம் இவைபோல் மற்றுமுள்ள காசுகளையும் அடுத்த ஊர்களிலுள்ள சபையார் கையிற்கொடுத்து, ஒரு காசுக்கு ஆண்டொன்றுக்கு வட்டி நெல் இரண்டுகலமாக வந்த நெல்லால் நான்குகால பூசைகளுக்கும் வேண்டுவனவான, அமுதுபடி, சாத்துப்படி, சர்க்கரை, கருவாழைப்பழம், பசு

வின்றேய் தயிர், பால், காயம், மிளகு, சீரகம், மஞ்சள் முத லானவைகளைக் காலமுறை தவறாது கொண்டுவந்த கோயிலிற் கொடுக்கவேண்டுமென்றும், மஹா நைவேத்தியத்தோடு புளிங் கறி, புழுக்குக்கறி, பொறிக்கறிமுதலாயின பாகஞ்செய்து நைவேதிக்கவேண்டுமென்றும், மார்கழித் திருவாதிரை, மாசி மகம், வைகாசி விசாகம் ஆகிய விசேஷதினங்களில் முற்கூறிய வை முறைப்படி யிரட்டிப்புக் கொடுக்க வேண்டுமென்றும், இங்ஙனம் கொடுக்கத்தவறினோர் தவறின காலமுதல்இரட்டிப் பாகச் சகல பதார்த்தங்களையுங் கொடுப்பதோடு இக்கட வுளுக்கு இருபத்தைந்து பொற்காசு அபராதமுஞ் செலுத்த வேண்டுமென்றும் பிறவுமாம். இவ்விஷயமெல்லாம் நன்கு விளங்கக் கருங்கல்லிரண்டில் முறையுறப்பதிய வரைவித்துத் தனது வெற்றிக்கும் எல்லைக்கும், வழிபாட்டின் சாசனத்துக் கும் நிலையமாக அக்கோயிலுக்குள் நாட்டியிருக்கின்றனன். இந் நாட்டுக்கற்களிப்பவும் அக்கோயிலிற் காணலாகும்.

சிலநாள் செந்தூரில் தங்கியிருந்த வரகுணன் அங்கு நின்று உள்நாட்டு வழியாக மேற்கே நோக்கிப் பிரயாணங் கொண்டு, செல்லும் நெறியெல்லாம் பிரஜைகளால் மரியாதை செய்யப்பெற்று, தனது குலத்தில் முதன்மை வாய்ந்தவரும், நின்றசீர் நெடுமாறநாயனாரெனப் புகழ்ந்தோதப்பட்டவரு மான யாறவர்மன் அரிகேசரி என்பவரால் வில்வேலி சைன் யத்தை வென்று வெளியாக்கித் தன்னாட்சியிற்கொண்டதான திருநெல்வேலியிற் புகுந்து ஸ்ரீ வேயின்ற முத்தரை வணங்கி வழிபாடியற்றி, அங்கு நின்றும் மேல்பால் நோக்கிப் படர்ந்து இளங்கோய்க்குடி (அம்பாசமுத்திரம்) என்னும் பதியிற் பிரவேசிக்க அவ்வூர்ச்சபையார் அவனை அழைத்து பொருநை நதியின் வடபாலுள்ள ஸ்ரீ திருப்போத்துடைய மகாதேவர்

(எரித்தாட்கொண்டார்) கோயிலிற் சென்றனர். அக் கடவுளைத் தெரிசனஞ் செய்த பாண்டியன் அச் சபையோரின் க்ஷேமங்களை விசாரிக்கையில் அவர்கள் அக்ஷேத்திரத்தின் வருவாயின் சுருக்கத்தையும், படித்தனப் பெருக்கத்தையும், வெளியிட்டுப் பொருளுதவியை அபேக்ஷிக்கவும், பாண்டியன் சில தினத்துள் அவ்வாறே செய்வதாய் வாக்களித்துக் குமரியை நோக்கிப் புறப்பட்டான். போகும் மார்க்கமெல்லாம் தன்னுடாயிருந்ததினால் ஆங்காங்குள்ள ஊரார் யாவருமிவனை வரவேற்றுபசரித்தனர். அரசன் கன்னியாகுமரிக்குப் பன்னிரண்டு மயிலுக்கு வடக்கே இருக்கிற ‡ இராதாபுரம் என்னுங் கிராமத்தை அடுக்கையில் அவ்வூர்ச் சபையார் இவனை எதிர்கொண்டழைத்து வந்து தங்களூர்க்கோர் கோயிலில்லாக் குறையை வெளியிட்டு வேண்டலும், பாண்டியன்வரகுணன் அக்குறையை நிவர்த்திப்பதாய் வாக்களித்து, கையிலுள்ள நிதிகளை அச்சபையாரிடங் கொடுத்து, அதி சீக்கிரமாகப் பெரிய க்ஷேத்திரமொன்றைப் பணிவிக்குமாறு சொல்லிவிட்டுப் படைக்கடல்கள் புடைநெருங்கிவரக் கன்னிக்கடற்றுறையைச் சென்றடைந்தான்.

திரவியத்தைக் கையேற்ற அச்சபையாரும் சில வருடங்களுள் கருங்கல்லினால் வியக்கத்தக்க வேலைப்பாடுகளமையப் பெரிய கோயிலொன்று கட்டி முடித்து மூர்த்திகளையுமாங்காங்குப் பிரதிஷ்டை செய்தனர், பொருளுதவிபெற்ற நன்றி

‡ இவ்வூர், இவ்வரகுணன் அரசாட்சியில் வரகுண பாண்டியபுரமென்றும், அப்பால் சோழன் இராஜ ராஜனுளுகையில் இராஜ ராஜபுரமெனவும், பெயர் பெற்றிருந்து, பிற்காலத்திலெக்காரணத்தாலோ இராதாபுரம் என அழைக்கப்படுகிறதென்கின்றூர்கள்.

மறவாது மூல மகாலிங்கத்துக்கு வரகுணேசுவரர் என அப் பாண்டியன் பெயரையே இட்டுவழங்கலானர். இதனையறிந்த வரகுணனும் அக்கோயிலுக்கு வேண்டும் நித்திய நைமித்தி யாதி செலவுகளுக்கெல்லாம் நிதிகளும், விளைநிலங்களும் ஏரா ளமாயளித்திருக்கின்றனன். அவ்வூர்த் தலபுராணமும் வர குணபாண்டியனே கோயில்கட்டி இலிங்கப்பிரதிஷ்டை செய் ததாகக் கூறுகிறதென்பர். அக்காலத்திற் பிரசித்தி பெற்ற அரசர்கள் பலரும் தங்களால் பிரதிஷ்டிக்கப்பட்ட மூர்த்திக ளுக்குத் தங்கள் பெயரைச் சூட்டுவது வழக்கம். இராஜ ராஜ சோழன் தஞ்சாவூரில் பிரதிஷ்டித்த இலிங்கத்துக்கு இராஜராஜேசுவரர்என்றும், இராஜசிம்மபாண்டியனற் கோட் டைக்கருங்குளத்தில் நாட்டிய மூர்த்திக்கு இராஜ சிம்மேசுவ ரர் என்றும், பிற்காலத்து வேந்தனான குலசேகரனாகிய அதி வீரராமனல் பிரதிஷ்டிக்கப்பட்ட இலிங்கத்துக்குக்குலசேகர முடையார் எனவும் பெயரிட்டிருத்தலைக் காண்க.

குமரி சென்ற வரகுணன் கடலாடி ஸ்ரீ கன்னிகா பரமே சுவரியை வணங்கி வழிபாடியற்றி நாஞ்சில்நாட்டு மார்க்கமாய் வேணுடு கடந்து உள்நாட்டு வழியாயும், மேலைக் கடலோரமா யும் வடபாலிற்சென்று வஞ்சி, கோதை முதலான நகரத்தா ராலும், குறுநில மன்னராலும் வரவேற்கப்பெற்றுச் சோழ நாடு தாண்டிப் பல்லவநாட்டிலும் பிரவேசித்து, ஆங்குப் பெண்ணையாற்றுக் கண்த்தான அரசூர் என்னும் கிராமத்தில் தளத்துடன் தங்கியிருந்தான். இதுவிபரம் "பெண்ணையாற் றரசூர் வீற்றிருந்து", என அம்பாசமுத்திரத்திலுள்ள சிலா சாசனங் கூறுவதைக்கொண்டு தெளியப்பட்டது. இங்ஙனம் வரகுணன் படைப்பெருக்கத்துடன் வந்திருத்தலைக் கேள்விப் பட்ட அங்குள்ள அரசர்களும் (பல்லவர்களாகத் தானிருக்க

வேண்டும்) போர்க்குவர அவர்களை வரகுணன் வென்று அவர்களிடத்திலிருந்த நிதிகளை யெல்லாம் கைக்கொண்டனன். கொண்டதும், அந்நிதியிலிருந்தே பாண்டியநாட்டிளங்கோய்க்குடிச் சபையாருக்கு முன்வாக்களித்தபடி காசுகள் இருநூற்றெண்பது அனுப்பியிருக்கின்றான். இதனை அம்பாசமுத்திரத்திலுள்ள சிலாசாசனம், "...........இளங்கோய்க்குடி திருப்போத்துடையார் ஸ்ரீ கோயில் படாரர்க்கு முதல் கெடாமை பொலிகொண்டு நான்கு காலமும் திரு அமுது செலுத்துவதாக வரகுண மகாராஜர் தொண்டைநாட்டுப் பெண்ணைக்கரை அரைசூர் வீற்றிருந்து இளங்கோய்க்குடிச் சபையார் கையிற்கொடுத்த காசு இருநூற்றெண்பது..........." என விளக்காநிற்கின்றது.

இவ்வாறு பல்லவர்களையும், அவருக்குத் துணையாய் வந்த சிற்றரசர்களையும் நாடு துறந்து காடு புகும்படி விரட்டிய வரகுணன் அந்நாடு முழுவதையும் தன்னுளுகைக்குட்படுத்தி ஜெயசீலனைத் தன்னுடாகிய கன்னி நாட்டை நோக்கித் திரும்பினான். வரும் நெறியில் தன்னுடைய ஆற்றலை அளவிட்டறியாது, திருப்புறம்பியமென்னும் இடத்தில் போர்தொடங்கின அபராஜிதனையும், அவனுடைய சிநேகிதனான கங்கவம்சத்து முதலாவது பிரிதிவீபதி என்பானையும் வானுலகமேற்றினான். இடவை வேம்பில் என்ற ஊர்களையும் அழித்தான். (வேம்பிலென்றது திருவிசநல்லூராயிருக்கலாமென்பர்). தஞ்சை, சிராப்பள்ளி, அம்பை முதலான பல இடங்களிலும் தன்னுடைய அறமும், வீரமும் விளங்குமாறு சிலாலிகிதங்களை நிலைநாட்டினான். இவ்வண்ணம் திக்குவிஜயத்தை

வெகு சிறப்பாக முடித்துக்கொண்டு இராஜதானியில் (மதுரையாகத்தானிருக்கவேண்டும்) வந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தான். பிற்காலத்திலிவன் சிங்களத்தையும் வென்றனென்பர். இந்த வரகுணன் தன் காலத்திலிருந்த சோழன் விஜயாலயனோடு பகைமை கொண்டதாய்த் தெரியவில்லை. இதற்குக் காரணம் இச்சோழனுக்கு நெருங்கிய பாந்தவ்யமுள்ள ஓர் பெண் இவனைப் பெற்றெடுத்த தாயாயிருந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. இவ்விஷயம் திரிசிராப்பள்ளியிலுள்ள சிலாசாசனம் "..............சோம சூர்யாந்வயகுலதிலகாலங்காரரான பாண்டியாதி ராஜர் வரகுண தேவர்........." என்றிருத்தலால் தெளிவாகிறது. ஆகவே வரகுணன் சோழர்களை வென்றடக்காது தனக்குக்கீழ்ப்பட்ட சிற்றரசராகவோ, சமானஸ்தராகவோ வைத்திருக்கவேண்டுமென ஊகிக்கப்படுகின்றது.

இவன் மறுவற்ற பாண்டியவம்சத்தவனே. தன் மரபினுக்கு ஒத்த சோழகுலக் கன்னியையே மணந்திருக்கின்றான். சிவபக்த சிரோமணி. மற்றைய மதங்களிலும் வெறுப்பற்றவன். செந்திற்கடவுளை உபாசிப்பவன். பகைவரிடத்திற் பறித்துக்கொண்ட திரவியத்திற் பெரும்பாகமும், சிவ கைங்கர்யத்திலேயே செலவிட்டவன். இவன் சென்ற இடமெல்லாம் பெரும்பாலும் வெற்றியும், சீர்த்தியும் எய்தினனேயன்றித் தோல்வி அவமானங்களைக் கண்டதாகத் தெரியவில்லை. இவன் காலத்தில் வரையப்பட்ட சாசனங்களெல்லாம் இலக்கண முறை தவறாது பொருட்செறிவுடையனவாய், செவ்விய ஒழுக்குடையனவாய், வடமொழி பெரிதும் கலக்கப்பெறாதனவாயிருக்கின்றன. ஆதலின் இவன் காலத்தில் தமிழ் மேலான

நிலைமையிலிருந்ததாக நினைக்க வேண்டியிருக்கிறது. சைவ சமயாசாரியராகிய ஸ்ரீ மாணிக்கவாசகர் இவ்வரசன் காலத்தவராயின் இவனுக்கு அரிமர்த்தனன் என்றோர் பெயருமிருத்தல் வேண்டும். தந்திவர்மன் மகன் நந்திவர்மன் என்பான் இவன் காலத்தவனே. இந்த நந்தி "தெள்ளாறு" என்னுமிடத்தில் போர் வென்றது இந்த வரகுணனையே என்பாருமுண்டு.

(கி. பி. 810 முதல் 835) வரை இப்பாண்டியன் அரசு செலுத்தி வந்திருக்கின்றான். இவன் ஆளுகைக்குட்பட்டிருந்த நாட்டுக்கு எல்லையாவது: கிழக்கும் மேற்கும் கடல்கள், தெற்கே குமரி, வடக்கு பெண்ணையாறு. இவன் மகுடம் தரித்து அரசாண்ட 25 வருடகாலத்திலும் பஞ்சமாவது, கொள்ளைநோயாவது, பகைவர்களின் தொல்லையாவது ஏற்பட்டனவாகத் தெரியவில்லை. குடிஜனங்களின் அபீஷ்டம் போல் உசிதமான காரியங்களைக் காலதாமதமின்றி இவன் நிறைவேற்றியிருக்கின்றான். நாடுகளும் செழிப்புற்றிருந்தனவாகத் தெரியவருகின்றன. இவன் காலத்துநாணயங்கள் காசு முதலியன. இக்காசுகள் தங்கத்திலும் வெள்ளி செம்புகளிலுமிருந்திருக்கின்றன. பொற் காசுகளில் நிறைகுறைந்த காசும், நிறைகுறையாப் பழங்காசுகளுமுள. இவை விரைவியே செல்லுபடியாய்க் கொண்டுவந்தனவாகத் தெரிகின்றன. இக்காசுகளிலுள்ள முத்திரைகள் தெரியவில்லை, பொற்காசுகளுக்குக்கீழ்ப்பட்ட நாணயம் பொன், அப்பால் கீழ்ப்பட்டன பணமும் காசுமாயிருத்தல்வேண்டும். காசும், துட்டும் ஒன்றேயென்னலாம். துட்டுப்பத்துக் கொண்டது ஒருபணம்; பணம் பத்துக்கொண்டது ஒருபொன்; பொன் பத்துக்கொண்டது

ஒருகாசு; (தங்கக்காசு). இக்காசு தற்காலமதிப்பின்படி ரூ. 20—13—4 ஆகிறதுஎன்பர், புராதன காலத்தில் நாணய வாரிகள் தசாம்சமாகவே இருந்தனவென்பது பிரசித்தம். முகத்தலளவைகள் கலம், மரக்கால், நாழி, உழக்கு, ஆழாக்கு, செவிட்டு முதலியன. (செவிட்டு=சோடு) தூக்களவை துலாம், பலம் முதலியன இவ்வரசன் காலத்தில் தானிய விளைவு பெருக்கமாகவும், பணப்பழக்கம் சுருக்கமாகவுமிருந்த தாகத் தெரிகிறது. கடன் வாங்கினவர்கள் வட்டியாகக் கொடுப்பது பெரும்பாலும் நெல்லேயாம். மேற்கூறிப்போந்த நிறை குறையாப் பழங்காசொன்றுக்கு வருஷத்திற்கு பொலி சைநெல் இரண்டு கலம் எனச் சாசனம் கூறுகின்றது. இந்த வட்டி இக்காலவட்டி விகிதத்திற்கு அதிகமேயாகிறது. குடி ஜனங்கள் தாம் வாங்கும் உணவுப்பொருளுக்கு ஈடாக நெல் லேயே அளந்திருக்கின்றனர். ஒரு நாழி பசுவின் நெய்க்கு 20 நாழி நெல், சர்க்கரை பலம் ஒன்றுக்கு நாழி உரி நெல், நாழி பயற்றுப் பருப்புக்கு முந்நாழி நெல்; நாழித்தயிருக்கு முந்நாழி நெல், வாழைப்பழம் இரண்டிற்கு நாழி நெல்; மற் றுமுள்ள பொருள்களுக்கும் விலைகள் இவ்வாறே இருந்தி ருக்கவேண்டும்.

இவன் காலத்தில் விளைநிலங்கள் வரும்படியிற் சிறந்தன வேயன்றிப் பெறும்படியிற் சிறந்திருக்கவில்லை. அதனாலே தான் இவன் கோயில்களுக்குச் சிறுபான்மையாய் விளைநிலங் களையும், பெரும்பாலும் பொற்காசுகளையும் கொடுத்திருக்கின் றான். கோயில்களெல்லாம் அந்தந்த ஊர்ச்சபைகளில் ஏற்பிக் கப்பட்டு நல்லவண்ணம் பரிபாலித்து வரப்பட்டிருக்கின்றன. பூசைகள் நான்கு காலமேயென்று தெரியவருகிறது. அர்ச்

சகர் முதலான பணிமக்களுக்கு மாதச்சம்பளம் உள்ளதாகத் தெரியவில்லை. மானிபமாக விளைநிலங்களை விட்டுக்கொடுத்திருப்பான்போலும்.

* * *

சிலர், சைவசமயாசாரியாராகிய ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனர் சேரமான் பெருமாள்நாயனர் ஆகிய இவர்கள் காலமும் இவ்வாகுணபாண்டியன்காலமும் ஒன்றே ஆகுமென்றும், இவ்விரண்டு நாயன்மார்களும் கைலைசார்ந்த காலம் கி. பி. 825-ம் ஆண்டாமெனவும், இவ்வாண்டு முதற்கொண்டே கொல்லம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதெனவும் கூறுவர். இவைகளைமறுத்து வேறுகூறுவாருமுளர்.

23-வது

ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லப ஏக வீர பரசக்ர கோலாஹலன்.

வருகுண மகாராஜனுக்குப் பிறகு அவனுடைய மகனாகிய இம்மன்னன் பட்டத்துக்கு வந்தான். இவன் தனது தந்தைகொண்ட பிறநாடுகளோடு தன்னாட்டையும் நீதிவழுவாது செங்கோல் செலுத்திவரும் நாளில் இலங்கையில் தனபாலனென்னுமோர் அரசன் ஆட்சிசெய்திருந்தான். இவன், பரம்பரை வழக்கம்போல் தனது சகோதரன்மகன் மஹேந்தனுக்கு மந்திரிப்பதவியைக் கொடுக்காதிருந்ததினல், இந்த மஹேந்தனும் அவனுடைய சகோதரரும் தனபாலவேந்தனி

டத்துள்ள குற்றங்களையும், அவன் தமக்குச்செய்த அநியாயத்தையும் எடுத்துப்பலருக்கும் விளங்கக்கூறி உள்நாட்டிற் கலகமேற்படும்படி செய்யலாயினர். இதுதெரிந்த தனபாலன், அச்சகோதரர்களை அந்நாட்டை விட்டப்பாற்படும்படி அடித்துவிரட்டிவிட அவர்களும் படமேறிப்பாண்டிநாடடைந்து ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லபபாண்டியன் சமுகத்தைபடுத்து வணங்கி, அழுதகண்ணுடன் தங்கள் வரலாறனைத்தையும் வெளியிட்டனர். அவைகளை யெல்லாங்கேட்ட பாண்டியன், மனமிக இளகினவனாய் அவர்களைத்தேற்றி உதவிசெய்வதாய் வாக்களித்து, உதவற்குரிய காலத்தையு மெதிர்பார்த்திருந்தான். காலஞ்சிலசெல்ல இலங்கையில் தனபாலன் காலமுஞ் சென்றுவிட்டது. விடவே ஒன்பதாவது "அகபோதி" என்பவன் பட்டம்பெற்றான். இவன் தம்பியர் சீலமேகசேனன, மஹேந்தன் என்பவர். இம்மூவரும் மிகவும் அந்நியோந்நியமாய்ச் செம்மைபெற இராஜரீகத்தை நடத்திவந்தனர்.

இங்கு இவ்வாறாக மதுரைககாவலன் தனதுவாக்கை நிறைவேற்றக்கருதிச் சேனாபதியையழைத்து, "பெரும்படையுடன் இலங்கையிற்சென்று அகபோதியை அதஞ்செய்து நம்மிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் மஹேந்தனுக்கு மகுடாபிஷேகமுஞ் செய்வித்து மீள்வாயாக" என்று கட்டளையிட, அவனும் அவ்வாறே புறப்பட்டுக்கடல் கடந்து போர் தொடங்கினன். இப்போரில் அகபோதி வெற்றிபெற்றான். பாண்டியன் படைகளும் படைத்தலைவனும் மஹேந்தனோடு அவன் சகோதரர்களும் இரணகளத்திலிறந்தார்கள். இவையெல்லாங்கேள்விப்படவே மாறனுக்கு அவ்விலங்கையின்மேல் அடங்காச் சினமுண்டுவிட்டது. இதுவே இலங்கை

யின்மே லிப்பாண்டியன் படையெத்தற்குக் காரணமாகும். சினங்கொண்ட பாண்டியன் கலங்காத மனவுறுதியும், திடகாத்திரமுங்கொண்ட படைப்பெருக்கத்தோடும், படைத்தலைவரோடும் இலங்கையிற் படர்ந்து அங்குள்ள மகதவலித என்னுமூரிலுள்ள கோட்டையை முற்றுகையிட்டான். இக்காலத்தில் அகபோதி அரசனுக்கும், அவனது மந்திரிகளிற் சிலருக்கும் உள்ளுடைசல் ஏற்பட்டிருந்ததினால் அவ்வமைச்சர்கள் யுத்த முயற்சியிற் பெரிதும் அசட்டையாயிருந்தனர். அல்லாமலும் அங்குத் தமிழ் நாடுகளிலிருந்து குடியேறியிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களும், தங் நாட்டரசன் படையெழுப்பிற்கு வந்து அவனுக்குப் பலவிதத்திலுந் துணைசெய்ய வந்து கூடினர். இதற்குக்காரணம் "இச்சிங்களவேந்தன் தன்னாட்டுக்குடிகளைப்போல் பிற நாடுகளிலிருந்து வந்து குடியேறின ஜனங்களைக் கருதாமல், சில பக்ஷபாதமான காரியங்களைப் பலமுறையும் செய்திருக்கக்கூடும்" என்பதே. இவ்வாறில்லாமற்போனால் இத்தமிழ் மக்களிங்ஙனம் நடந்திருக்கமாட்டார்களென்று நினைக்கிறேன். எவ்விதமோ தமிழ் மக்கள் யாவரும் ஸ்ரீ வல்லப் பாண்டியனுக்கு நல்ல துணைவராய் உதவிசெய்யத் தலைப்பட்டனர்.

சில பொழுதில் இலங்கை இளவரசான சேனனால் தூண்டப்பட்ட சேனையும் பாண்டியன் படைகளுங் கைகலந்தன. அப்பொழுது மதுரைக்காவலன் அலங்கரிக்கப்பட்ட மலைபோன்ற மத்தகஜத்தின் மேலேறியிருந்து இடியேறு போற் கர்ஜித்தான். இவனது படைகளும் கூரிய படைகளைக்கைக்கொண்டு இயமனைப்போற் சீறி எதிரியின் படைமேற்பாயலாயின. யாமம் சில செல்லச் சிங்களவேந்தன் சேனைகளிற் சில

சின்னபின்னப்பட்டுச் சிதறியோடத் தலைப்பட்டன. சில இறந்தன. சில குற்றுயிராயின. சில ஓடி ஒளித்தன. இவ்வாறாகவே அகபோதி, அப்பொழுதிருந்த திரவியங்களையெடுத்துக்கொண்டு இரவே தோணி ஏறி மலேயா என்ற தீவிற் சென்றுவிட்டான். இவன் தம்பியோ சிலநேரம் பொருது கட்டுண்டான். அவன் தம்பி மஹேந்தன் என்பவன் அடைந்துகொண்டதோல்விக்காற்றாது மனமழிந்து தற்கொலைசெய்து கொண்டான். பாண்டியன் சேனைகள் ஜெய பேரிகளை முழக்கின. அங்கு மீனக்கொடி வானளாவ நிலைநாட்டப்பட்டது. பிறகு பாண்டியன் படைகள் அவ்வூரைக்கொள்ளைகொள்ளத் தலைப்பட்டன.

கடல் பொங்கி வருவதுபோற் காலாட்படைகள், பட்டணங்களிற் பிரவேசித்து விலையுயர்ந்த பொருள்களை எல்லாங் கவர்ந்தன. அரண்மனையிலுள்ள ஆடையாபரணங்களையும் நவரத்னப்பெட்டிகளையும் கொணர்ந்து கொணர்ந்து பாண்டியன் முன்னிலையிற் குவித்தன. பௌத்தாலயங்களிலிருந்த தங்கவிக்கிரகங்களையும் அவைகளுக்குரிய அணிகளையும் மற்றும் விலையேறப்பெற்ற சாமான்களையும் கவர்ந்துகொண்டன. குடிஜெனங்கள் கோவென்று கதறக் கொள்ளையிட்டதோடு அங்குள்ள எல்லாக் கட்டிடங்களையும் தீக்கிரையாக்கின. இவ்வாறு இலங்கை அழிந்து சாம்பராய்ப் பாலைவனம்போற் கிடத்தலைக் கண்டதன்பிறகே அப்பாண்டியன் மனங்குளிர்ந்தான். அப்பொழுது அங்கிருந்த தமிழ் மக்கள் அப்பாண்டியனை வியந்து "ஏக வீர பரசக்ர கோலாகலன்" என்றழைத்தனர் போலும்.

இவ்வண்ணம் இலங்கையை அழித்தபாண்டியன், அங்குள்ள தமிழ்மக்களுக்கு யாழ்ப்பாணமென்னுமிடத்திற் பல சவுகரியங்களைச்செய்து கொடுத்து, பறித்துக்கொண்ட செல்வங்களுடன் வெற்றிப்பறைமுழங்க மதுரையில் வந்துசேர்ந்தான். இச்சம்பவங்களெல்லாம் கி. பி. 840 க்குமேல் நடந்திருக்கவேண்டுமென நினைக்கப்படுகிறது.

இப்பாண்டியன் இலங்கைக்குச்சென்றிருந்த காலம் பார்த்துக்கேரளத்திலுள்ள சிலசிற்றரசர்கள் "விழிஞம்" என்ற துறைமுகப்பட்டினத்தையும், சூன்றார் என்ற குறிஞ்சிநிலத்தூரையும் தமக்குரிமையாக்கிக்கொண்டு அரசியற்றிவர, அவர்களையுமிவன் அடர்த்து அதஞ்செய்து அவ்விடங்களை மீட்டுக்கொண்டான். இப்படி இவன் எங்குச்சென்றாலும், எப்படிப்பட்ட பகைவர் எதிர்த்தாலும் வெற்றியேயன்றித் தோல்வி என்பதைச் சொப்பனத்திலுங் கண்டறியாதவனாயிருத்தலைக் கங்கர், சோழர், பல்லவர், கலிங்கர், மகதர் முதலானவேந்தர்கள்கண்டு பொறாமைகொண்டவரா யொன்றுகூடித் தங்கள் தங்களுக்குள்ள பலமான படைபலங்களுடன் குடமூக்கு (கும்பகோணம்) என்னுமிடத்திலுள்ள சமவெளியில் இப்பாண்டியனைஎதிர்க்க அப்போரிலும் இம்மாறனே வாகைசூடினன். இப்பெரும்போருக்குக் காரணமாயிருந்தவன் *பல்லவ வேந்தனே, என்றறிந்தபாண்டியன், அவனைக்குலத்தோடறத் தொலைத்துப் பல்லவபஞ்சனன் என்ற ஓர்வெற்றிப்பேரையு மணிந்துகொண்டனன். என்றாலும் பல்லவர்குலம் அற்றிலது. தழைத்துக்கொண்டேதானிருந்தது. இவையன்றிமாயாபாண்

* நந்திவர்ம பல்லவன் என்பர்.

டியன், என்று மொருவனையுமிவன்போரில் வென்றிருக்கிறன். இம்மாயா பாண்டின், இப்பரசக்ரகோலாகல பாண்டியனின், பாட்டனின் பாட்டனுன அரிகேசரிமாறவர்மன் என்பவன, தனக்கு மாளவகன்னியிடம் பிறந்த ஆண்பிள்ளைகளுக்கு இராஜ்யபட்டாபிஷேகத்தைச்செய்து வையாமற்போனலும், அவர்களைச்சிற்றரசர்க்கேற்ற நிலைமையில்வைத்து ஆதரித்து வந்திருக்கவேண்டும். அவன்காலத்துக்குப்பின் வந்த முடிவேந்தரும் மேற்படிகுடும்பத்தை அவ்வாறேபோஷித்து வந்திருக்க வேண்டும் இப்படி வந்தவம்சத்திலுதித்த ஓர்தலைவனே இந்த மாயாபாண்டியனுகலாமென்றுதோன்றுகிறது. இவன், மகாவஞ்சகஸ்தன், நெடுநாளாகவே பாண்டியராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்றவேண்டிய சூழ்ச்சிகளைச்செய்துவந்தவன். இவனை இப்பாண்டியன் வென்று அவனுக்குள்ள கவுரவங்களையெல்லாம்போக்கி அடிமையாளனைப்போலாக்கிவிட்டான் என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது. சிலர் இவனைச்சுத்தமான ராஜபரம்பரையைச் சார்ந்தவனென்றும், இவனுல் குடும்பத்துள் கலகங்கள் ஏற்பட்டனஎனவும் கூறுவர். மாயாபாண்டியன்என்பது அவனது குணங்காரணமாக வந்த பெயரே. இவனது இயற்பெயர் தெரியவில்லை.

இப்பாண்டியன் ஒப்புயர்வற்ற வீரனே. நினைத்தபடி முடிக்கும் ஆற்றல்வாய்ந்தவனே. சத்துருக்களை அடியறத் தொலைத்து, குற்றங்கள்கண்ட இடத்தில் யாரையுந்தாக்ஷிண்யமில்லாமல் தண்டிப்பவனே. அடைந்தார்க்கு அபயம் நல்குபவனே. இவனுக்குப்பிள்ளைகளிருவர். மூத்தவன் வரகுணவர்மன். மற்றவன் பராந்தகவீரநாராயணசடையன். இவன் அரசுபுரிந்தகாலம் 32-வருஷமென்பர். கி. பி. 830 முதல் 862 வரையாகலாம்.

24-வது

பாண்டியன் வரகுணவர்மன்.

இவன் ஏகவீரபரசக்ரகோலாகலனின் மூத்தமகன். தந்தைக்குப்பின் பட்டத்துக்குவந்து முன்னோரன்னமுறை செலுத்திவரலானான். வருகையில் தீவினைவசத்தால் இவன், தனதகுதிக்கு மேற்பட்ட ஓர்வினைமுடிக்கக் கருத்துக்கொண்டான. அதாவது "ஹிமசேதுபரியந்தமான இராச்சியங்களை எல்லாம்தானொருவனே ஆளவேண்டு"மென்பதே. சிலகாலம் செல்லத் தன்மனப்போக்கின்படியே மந்திரிகளை நடககும்படி செய்துகொண்டு, தனது தகப்பனாலழிக்கப்பட்டும், தளிர்ப்புற்றுமேலோங்கிப்படர்ந்து பலம்பெற்றிருக்கும் குலவிரோதிகளாகிய பல்லவர் மரபை இல்லையென்று சொல்லும்படிசெய்யத்துணிந்து, திரண்டபடைகளுடன் வடபால்நோக்கிப் புறப்பட்டான். முதற்கண் திருவிசநல்லூர்ப் பக்கத்திலிருக்கும் தற்காலம்வேப்பத்தூர் என்று சொல்லப்படுகிற வேம்பிற்கோட்டையைப் பகைவர்வந்து தங்காவண்ணம் இடித்து வெளியாக்கினான். இதனையறிந்த கங்கபல்லவ வேந்தனாகிய அபராசிதன்என்பானும், கங்கர்குலாதிபனாகிய முதலாவது பிரிதிவீபதி என்பானும் ஒன்றுசேர்ந்து பலகுறும்பர்களையுந் துணைகொண்டு, நிரம்பியசேனையுடன் கும்பகோணத்துக் கடுத்துள்ள திருப்புறம்பிய மென்னுமிடத்திலிருந்த வரகுணவர்மனுடன்போர் செய்யலாயினர். இப்போர், பார்த்தவர் நெஞ்சம் பறையடிக்கும்படி அவ்வளவுகொடுமையாய்ச் சில பகல்

நடந்தது. முடிவில் பிரிதிவிபதிஇறந்தான். என்றும் அபரா சிதன் சண்டையைவிடாது வீராவேசத்தோடு நடத்தினன். நடத்தவேபாண்டியன் சேனைகள் பலவிதமாய் முறிபட்டுச் சிதைந்தும், இறந்துமொழிவதாயின. பாண்டியனுமாண்டிருக்க ஆற்றாது ஓட்டமெடுத்தான். அப்பால் அப்பிரதேசமெல்லாம் அபராசிதன்வசமாயின. பிறகுபாண்டியன் வரகுணவர்மன், அந்த அபராசிதன் தன்னாட்டிலும் வந்துதாக்காதபடி தன்தம்பியாகிய பராந்தகவீரநாராயண சடையனுடன் ஓர் பலமானபடையை நடத்திக்கொண்டு பாண்டிநாட்டின் வடவெல்லையிற்போய்க் காத்திருந்தான்.

இங்கு இவ்வாறாக, இவ்வரகுணவர்மனின் பிதாவாகிய பரசக்ரகோலாகலனால் அடிமையைப்போலடக்கியாளப்பட்ட மாயாபாண்டியனோ? அல்லது அவனுடைய சந்ததிகளோ? யாரோ? ஒருவன், தன்னை அகௌரவமாய் நடத்திவரும் பாண்டியராஜவம்சத்தை அறவீழ்த்தி, தானேசிங்காதனமேறவேண்டுமென்று நினைத்து "பாண்டியனுக்குப்பெரும் பகைவனாயிருப்பவன் இலங்கைவேந்தனே" என்றறிந்தவனாய் அவன், சரேலென இலங்கையிற்சென்று அப்பொழுது அங்குஅரசுவீற்றிருந்தவனான இரண்டாவதுசேனன் என்னுங்கொற்றவனை அடுத்துத் தனக்குப்பாண்டியனால்வந்த அவமானங்களை யெல்லாந் தெரிவித்துத் தன்னைப் பாண்டியராஜ்யாதிபதியாய்ச் செய்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவனும் முன்தன் பட்டணத்தைக் கொள்ளைகொண்ட பாண்டியன் தலைநகரைச்சூறையாட இதுவேதக்கசமயமென மனத்துள் தீர்மானித்தவனாய், அவ்வஞ்சகபாண்டியனை நோக்கி "அன்பனே! அஞ்சற்க

நீ இப்பொழுதே பாண்டியராஜ்ய பட்டாபிஷேகம் பெற்றுவிட்டதாக நினைத்துக்கொள்" என உறுதிமொழிந்து வலக்கைநல்கி அப்பொழுதே சேனைத்தலைவரையழைத்து, "படையுடன் பாண்டிநாட்டிற்பொரஎழுக" என உத்தரவுகொடுத்தான். அவர்களும் அவ்வாறே சேனைகளுடன் கடல்கடந்தனர். சேனனும் அப்பாண்டியனுடன் அலங்கரிக்கப்பட்ட நாவாயொன்றிலேறி மேலக்கரைவந்து சேர்ந்தான்.

இரவுவந்ததும் சேனன் சேனைகள் மதுரைப்பதியை வளைந்துநின்று, கோட்டைகளிலுங் கோபுரங்களிலும் மாடகூடங்களிலும் களஞ்சியங்களிலும்தீமூட்டின. பற்றிய நெருப்பும் சடசடென்ற தொனியுடன் வானளாவிக்கொழுந்துவிட்டெரியத்தொடங்கிற்று. இதனை ஒற்றரால் அறிந்த அந்த வரகுணவர்மன், தம்பியோடு சில சைன்னியங்களை மாத்திரம் எல்லைப்புறத்தினிற்கச்செய்து சில படைகளுடன் மதுரைக்கு விரைந்து வந்து சேனன் சேனையைத்தாக்க ஆரம்பித்தான். இவ்விருபடைகளும் வெகுநேரஞ்சண்டைசெய்தன. முடிவில் பாண்டியன் சேனைகள் பிற்பட்டொழியச்சேனன் சேனையே ஜெயம்பெற்றது. போர்முகத்தில் நின்றுகொண்டிருந்த வரகுணவர்மனும் பட்ட படுகாயத்தால் அவ்விடம் விட்டோடி இரணஜென்னியால் யாண்டோசென்று இறந்துபோனான்.

பாண்டியன்படவே, கூடலம்பதி நாதனில்லாமல் தத்தளிக்கலாயது. சம்பத்தெல்லாம் நிறைந்திருந்த அந்த மதுரை அன்றைத்தினம் சாம்பர்க்கிடங்கை யொத்துக்கிடந்தது. இந்த மத்தியில் சேனன் சேனைகள் கொள்ளையடிக்கத் தலைப்பட்டன. தீக்கிரையாகாது கிடந்த பொருள்களையெல்லாம்

தீயோர் வவ்விக்கொண்டனர் எங்குங்கூக்குரல், எங்குமழு குரல், எங்குங்கொலை, எங்குங்கொள்ளை, இவ்வாறு மதுரை தனது அழகனைத்தையு மிழக்கலாயது.

அப்பால் சேனன், தனது முன்னோர் செல்வங்களை யெல்லாங் கொள்ளைகொடுத்த மனக்கொதிப்பு நீங்கப்பாண் டியன் பொக்கிஷங்களையும் சுவர்ணரெத்தினுபரணங்களையும் கைப்பற்றிக்கொண்டான் "அழக்கொண்ட வெல்லாமழப் போ"மென்பது பொய்க்குமா. பிறகந்த இலங்கைவேந்தன் அபயங்கொடுத்த போலிப்பாண்டியனை அரியணையிலேற்றிச் சேனையுடன் தெண்ணீர்க்கடல் கடந்து இலங்கையிற்பகுந் தான். சேனன் செல்லவே, நடந்ததை அறிந்த வீரநாராயண சடையன் சரேலெனச்சேனையுடன் எல்லைப்புறத்தினின்றும் விரைந்துவந்து சேனனுற் சிங்காதனத்திலேற்றப் பட்டிருந்த போலிப்பாண்டியனைத் தேவலோகத்திலேற்றுவித்து, அரசுரி மையைக் கைக்கொண்டான். இதற்குக் குடிகளும் உத்தியோ கஸ்தர்களுமிவனுக்குதவியாயிருந்தனர். இப்பாண்டியனுல் வெல்லப்பட்டவன், உக்கிரன்என்ற ஓர் அரசன்என்றும், அவ னே சேனனுல் அரியணையில் அமர்த்தப்பட்டவன் எனவும், ஊகிக்கஇடமுண்டு. அந்த வஞ்சக பாண்டியனுக்கே மறு பெயர் உக்கிரன் என்றிருக்கலாம் என்பாருமுளர்.

இவ்வரகுணவர்மன் சரித்திரம் அதிகஆசை அதிகதரித் திரம் என்றபழமொழிக்கோர் உதாரணமாயிருக்கிறது. இவன் கி. பி. 862ல் பட்டத்திற்குவந்து ஒன்பது வருடம்மட்டும் அரசாண்டிருக்கிறுன். இவன் அளவுகடந்த ஆசையுள்ள வனுயிருந்ததினுல் வாழ்க்கைநாளில் முக்காற்பங்களவும் துக்

கத்தையே யனுபவித்திருக்கிறான். இவனுடையமுடிவும் விசனிக்கத்தகதே. இவன் ஆரத்தீர ஆலோசிக்கும் அறிவாளி அல்லன். அறிவாளிகளின் சொற்கேட்டு நடந்தவனாகவுந்தெரிகின்றிலன். முதலையையொத்தவிடாப் பிடியையுடைய மூர்க்கன் இவன்காலத்தில் மதுரையிலுள்ள பழமையான அழகெல்லாம் அழியநேர்ந்தன. இவ்விஷயம் எவர்மனத்தையும் வருத்தாமலிராது. இவ்வரகுணவர்மனுக்கு மாறன் சடையனென்ற பட்டப்பெயருமுண்டு.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கோவையாரிலும், பட்டினத்தடிகள் திருவிடமருதூர் மும்மணிக்கோவையிலும், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலுங்கூறிய வரகுணன் இவனேயாகலாம் எனச்சிலரும், இப்பாண்டியனுடைய பாட்டனாகிய வரகுணமகாராஜனாகலாம் எனச்சிலருங்கூறுவர்.

25-வது

பாண்டியன் பராந்தக வீரநாராயண சடையன்.

இப்பாண்டியன் தன் அண்ணனுக்குப்பிறகு பட்டம் பெற்றான். பெற்றதும் தன்னையும், தன்முன்னோனையும் திருப்புறம்பியத்திற் புறங்காட்டியோடச்செய்த அபராசிதன்மேல் அவனுக்கிருந்த கோபமளவில்லை. ஆதலால் அவன் நால்வகைப் படைகளையும் பெருக்கிக்கொண்டு சென்று அந்தப்பகை

வேந்தனைப் போருக்கழைத்தான். அவ்விருவரும் சினந்து சிலநாள் அமராடினர். முடிவில் பாண்டியனே வெற்றிபெற்றிருக்கவேண்டுமென்று நினைக்கப்படுகின்றான். சோழநாட்டிற் பல பாகங்களும் இவனுக்குட்பட்டிருந்தன. என்றாலும், அத்தேயத்தில் இடவை என்னும் ஊரிலிருந்த ஓர் குறும்பன், தனக்கடங்காது சில குறும்புகள் செய்துகொண்டிருக்க, அவனை அடக்கவேண்டி, பராந்தகப்பள்ளிவேலன் என்ற நாகம்புல்லன் என்னும் தலைவனைத் (இவனை வேட்டுவர் குலத்தவனென்று சொல்வாருமுண்டு) துணையாகக்கொண்டு இடவையிற்சென்று பொருது வென்று அவ்விடத்தையுந் தனதாக்கிக்கொண்டனன்.

இவன், ஒரு சேரன் மகளாகிய வானவன் மாதேவி அல்லது சேரவன்மாதேவி என்னும் பெயருடையாளை விவாகஞ் செய்திருந்ததால், சேரனோடு இப்பாண்டியனுக்கு விரோதம் ஏற்படவில்லை. சேரன் தன்மகளை இப்பாண்டியனுக்கு நல்கி சீதனமாகத் தனக்குட்பட்டிருந்த திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் தாலூகாவிலுள்ள ஓர் ஊர்க்கு சேரவன் மாதேவி (இப்பொழுது இவ்வூரின் பெயர் சேரன்மாதேவி என்று வழங்குகிறது) எனப் பெயர்கொடுத்து நல்கினன்.

இப்பாண்டியன் உபாசித்த தெய்வத்தின் பெயர் "பராந்தகி" என்னும் அம்பிகையாதலால் இவனை உலகத்தார் பராந்தக வீரநாராயண பாண்டியன் என்றழைத்தனரென்பர். இவனுடைகையிலிருந்த இடங்கள் தொண்டைநாட்டில் தென்பாகமும், சோளநாடும், பாண்டியநாடும், சேரநாட்டில் மிகச் சிறிய பாகமுமேயாம். இவன் தன் மானத்தையும், குலத்தின் மேன்

மையையும் ஒருவாறு காப்பாற்றினன். தன்னாட்டைக்கொள்ளைகொண்ட இலங்கை வேந்தனை வெல்ல நினையாததால் தன் நிலைமையை நன்கறிந்தே நடந்திருக்கின்றான். பொதுவாய் இவன் நல்ல புத்திசாலி என்பதற்கையமில்லை

இவன்காலம் (கி. பி. 871 முதல் 885)வரையெனக்கணக்கிடப்பட்டிருக்கிறது. சின்னமனூர் சிறிய செப்பேட்டையும் சென்னைப் பொருட்காட்சிச் சாலைச் சாஸனத்தையும் வரைவித்தவன் இவனேயாவன்.

26-வது

பாண்டியன் இராஜ சிம்மன் 3-வது.

இவன், பாண்டியன் வீரநாராயண சடையனுக்கு வானவன் மாதேவியினிடம் பிறந்தவன். சேர பாண்டிய குலத்துதித்த காரணத்தால் சூர்ய சந்திர வம்சத்துக்கோர் தீபம் போன்றவன் என்று புகழப்பட்டிருக்கின்றான்.

இந்த இராஜ சிம்மன் காலமாகிய (கி. பி. 907ல்) சோளநாட்டை ஆண்டிருந்தவன் ஆதித்தன் மகனாகிய முதலாவது பராந்தக சோழனவான். இவன், படைப் பெருக்கமும், பணப் பெருக்கமும், மிகுதியும் உள்ளவனுயிருந்ததினுல் பாண்டியன் இராஜசிம்மன்மேல் படையெடுக்க எத்தனப்பட்

டான். இஃதறிந்த பாண்டியனும் தன்னுடைய சேனைகளையும் சன்னத்தஞ்செய்துகொண்டு சோழனை வலியச் சென்று தாக்கினன். இந்த முதற்போரில் இராஜசிம்மன் நால்வகைச் சேனைகளையுமிழந்து மதுரையில் விரைந்து மீண்டான். சோழனே பாண்டியனை அடியோடு தொலைக்கத் துணிந்து, படையோடு தெற்கே நோக்கித் திரும்பினன். இதையறிந்ததும் பாண்டியன், அக்காலத்தில் இலங்கையில் அரசு வீற்றிருந்த 5-ஆம் காசிபனைத் துணைவேண்ட, அவனும் ஆயிரக்கணக்கான படைவீரர்களைத் தக்க தலைவருடன் அனுப்பினன். வந்த இலங்கைப் படைகளையும் தன்னுடைய சேனைகளையும் ஏக காலத்திற்கண்ட இராஜசிம்மன் களிப்பென்னும் கடலில் மூழ்கித் தன்னை மறந்த செருக்குடையவனாய் "இனிச் சோழன் பராந்தகனை அந்தகனூருக்கு அனுப்புவதுமல்லாமல் இப்பாரிட முழுவதையுமே யான் அரசியற்றுவன். பாருங்கள்" என்னப் பலரறிய உறுதிமொழி கூறினன். பிறகு இரண்டு படைகளையும் தானே தலைவருடன் நடத்திக்கொண்டு சோழனை எதிர்த்தான். இந்த இரண்டாவது சண்டையிலும் பாண்டியன் சேனைகள் பலபடச்சிதறி இறந்தும், மறைந்தும் ஒழிவதாயின. இப்படியாகவே இராஜசிம்மன் எஞ்சியிருந்த சில வீரருடன் மதுரையை நோக்கிவழிக்கொண்டான்.

சிங்களத்தலைவனே சிலகாலம் போரை நடத்தினன். காலக்கொடுமையால் அவனும் பின்னடைந்து தன் அரசன் உத்திரவின்படி இலங்கைக்குப் போய் விட்டான். பராந்தகனுக்குப் பாண்டியன் மேலுள்ள கோபத்தைப் பார்க்கிலும்

அவனுக்குதவியாக வந்த ஈழத்திறைவன்மேல் எண்மடங்கு சினம் அதிகமாயிருந்தது. இச்சினத்தைத்தீர்க்கும் பொருட்டே இச்சோழன் கி. பி. 943ல் அலைகடலன்ன படைகளைத் திரட்டிக்கொண்டு தெற்கே நோக்கிப் புறப்பட்டான். அதனை ஒற்றராலறிந்த பாண்டியன் தன் மனைவிமக்களைக் கேரளநாட்டிற் கனுப்பி விட்டுசில தலைவர் வசமாகத் தலைநகராகிய மதுரையைக்காக்கும்படி விட்டுவிட்டுக் கிரீடம் முதலான விலையுயர்ந்த சில அணிகலங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு படவேறி ஈழநாட்டின் 'மகதித்த' என்னுமிடத்தில் வந்தடைந்தான். இவ்வாறு வந்தடைந்தவனைக் காசிபவேந்தன் பல விருதுகளுடன் எதிர் சென்றழைத்து வந்து உபசரித்து விருந்து நடத்தினன். அடைக்கலம் புகுந்த அம்மன்னனை அவ்விலங்கை வேந்தன் கோட்டைப்புறத்தில் ஓர் மாளிகையில் இருக்கச்செய்து பலிஷ்டரான பல வீரர்களையும் காத்து நிற்கும்படி ஏற்பாடுசெய்தான். ஒருநாள் பாண்டியன், பராந்தக சோழன், தன்னைப்பிடிக்கப் பாண்டியநாட்டின்மேல் தண்டெடுத்து வருதலைத்தெரிவித்துத் தனக்கு மீண்டும் படையுதவ வேண்டுமெனக்கேட்டுக்கொண்டான். இலங்கையர்கோனும் அவ்வாறே செய்வதாகச்சொல்லி அதற்குரிய பிரயத்தனங்களும் செய்து கொண்டிருந்தான்.

இங்கு இவ்வாறாகச் சோழன் பராந்தகன் சேனையுடன் மதுரையில் வந்து கோட்டையைச்சூழ்ந்தான். அங்கிருந்த படைத்தலைவர்கள் அவனை எதிர்த்தார்கள். சண்டை சில நேரம் நடந்தது. முடிவில் பாண்டியர் கூட்டம் ஓட்டமெடுத்தது. சோழன், இராஜசிம்மன் அங்கில்லாமையை அறிந்து

தலைநகரையும் அந்நாட்டையும் தன் வசப்படுத்திப்புலிக்கொடி யையும் ஆங்கு நிறுவினன். இதனால் இச்சோழன் மதுரை கொண்ட பராந்தகன் என்றழைக்கப்பட்டான்.

இதோடமையாத அச்சோழன் ஈழத்தையும் பாழாக்க நினைத்துப் படைகளுடன் படகேறி இலங்கையிற் சென்றான். இதையறிந்த சிங்களவேந்தனும் பாண்டியனும், அப்பராந்தக சோழனின் படைப்பெருக்கத்தையும், பராக்கிரமச்செயல்களை யுங் கேட்டுநடுநடுங்கி அங்கிருந்து நாவா யொன்றிலேறி அடுத் தவோர் தீவிற்சென்றுவிட்டனர். வேந்தனில்லாத அந் நாட்டை ஒன்றும் செய்ய மனமில்லாத சோழவேந்தன் கையிற் கிடைத்த விலையேறப்பெற்ற பொருள்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு மேலக்கரையை அடுத்துச் சோழநாட்டை நோக்கித்திரும்பினான். அது முதலிவனுக்கு "மதுரையும் ஈழ முங் கொண்ட பராந்தகசோழன்" எனவும், இலங்கையை இராமனைப்போல் ஜெயித்ததால் "சங்கிராமராகவன்" என வும் பெயர்கள் வழங்கலாயின.

சோழன் சென்றுவிட்டதைக் கேட்டதும், காசிபவேந் தன் பாண்டியனுடன் இலங்கைக்குவந்தான். சிலநாள் செல்ல, பாண்டியன் அந்த ஈழத்து வேந்தனால் தனக்கு யாதொரு உதவியும் செய்யமுடியாதெனத்தெரிந்து தன்னிட மிருந்த முடிமுதலான அணிகளையெல்லாம் அவன் வசம் அடைக்கலமாகக் கொடுத்துவிட்டு, தன்னாட்டை நோக்கித திரும்பி மேலைக்கடலை கடந்தான். படகு மேலைத்துறைமுகத் தை யடுக்கையில் பாண்டிய நாடும் தலைநகரும் சோழனுக்குட் பட்டிருத்தலைக் கேள்விப்பட்டு, அங்கிறங்காது கடற்கரை

போரத்தின் வழியாகவே சேரநாடடைந்து, தனது மாமனு கிய சேரனிருக்கும் தலை நகரிற் புக்கான். வந்தமருமகனை மாமனும் உபசரித்தான். பாண்டியன் தனது மனைவிமக்களைக் கண்டு களித்தான். என்றாலும், நாடிழந்ததுக்கம் அவனு டைய மனத்தை அறுத்துக்கொண்டேயிருந்தது.

பாண்டியனைப் பரிபாலிப்பதினால் "பராந்தகன் நம்மீதி லும் படையெடுப்பானோ" என்ற அச்சமும் அச்சேரனுக்கிருந் தது. அதனால் இவன் இரவில் தூக்க மற்றிருந்தனன், சிலவேளை மயங்கிக் கண்ணயர்ந்தாலும், பராந்தகன் படை யுடன் வருவதுபோலவும் சொப்பனங்கண்டு அலறுவான், இப்படியிருக்கையில் அவனுக்கு அக்கனவே நனவாக மாறி விட்டது. பராந்தகன், பாண்டியன் சேரனாற் காப்பாற்றப் பட்டிருத்தலைக் கேள்விப்பட்டுச் சீறிச் சினந்து சேனையுடன் சேரநாட்டை நோக்கிப்புறப்பட்டான். இவனிப்படி வருதலை யறிந்த சேரன், நடுநடுங்கிப்பாண்டியனை, தன் நாட்டுக்குக் கீழ் பாலும் பாண்டியநாட்டுக்கு மேல்பாலுமாயிருக்கிற மலையாசல த்தின் நடுப்பாகமாயும் ஜன சஞ்சாரமில்லாததாயுமிருக்கும் பொதிகையிற் சென்று வசிக்கும்படி பல வேலையாட்கள் உணவுப்பொருள் சுமந்து தொடர்ந்து செல்ல அனுப்பிவிட் டனன். படையுடன் சேரதேசம் சென்றபராந்தகன், பாண் டியன் அங்கில்லாமையைத்தெரிந்து சேரவேந்தனைத்தனக்குட் பட்டவனாக்கி, பாண்டியனுக்கு யாதொரு உதவியுஞ் செய்யக் கூடாதெனத் திட்டஞ்செய்து புனனாட்டின்கண்மீண்டனன்.

காடு சென்ற ராஜசிம்மன், பாணதீர்த்த அருவிக்கு மேல் பாலுள்ள அகத்தியகூடத்திற் சூரிய கிரணமே கண்டறி யாத அடர்ந்த சோலைக்குள் சதாபெய்துகொண்டிருக்கும் மழையாலும் பனியாலும் மிகவும் வருந்திக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான். இப்படியிருக்கும் இவனுக்குச் சோ

ராஜன் அதிரகசியமாய் உண்டி உடை முதலானவைகளை அனுப்பித்துக்கொண்டிருந்தான்போலும். ஹிமசேது பரியந்தம் அடிப்படுத்தித் தனிச்செங்கோல் செலுத்திவந்த அதிகம்பீரமான சந்திரகுலத்துத்தராதிபரின் சந்ததியாய் உதித்திருந்தும், இந்த ராஜசிம்மன், தனது மூதாதையருக்குள்ள கௌரவங்களில் ஒருசிறிதும் பெருத அதிர்ஷ்டஹீனனாய், தனது குலப்பெருமையோடு தமிழ்நாடும், தலைநகரும் தலைமேற்றாங்குங் கிரீடமுமாகிய எல்லாம் அடியோடுபோக இழந்து, தண்ணென்று குளிர்ந்து, கல்லென்ற சப்தம் ஓயாத, அல்லென்ற சோலைசூழ்ந்த நடுமலைக்கண் வதிவதாயினன். என்னே! மனிதர்வாழ்க்கை. "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்ற முதுமொழிக்கு இவனேயன்றி வேறெவர் இலக்காவர்.

இவன் செய்தி இவ்வாறாகச் சோழன் பராந்தகன், அந்தகனூர் புகுந்தான். அவன் இறக்கும் பொழுது தன் மக்களாகிய, இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்ஜெயன், ஆதித்தன், இவர்களை அருகிலழைத்து, "என்னால் விரட்டப்பட்ட பாண்டியனையும், அவன் சந்ததியாரையும் எவ்விதத்தும் அரசு வீற்றிராதபடி செய்வதே நீவிர் எனக்குச் செய்யும் கடமையாவது" என. அவர்களும் அவ்வாறே செய்வதாயுறுதி கூறினர். அக்காலமுதல் இவர்கள் பாண்டியன் குலத்தவரை எங்குக்கண்டாலும் தலைகொய்து கொணரும்படி பலவீரர்களைப் பலவிடங்களிலும் போக்கினர். அப்படிக் கொணரவெளிப்பட்ட வீரரும் மேற்புகனற மன்னவர் குலத்தைத் தேடித்திரிந்து கொண்டிருந்தனர். இவ்விஷயமெல்லாம் சோனால் அறிவிக்கப்பட்ட பாண்டியன் இராஜசிம்மன், மனந்தளர்ந்து தத்தளித்தான். என்றாலும் அவன் தன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தன்னிடத்திலுள்ள சில வேலைக்காரர்களை வேஷம் மாறுடச்செய்து மதுரைப் பக்கத்தி

லிருக்கும் தனது பழங்குடிகளிற் பிரியமுள்ள சில பிரபுக்களை யும் உத்தியோகஸ்தர்களையும் அதி இரகசியமாய் அழைத்து வரச்சொல்ல அவர்களும் அவ்வாறு செய்தனர். அழைக்கப் பட்டவர்களும் அம்மலைக்கண் வந்து, அரசனுடைய பரிதவிக் கும் நிலைமையைக்கண்டு பெரிதும் வருந்திக் கண்ணீர் சொரிந் தனர். பிறகு பாண்டியன் அவர்களை நோக்கி, "அன்பர்களே! என் கதி இவ்வாருனதற்கு என் விதியே காரணம் அன்றி வேறில்லை. இனி நடக்கவேண்டியதைப்பற்றித்தான் யோசிக்க வேண்டும். "சோழன்பராந்தகன் மக்கள் என்னைக் கொல் லவே துணிந்திருக்கின்றனர்" என்று கேள்விப்பட்டேன். அவ ரெண்ணம் நிறைவேருதபடி என்னை யான் காத்துக்கொள்ள வேண்டியதவசியமாய்விட்டது. அதனல் நானிருக்கும் இம் மலைக்குள் ஓர் கோட்டை கட்டத் தீர்மானித்திருக்கின்றேன். அதற்குவேண்டும் உதவிகளெல்லாம் நீங்கள் செய்தல் வேண் டும்" என்று கேட்டுக்கொள்ள, அவர்களும் அவ்வாறே செய் வதாய்ச் சொல்லிவிட்டுத் தமதிடம் சார்ந்து பல கல்வேலைக் காரர்களை அனுப்பினர். சேரனும் பல பணிமக்களை அனுப் பினன். இவ்வேலைக்காரர்களை வைத்துக்கொண்டே பாண்டி யன், பாணதீர்த்தத்துக்கு மேற்குப்பக்கமாக ஓர் கற்கோட் டையைக் கட்டிமுடித்தான்.

இக்கோட்டை அவ்வளவுவிஸ்தீரணமுள்ளதல்ல. என் ருலும், மேட்டுப்பாங்கில் பெரிய பெரிய மலை பிளந்தகற்களாற் கட்டப்பட்டிருக்கின்றதென்றும், இவ்வரணுக்குள் கிணறும், சிறு குளமும், கட்டிட முதலானவைகளும் இருந்து அழிவுற் றனவாகத் தெரிகின்றன எனவும், சொல்லுகின்றனர். மேலும் இக்கோட்டைக்குக் கிழக்கிருந்து செல்லும் கணவாய்கள் பல. அவ்விடங்களிலும், செல்லும் நெறிசுருங்கக் கற்களால் வாயில் கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கணவாய்களாவன:— சொரிமுத்தய்யன் கோவில், பாபவிநாசம், ஆரியன்காவு, கொ

ளத்துபுளி, அச்சன் கோவில். இக் கணவாய்களை படுத்துச் சாஸ்தா என்னும் கடவுள், பரிவார தேவதைகளுடன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர் இக் கணவாய்களில் சில கட்டிடமுள்ளதாயிருத்தலை இப்பவுங்காணலாம் என்பர். இவையெல்லாம் செய்வித்தவன் இந்த இராஜசிம்ம பாண்டியனாகவேயிருக்க வேண்டுமென்று தெரிகிறது. மேற் கூறிப்போந்த கோட்டைக்குப் பாண்டியன் கோட்டை யெனறும் அங்குள்ள மலைக்குக் கோட்டைமலை எனவும் இப்பொழுதும பெயர்கள் வழங்குகின்றன. இவையன்றி ஜெமீன் சிங்கம்பட்டியைச்சேர்ந்த நடுமலையில், அதாவது, குடமாடியென்ற இடத்துக்கு ஆறு மைல் தூரத்தில் செங்கல் சுண்ணாம்பினாற் கட்டப்பட்ட கோட்டையொன்றிருக்கின்றது. இது பிற்காலத்து அரசர்களாற் கட்டப்பட்டிருக்கவேண்டும். இதன் பெயர் " பிள்ளைக்கோட்டை " என்பர்.

இராஜசிம்மன், தன்னாற் கட்டி முடிக்கப்பட்ட கோட்டைக்குள்ளேயேயிருந்து தன்னுடைய காலத்தைக் கழித்து வரலானான். இவனுடன் பாண்டியராஜ வம்சத்தின் கௌரவமெல்லாம் ஒழிந்தன. இவன் குடும்பம் சோழனால் பரிபாலிக்கப்பட்டு வந்ததாக நினைக்கப்படுகிறது.

27-வது

சடையன் பராந்தக பாண்டியன்.

இப்பாண்டியன், பராந்தக சோழனால் விரட்டப்பட்டுப் பொதிகையிற் கோட்டை கட்டிக்கொண்டு வசித்துவந்த மூன்றாவது இராஜசிம்ம பாண்டியன் சந்ததி ஆக ஒருவாறு துணியப்படுகின்றான். இவனுடைய தலைநகர் இன்னதெனத் தெ

ளியமுடியவில்லை. இவனுடைய மெய்க்கீர்த்தி "தென் மதுராபுரித்தோன்றி" என, இவன் அங்குப் பிறந்திருத்தலை மாத்திரம் விளக்குகின்றதேயன்றி வேறில்லை. இராஜசிம்ம பாண்டியன், சோழன் பராந்தகனுக்கஞ்சி தனது மனைவி மக்களை சேரநாட்டிலுள்ள தனது மைத்துனனிருப்பிடத்துக்கு அனுப்பித்திருந்தானல்லவா? அம்மக்களில் இவன் ஒருவனாயிருக்கலாம் எனத்தோன்றுகின்றது.

இப்பராந்தக பாண்டியன், சோழன் பராந்தகன் காலத்துக்கும் தனது பிதாவின் காலத்துக்கும் பிறகு தனது மாமனாகிய சேரன் உதவியாலோ வேறு எவருடைய துணையாலோ படைபலம் கொண்டவனாய் யௌவனம் வாய்த்தபொழுதே வெளிப்பட்டு ஏறத்தாழ குட்டநாடு முதல் கன்னித்துறை வரையிலும் இதற்குச்சிறிது வடபாலிலும் உள்ள நாடுகளையெல்லாம் வென்றிருக்கின்றான்.

முதற்கண் இவன் தொடுத்த கன்னிப்போரில் ஓர் சேரனை வென்று அவனுக்குரிய விழிஞம் என்னும் இடத்தைக் கைக்கொண்டிருக்கின்றான். அப்பால் காந்தளூர்ச் சாலையிலிருந்த படவுகளை எல்லாம் பொடிப் பொடியாக நொறுக்கி அவ்விடங்களையும் தன்னடிப்படுத்தியிருக்கின்றான். இப்படி இவன் வென்றிமாலை சூடியதைத்தெரிந்த "கூபகம்" என்னும் இடத்திலிருப்பவனான ஓர் சிற்றரசன் தனது மகளை இவனுக்குத்தாரைவார்க்க இவனும் அவளுடன் இல்லறத்தைச் செவ்வனே நடத்திவந்திருக்கின்றான்.

அக்காலங்களில் இப்பாண்டியன் வேதங்களிற் கைதேர்ந்த பிராம்மணர்கள் கூறியபடி பல தான தருமங்களைச் செய்திருக்கின்றான். திருவனந்தபுரத்தில் ஆதிசேஷயனத்தில் அறிதுயிலமர்ந்தருளும் பெருமாளுக்கு இரத்தினாபரணங்களால்

அலங்கரிக்கப்பட்ட சுவர்ணதீபங்கள் பத்து அளித்திருக்கின்ருன். தென்னவர் குலதெய்வமாகிய கன்னியாகுமரிப் பகவதியாருக்கு நடந்தேறிவரும் தைப்பூசத்திருநாளின் பிற்றைநாள் வந்திருந்த வித்வான்களுக்கெல்லாம் தக்கபடி பரிசுகள் நல்கியிருக்கின்ருன். "ஒவ்வொரு வருடத்திலும் இவனிவ்வாறு செய்துவந்திருக்கவேண்டு"மென்று ஊகிக்கலாகும். இவையன்றி மேற்படி பகவதியாருக்குத் தான் பிறந்தநாளாகிய தைப்பூசத்தன்று விசேஷ பூஜைகள் நடைபெறவும் மற்றைய நாட்களில் அமுதுபடி, சந்தனம் கற்பூரம் முதலான பணிவிடைகள் நடந்தேறிவரவுமாக "புறத்தாயநாடு" என்ற விஸ்தாரமான விளைபுலங்களும், தோப்புமுதலானவைகளும் அடங்கிய பூபாகத்தை இறையிலி தேவதானமாக விட்டுக்கொடுத்திருக்கின்ருன்.

பிற்காலத்திலிவன், தெலுங்க வீமன்குளம் என்ற நகரையும், தென்கலிங்கநாட்டையும் வென்றிருக்கின்ருனென இவனுடைய மெய்க்கீர்த்தி கூறுகின்றது. எம்மட்டும் உண்மையோ. தெரியவில்லை.

இவன் ஆட்சி மெச்சத்தக்கதாகவே இருக்கிறது. ஆலயங்களெல்லாம் நன்ருய்ப் பரிபாலித்துவரப்பட்டிருக்கின்றன. நிறுத்தல் அளத்தல் முதலான கருவிகளுக்கு மீன இலச்சினை பொருவித்தல் செய்யப்பட்டிருக்கின்றது. வேதங்களையும் அச்சமயங்களையும் இவன் நன்ருய் ஆதரித்திருக்கின்ருன். மலைபாசலமாகிய பொதிகமலைச் சிகரத்தில் தனது மீனக்கொடியை வரைவித்திருக்கின்ருன். இவன் காலம் (கி. பி.) பத்தாம் நூற்ருண்டின் கடைசியும் பதினென்ரும் நூற்ருண்டின் முதலுமாயிருக்கவேண்டும். இவனுடைய சாஸனங்கள் கன்னியாகுமரியிலிருக்கின்றன. மகா-ள-ள-ஸ்ரீ கோபிநாதருவ் எம். ஏ. அவர்களும் இவனைப்பற்றி எழுதியிருக்கின்ருர்கள்.

சடையன் பராந்தக பாண்டியனின் சாஸனம்.

ஸ்வஸ்திஸ்ரீ திருவளரச்செயம் [வ X]ளரத் தென்னவர்
தம் குலம்[வ X]ளரவரு மறை நான்கவை வளர வனைத்துல
குந் துயர் நீக்கத் தென்மதுராபுரி தோன்றித் தேவேந்திரனோ
டினிதிருந்த மன்னர்பிரான் வ[ழு]தியர்கோன் [வடிம்]பலம்
பநின்றருளி மால்கடலை எறிந்தருளி மலையத்துக்கயல் பொறித்
துச் சேரலனைச் செருவில் வென்று[தி]றைகொண்டு வாகை
சூடிக் கூபகர்கோன் மகட்குடுப்பக்குல விழிருங்கொண்டு
கன்னி[ப்]போர்செய்தருளிங்காந்தளூர்ச்சாலைங்கலமறுத்[த]
மன்னு புகழ் மறையவர்தம்மணியம்பலத்துளினிதிருந்து ஆயி
ரத்தெண்மர் அவிரோதம் பணிப்பணியால் ம[றைபோர்]ந்
துக் கல்நாட்டிப் பண்டுள்ள பேர்தவி[ர்த்]துநிறுப்பனவுமளப்
பனவும் கயலெழுதி அனந்தபுரத்தெம்மாற்கு நிலவியபொன்
மணிவிளக்கு நின்றெரியப்பத்தமை[த்து]ஆ]வ்கமைத்த தாய
நல்லூர் அடதென்னாட்டரையனென அறிவகையால் அறிந்
துணர்ந்து தென்னவர் தங்குலதெய்வம் தென்குமரிகன்......
திருநாள் விழாவதனிற்றை- தப் பூசப்பிற்றைநான்று வந்திருந்
தாரெல்லார்க்கும்மாற்றுமேத தியாகம் இட அறத்தா[ல் விளங்
கிய ஆய்ந்த கேள்விப்புறத்தாயநாடு பூமகட்களி[த்து]த்
தெலிங்கவீ(ய்) மங்குளங்கொண்டு தென்கலிங்கமடிப்படுத்து
திசை அனைத்துமுடனாண்ட ஸ்ரீ பராந்தக தேவற்கு யாண்டு
கூவது ....

முற்பட்ட பாண்டியர் சரித்திரம் முற்றிற்று.

1926

ஆவணக்காப்பக
147433
சென்னை-600 008

V21
(478)

ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ், அம்பாசமுத்திரம்.

உ

பாண்டியராஜ வம்ச சரித்திரம்.

முதற்பகுதி ...	...	0	10	0
இரண்டாம்பகுதி	...	0	10	0
மூன்றாம்பகுதி ...	...	0	10	0
எம்மண்டலமுங்கொண்ட குலசேகரபாண்டியன் அல்லது தந்தாபஹரணம். (ஓர் அருமையான சரித்திரக்கதை.)		0	12	0
மஹாவீர விஜயம்	...	0	5	0
புத்தபுராணம் (செய்யுள்)	...	0	8	0
இரக்ஷகர் (கிறிஸ்து) சரித்திரம்.		0	4	0

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன்கொடுக்கப்படும்.

R. அரிகரமையர்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
தீர்த்தபதி ஹைஸ்கூல்,
அம்பாசமுத்திரம்.